Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

34°c 27°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 176 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 7, செவ்வாய் 21.05.2013

**உலகம்**



பக். 06

போராளிகளுக்கு எதிராக நடவடிக்கை தொடரும் நைஜீரிய இராணுவத் தளபதி தெரிவிப்பு

**இந்தியா**



பக். 07

எல்லையில் அமைதி குலைந்தால் உறவு பாதிக்கும் சீனாவை எச்சரிக்கிறது இந்தியா

**விளையாட்டு**



பக். 22

வலைப் பந்தாட்டச் சுற்றுத் தொடரில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியன்

**குருபெயர்ச்சி**



உங்களுக்கு எப்படி? விரிவான, தெளிவான ஒரு வருடமுழு பலன்கள் (2013 -2014) (20 ஆம் பக்கத்தில்)

# முல்லைத்தீவில் வாக்காளர் பட்டியலை கோரும் இராணுவ புலனாய்வாளர்கள்

முல்லைத்தீவு,மே 21
2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலை தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள 2012 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பட்டியல் முல்லைத்தீவு மாவட்டக் கிராம சேவகர்களிடம் இருந்து படைப் புலனாய்வாளர்கள் பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நாடளாவிய ரீதியில் 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. இதற்கான 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் ஒவ்வொரு கிராம சேவையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரக் கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் நகரப் பகுதிக் கிராம சேவகர் பிரிவுகளில் இவ்வாறு வழங்கப்பட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியலை இராணுவ முகாம்களில் இருந்து வந்து தம்மைப் புலனாய்வாளர்கள் என அறிமுகப் படுத்துபவர்கள் பெற்றுச்

தொடர்ச்சி: பக்கம் 24

# இன்று வேலை நிறுத்தம்

## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக 700 தொழிற்சங்கங்கள் களத்தில்

கொழும்பு, மே 21
மின்கட்டண உயர்வை வாபஸ் பெறுமாறு அரசைக் கடுமையாக வலியுறுத்தி இன்று நாடளாவிய ரீதியில் இடம்பெறும் மாபெரும் தொழிற்சங்கப் போராட்டத்தில் 700 தொழிற்சங்கங்கள் பங்கேற்பதுடன், நாடு முழுவதும் அரச எதிர்ப்புப் பேரணிகளும், பொதுக்கூட்டங்களும் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில், பொது எதிர்க்கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் இடம்பெறும் பிரதான பேரணி இரத்மலானை வெலிக்கடையில் இன்று மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகி கல்கிஸை வரை செல்லும். அத்துடன், இன்று விஸ்வரூபமெடுக்கும் இந்தப் போராட்டம் நாளைமுதல் புதிய பரிமாணத்துடன் நாடு முழுவதும் தொடர்ந்து வெடித்துக்கொண்டே இருக்கும் என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

> இன்று விஸ்வரூபமெடுக்கும் இந்தப் போராட்டம் நாளை முதல் புதிய பரிமாணத்துடன் நாடுமுழுவதும் தொடர்ந்து வெடித்துக்கொண்டே இருக்கும் என்று தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை.

தொழிற்சங்கங்களின் இந்தப் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு ஆளுந்தரப்பு தொழிற்சங்கங்களும் ஆதரவு வழங்கத் தயாராக உள்ள நிலையில், அரச உயர்மட்டம் அவற்றுக்கு அச்சுறுத்தல் விடுக்கிறது என்றும் தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டின.

இந்த வேலை நிறுத்தத்துக்கு யாழ். பல்கலைக் கழக ஆசிரிய சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது. இன்று முற்பகல் 10 மணி முதல் ஒரு மணிநேர கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதுடன் பல்கலைக் கழக ஆசிரியர்களும் விரிவுரைகளை பகிஷ்கரிப்பர் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரிய சங்கத் தலைவர் ஆர். இராசகுமாரன் தெரிவித்தார். (த-4)

## வன்புணர்வுக் குற்றவாளிகள் கைதாகும் வரை போராட்டம்

### நெடுங்கேணி பொலிஸ் நிலையம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்பு



*வவுனியா தமிழ் பிரதேச சபை உறுப்பினர் க.பரமேஸ்வரன், ஸ்ரீ ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். உதயராஜா, மார்க்ஸிச லெனினிசக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். பிரதீபன், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சண் மாஸ்ரர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், விநோநோதராதலிங்கம், புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் பவான், ஐ.தே.க. உறுப்பினர் எஸ்.தேவகிருஷ்ணன் மற்றும் உதயன் பத்திரிகைக்கு எதிராக வவுனியாவில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் முன்னின்ற மாணிக்கம் ஜெகன் ஆகியோர் போராட்டத்தில்...*

வவுனியா,மே 21
நெடுங்கேணி சேனைப்புலவில் 7 வயது சிறுமி மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்புணர்வுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் வரை தொடர் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று சமூக நீதிக்கான வவுனியா மக்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நெடுங்கேணி சேனைப் புலவில் 7 வயதுச் சிறுமி கடந்த 13 ஆம் திகதி இனந்தெரியாதோரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். சம்பவம் இடம்பெற்று ஒருவாரம் கடக்கும் நிலையிலும் இந்தச் சம்ப

தொடர்ச்சி: பக்கம் 24

# நடுங்குகிறது அரசு

## வேலை நிறுத்தத்தில் ஈடுபடக்கூடாது என அரச ஊழியர்களுக்கு மிரட்டல்

கொழும்பு, மே 21
மின் கட்டண அதிகரிப்பை எதிர்த்து தொழிற்சங்கங்கள் நடத்தவுள்ள மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தால் அச்சமடைந்துள்ள அரசு, அதை முடக்குவதற்காக அரச சேவையாளர்கள் அனைவரும் இன்று சேவைக்கு கட்டாயமாக சமுகம் தரவேண்டும் என்று மிரட்டல் விடுத்துள்ளதாக அரச பணியாளர்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

வடக்கிலும் அரச ஊழியர்களை இவ்வாறு மிரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது.

இன்று பணிக்கு சமுகமளிக்காதவர்களின் விவரங்களை திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்தி தனக்கு அறிவிக்குமாறு வடமாகாண ஆளுநர் அரச திணைக்கள தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது. சகல அரச திணைக்களங்களுக்கும் ஆளுநர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் என அறிய முடிந்தது.

இது குறித்து யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, வேலை நிறுத்தத்தில் ஈடுபட

தொடர்ச்சி: பக்கம் 24

## புதிய மின் பட்டியல் இன்று கிடைக்கும்

கொழும்பு,மே 21
அதிகரிக்கப்பட்ட கட்டணத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட புதிய மின்சாரக் கட்டணப் பட்டியல் இன்று மின் பாவனையாளர்களுக்கு கிடைக்கும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து 30

தொடர்ச்சி: பக்கம் 24

# வடக்கில் பெரும் படைக் குறைப்பு

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு,மே 21
வடக்கில் நாம் பெரும் படைக்குறைப்பை மேற்கொண்டுள்ளோம் போர்க் காலத்தில் யாழ். மாவட்டத்தில் 16 இராணுவ முகாம்கள் இருந்தன. தற்போது 3 [illegible] என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரியா தெரிவித்துள்ளார்.

அரச வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 24



*காரைநகரில் இடம்பெறவுள்ள அஸ்வமேத மஹா யாகத்துக்காக இந்தியா, பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த குதிரைகள் நேற்று கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டன. (250)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத் தேர்தல் படைகளுக்கு அவமானமாம்

## அமைச்சர் சம்பிக்கவின் கண்டுபிடிப்பு

கொழும்பு,மே 21

அனைத்துலக அழுத்தங்களுக்கு அடிபணிந்து வடக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்துவது, தாய்நாட்டுக்காகத் தமது உயிர்களைக் கொடுத்த போர்வீரர்களை அவமானப்படுத்தும் செயல் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையின் போர்வீரர்களை நினைவு கூரும் நான்காவது ஆண்டு நினைவு நிகழ்வில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஈழப் போரில் வெற்றி பெற்றிருந்தால், இப்போது இலங்கைக்கு எதிராக அரசியல் நடத்தும் இந்திய அரசியல்வாதிகளான கருணாநிதியும், ஜெயலலிதாவும் உயிருடன் கூட இருந்திருக்க மாட்டார்கள்.



> அரசியல் வெற்றியாக அனைத்துலக அரங்கில் பாதுகாப்பதற்குச் சிங்களவர்கள் அனைவரும் துணை நிற்க வேண்டும்.

பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால், இலங்கையின் அரசியல்வாதிகளான சம்பந்தன், ரவூப் ஹக்கீம், அஸாத் சாலி போன்றோரும் உயிருடன் இருந்திருக்க முடியாது.

அரசு போரில் வெற்றி பெற்றிருக்காது போனால், தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள், அமிர்தலிங்கத்தின் நிலையையே அடைந்திருப்பர்.

கருணாநிதி, ஜெயலலிதா, சம்பந்தன் போன்றவர்கள் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வெளிநாடுகளின் உதவியுடன் மீண்டும் இலங்கையைக் கடந்த காலத்துக்கு கொண்டு செல்ல முனைகின்றனர்.

எனவே, போரில் பெற்ற வெற்றியை அரசியல் வெற்றியாக அனைத்துலக அரங்கில் பாதுகாப்பதற்குச் சிங்களவர்கள் அனைவரும் துணை நிற்க வேண்டும்.

அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கும் போது, அரசமைப்பில் திருத்தம் செய்யாது போனால் அது வரலாற்றுத் தவறாகி விடும்- என்றார். (த)

# மருதமடு புனர்வாழ்வு முகாம் வெகு விரைவில் மூடப்படும்

## போராளிகள் வேறு முகாம்களுக்கு

கொழும்பு,மே 21

மன்னார் மருதமடு புனர்வாழ்வு நிலையம் விரைவில் மூடப்படவுள்ளதாகவும், அங்குள்ள முன்னாள் போராளிகள் ஏனைய புனர்வாழ்வு நிலையங்களுக்கு மாற்றப்படவுள்ளனர் என்றும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.சதீஸ்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009 முடிவுக்குவந்த இறுதிக் கட்டப் போரின் போது சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் 12 ஆயிரத்து 163 பேரும் இலங்கையிலுள்ள 29 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வந்தனர். தற்போது 340 முன்னாள் போராளிகள் மாத்திரமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 100 பேர் மன்னார் மருதமடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர்.

> புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் 12 ஆயிரத்து 163 பேரும் இலங்கையிலுள்ள 29 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

புனர்வாழ்வு பெற்று வருபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையினாலும், புனர்வாழ்வின் போது வழங்கப்படும் தொழிற்பயிற்சிகள் என்பன ஏனைய 3 புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்டு உள்ளமையினாலும் மன்னார் மருதமடு புனர்வாழ்வு நிலையம் விரைவில் மூடப்பட்டவுள்ளது.

எனவே மன்னார் மருதமடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் வவுனியா பூந்தோட்டம் வெலிகந்த - சேனபுர மற்றும் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்கு மாற்றப்படவுள்ளனர்-என்றார். (த-5)

# இராஜதந்திர விலக்குரிமை நோர்வே தூதருக்கு மறுப்பு

## அதிர்ச்சியில் அந்நாட்டு அரசு

ஒஸ்லோ,மே 21

இராஜதந்திரிகளுக்கு உள்ள சிறப்பு விலக்குரிமையை மறுக்கும் வகையில் இலங்கை நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவு குறித்து நோர்வே அதிர்ச்சி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள நோர்வே தூதுவர் உள்ளிட்ட 11 நோர்வே அதிகாரிகளுக்கு எதிராக கலாநிதி குமார் ரூபசிங்க சமர்ப்பித்த நட்டஈட்டு வழக்கில், இராஜதந்திர விலக்குரிமை இருந்தாலும், இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியும் என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கூறியிருந்தது.

இது குறித்து நோர்வே ஊடகம் ஒன்றுக்கு கருத்து கருத்து வெளியிட்டுள்ள நோர்வே வெளி விவகார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் புரோட் அன்டெர்சன்,

இந்த விடயத்தில் நீதிமன்றத்தின் முடிவை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த வழக்கில் இலங்கை அரச சட்டவாளர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அறிக்கைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்த வழக்கில் இலங்கை வியன்னா உடன்பாட்டுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும் என்று நோர்வே அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# வன்னித் தேர்தலின் பின்பே புதிய கட்சிகளின் பதிவுகள்

## பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 21

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கான தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட பின்னரே புதிய கட்சி பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

யாழ். நகரில் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் அரசியல் கட்சிகளின் பதிவுக்கு விண்ணப்பம்கோரலை தேர்தல்கள் ஆணையாளர் மேற்கொள்வார். ஆனால் தேர்தல் வேட்பு மனுக்கள் அந்தக் காலப் பகுதியில் கோரப்படின் தேர்தல் முடிவடைந்து ஒரு மாத காலத்தின் பின்னரே புதிய அர சியல் கட்சிப்பதிவு கோர முடியும்.

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்கள் கோரப்பட்டுத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக ஒத்தி வைக்கப்பட்டது.

இதனால் குறித்த தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டு ஒரு மாத காலத்தின் பின்னரே புதிய கட்சிப் பதிவுக்காக தேர்தல்கள் ஆணையாளர் கோரிக்கை விடுக்க முடியும் – என்றார். (த-5)

> ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் அரசியல் கட்சிகளின் பதிவுக்கு விண்ணப்பம் கோரலை தேர்தல்கள் ஆணையாளர் மேற்கொள்வார்.



# தெதுரு ஓயாவில் நீராடிய சகோதரர்கள் நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு,மே 21

தெதுரு ஓயாவில் நண்பர்களுடன் நீராடச் சென்ற சகோதரர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

பல்லம, மகுரங்கடவல பகுதியை சேர்ந்த 18 மற்றும் 22 வயதுடைய சகோதரர்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மேற்படி இருவரும் நண்பர்களுடன் நீராடிகொண்டிருந்த வேளை நீரில் மூழ்கியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# சட்டவிரோத மணல் அகழ்வை புவிச் சரிதவியல் குழு பார்வை

## அரியாலை கிழக்குக்கு நேரில் சென்று

யாழ்ப்பாணம்,மே 21

அரியாலை கிழக்கில் இடம் பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வு குறித்து புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் அதிகாரிகள் குழு நேரில் சென்று ஆராய்ந்துள்ளது.



> அங்கு மணல் அகழப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட இந்தக் குழுவினர் இது குறித்து அந்தப் பகுதியில் உள்ள மக்களுடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

கொழும்பில் இருந்து வருகை தந்த இந்த அதிகாரிகள் குழு நேற்று நல்லூர் பிரதேச செயலருடன் குறித்த பகுதிக்குச் சென்று சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெற்ற பகுதிகளைப் பார்வையிட்டதுடன் ஆய்வுகளையும் மேற்கொண்டது.

கொழும்பு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பிரதம பொறியியலாளர் அச்சல பெர்ணாண்டோ, உள்ளக கணக்காளர் சந்திரசேன லியனகே, யாழ். மாவட்ட புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் கள உத்தியோகத்தர் எஸ்.நடேஸ்வரன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.இரவிந்திரதாசன், கிராம உத்தியோகத்தர் எஸ்.திருக்கேதீஸ்வரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று அரியாலை கிழக்குக்குச் சென்றனர்.

அங்கு மணல் அகழப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட இந்தக் குழுவினர் இது குறித்து அந்தப் பகுதியில் உள்ள மக்களுடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

தனியாருக்குச் சொந்தமான காணிகளில் இவ்வாறு சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டுள்ளமையால் அந்தப் பகுதி கடல் மட்டத்தில் இருந்து தாழ்ந்த பகுதியாக மாறி வருகின்றது எனவும், இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்து மாறும் அந்தப் பிரதேசப் பொது அமைப்புக்கள் இந்தக் குழு வினரிடம் கோரிக்கை விடுத்தன.

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு முயற்சித்த கிராம அலுவலர் அண்மையில் தாக்கப்பட்டார். அவரைத் தாக்கிய குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்பட வில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த சட்டவிரோத மணல் அகழ்வை உடன் தடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்று புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியக பிரதம பொறியியலாளர் அச்சல பொன்னாண்டோ அங்கு உறுதியளித்தனர். (த-17)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்கில் நிறுத்தி வைக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

கொழும்பு,மே 21

வடக்கு மாகாண சபையை அமைக்கும் போது மாகாண சபைக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நிறுத்தி வைக்க வேண்டும். தமிழ் - சிங்கள மக்களிடையே புரிந்துணர்வு ஏற்படும் வரை இதனை நிறுத்த வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஆங்கில ஊடகமொன் றுக்கு வழங்கிய நேர்காணலியே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதாதென்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரிவரும் நிலையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்னை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். இருப்பினும் நான் போட்டியிட வேண்டும் என்று நினைக்கிறேன். ஜனாதிபதி அமைச்சரவையிலிருந்து என்னை இழக்கத் தயாராக இல்லை என்றும் டக்ளஸ் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களைக் கையளிப்பது தொடர்பில் தெற்கில் கடுமையான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதால் தமிழ் சிங்கள மக்களிடையே புரிந்துணர்வு ஏற்படும் வரையில் இதனை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் கவனத்தில் எடுக்கப்படுமா...?

கைதிகளைத் தமிழர், சிங்களவர் என்று நாம் வேறுபடுத்த முடியாது. எனினும் தமிழ்க் கைதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படும்- இவ்வாறு மகசின் சிறைச்சாலை அத்தியட்சகர் உறுதி அளித்திருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுடன், போதைவஸ்து மற்றும் கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதனால் தமக்கு அச்சுறுத்தல் உண்டாகி இருப்பதாகவும், பெரும்பான்மை இனக் கைதிகளை வேறு பிரிவுக்கு மாற்றுமாறும் தமிழ்க் கைதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான எம்.குமார குருபரனிடமும் முறையிட்டிருந்தனர். இது தொடர்பில் குமரகுருபரன் சிறைச்சாலை அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சிறைச்சாலை அத்தியட்சகர் முன்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார் என்று அறிய வந்துள்ளது.

மகசின் சிறைச்சாலையின் ஒரு பிரிவில், தமிழ் அரசியல் கைதிகள் 51 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சில நாள்களுக்கு முன்னதாக, போதைவஸ்து மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பதினைந்து கைதிகள் அதே பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

அதனால் தமது உயிர்களுக்கு அச்சுறுத்தல் உண்டாகி உள்ளதாகக் கூறி தமிழ் அரசியல் கைதிகள், ஆட்சேபம் தெரிவித்து உண்ணாவிரதமும் மேற்கொண்டனர். அதனை சிறைச்சாலை வட்டாரங்கள் உரியமுறையில் கருத்திலோ, கவனத்திலோ எடுத்ததாக இல்லை!

தமிழ் அரசியல் கைதிகளுடன் பெரும்பான்மை இனக் கைதிகளை ஒரே பிரிவில் தங்க வைத்ததால் உண்டான விபரீதங்களுக்கு உதாரணங்கள் பலப்பல. வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்து குட்டிமணி, தங்கத்துரை உட்பட பல தமிழ் அரசியல் கைதிகள் ஒரே சமயத்தில் கொல்லப்பட்டமையில் ஆரம்பித்து, அண்மையில் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டதும், அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு அங்கு கொல்லப்பட்டதும், இந்த நாட்டுச் சிறைச்சாலைகள் தமிழ் கைதிகளுக்கு உயிர் ஆபத்தான நிலையங்கள் என்பதனை அனைத்துலகத்துக்கும் பறைசாற்றின. அநுராதபுரம் மற்றும் களுத்துறைச் சிறைச்சாலைகளில் நடத்தப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் மீதான தாக்குதல்களையும் சேர்த்துப் பார்த்தால், இந்நாட்டின் சிறைக்கூடங்கள் தமிழ் அரசியல் கைதிகளின் மரணச் சாலைகளாக மாறியுள்ளதைப் புலப்படுத்தும்.

மறுபக்கத்தில், தமிழ் அரசியல் கைதிகளின் சிறை வாழ்க்கை நீண்டு நெடிதாகச் செல்கிறது. அவ்வப்போது அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்று, ஆட்சிப் பிரமுகர்கள் அடிக்கடி வாய்வெட்டிப் பேசினாலும், தாக்குதல்களால் படுகாயமுற்ற கைதிகள் மருத்துவ வசதிகள் வழங்கப்படாமல் உயிர்குடிக்கப்பட்டதும் அண்மைக்காலச் சரித்திரமாகும்.

தமிழ் அரசியல் கைதிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டு மனிதநேயமற்ற முறையில் அவர்கள் பல்வேறு வடிவங்களில் உடல், உளரீதியிலும் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

அவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் மீது நீதிமன்றங்களில் முறையாக, சட்டப்பிரகாரம் வழக்குகள் தொடரப்படாமல் சந்தேகத்தின் பேரில் என்ற முத்திரையுடன் மனிதநேயம் இன்றி, மாக்களாகவே கணிக்கப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அரசாங்கம் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு இன நல்லிணக்கம் குறித்து தெரிவித்த பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் மிகுந்த நாட்டம் இருப்பதாக அரசு பறைசாற்றி வருகிறது.

அதற்கு முற்றிலும் எதிர்மாறாக, தமிழ் அரசியல் கைதிகளை மனித நேயத்துடன் நடத்துவது குறித்து அக்கறை காட்டுவதாக இல்லை. பதிலாக, காலத்துக்குக் காலம், வேளைக்கு வேளை அவர்களை மனதாலும், உடலாலும் வாட்டி வதைத்து வருகிறது.

அவ்வாறில்லை என்று காண்பிப்பதற்காக ஏனும், ஒப்பியாசாரத்துக்கேனும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுத்ததாகவும் இல்லை.

இத்தனை வருடங்கள் சென்றும் அவர்கள் இந்த நாட்டின் சமூகப் பிராணிகள் என்றுதானும் அரச இயந்திரம் நினைப்பதாகத் தோன்றவில்லை. முன்னாள் போராளிகள் என்று பெயர் சூட்டி வஞ்சம் தீர்க்கும் நோக்கும் போக்குமே தென்படுகின்றன.

அத்தகைய எண்ணமோ, வஞ்சகப் போக்கோ தன்னிடம் இல்லை என்பதன்ன வெளியரங்கமாக எடுத்துக் காட்டுவதற்கு அரசு முனையுமா? அதற்கான ஆரம்ப (Preliminary) சமிக்ஞையையாவது வெளிப்படுத்துமா? அதனை நாடிப் பொறுத்திருந்து பார்க்கலாமா...?

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி

# நந்திக் கடலில் பிடித்த மீன்களும் வலைகளும் சமாசத்தால் பறிமுதல்

### தமக்கு ஏதும் தெரியாது என்கின்றனர் திணைக்களத்தினர்

முல்லைத்தீவு, மே 21

நந்திக் கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டவர்களிடமிருந்து வலைகள் மற்றும் மீன்கள் என்பன கடற்றொழில் சமாசத்தால் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இந்த நடவடிக்கைக்கும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நந்திக் கடல் பகுதியில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பாவித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது, நந்திக்கடலில் தங்கூசி வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

பல வலைகள் பிடிபட்ட போதும் உரிமையாளர்கள் தப்பித்துச் சென்றுவிட்டனர். பிடிபட்ட 4 பேரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு 5 ஆயிரம் ரூபா வீதம் தண்டப் பணம் செலுத்திய பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சமாசத்தினரும் நந்திக்கடல் பகுதியில் திடீர் தேடுதல் நடத்தினர்.

இதன் போது 50 இற்கும் மேற்பட்ட தங்கூசி வலைகளும் 2 ஆயிரம் கிலோ வரையான மீனும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆனால் இந்த நடவடிக்கையில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் ஈடுபடவில்லை. இது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என அவர்கள் தெரிவித்தனர். பிடிக்கப்பட்ட மீனவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

## முன் அனுமதியின்றி சிறைகளில் நிகழ்வுகள் நடத்தத் தடை

கொழும்பு, மே 21

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதி இல்லாது வெளிநபர்களின் அனுசரணையுடன் சிறைச்சாலைகளில் எந்தவொரு நிகழ்வுகளையும் ஒழுங்குசெய்வதோ நடத்துவதோ முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் சிலவற்றில் நடத்தப்படும் விழாக்கள், விருந்துபசாரங்கள், போட்டிகள் மற்றும் அலங்கரிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக கைதிகளிடமிருந்தும் போதைப்பொருள் வியாபாரிகளிடம் இருந்தும் பெருந்தொகையில் பணம் பெறப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் காரணமாகவே இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் புத்தாண்டு கொண்டாட்டங்கள் இடம்பெற்றிருந்த காலகட்டத்தில் இடம்பெற்றிருந்த இத்தகைய பல ஒழுக்கக்கேடான செயல்கள் சம்பந்தமான தகவல்கள் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்குத் தெரிய வந்துள்ளன.

இனி வரும் காலத்தில் சிறைச்சாலைகளில் இடம்பெறும் விசேட நிகழ்வின் போது ஏதேனுமொரு வெளியார் தரப்பொன்றிடமிருந்து நிதி மற்றும் பொருள்கள் என்றவாறான உதவிகளைப் பெறுவதானால், அதற்கு முன்னர் குறிப்பிட்ட தரப்பு அல்லது நபர்கள் சம்பந்தப்பட்ட விவர அறிக்கை சிறைச்சாலைகள் தலைமையகத்திடம் முன்வைக்கப்பட வேண்டும்.

அதன் பின்னர் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திடமிருந்து முழுமையான அனுமதியைப் பெறவேண்டும் என்று இது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

மாணவி பலாத்காரம்;

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

மாங்குளம்,மே 21

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட சேனைப்பிலவு உமையம்மையாள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 7 வயதுடைய மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டமைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளார். கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த காலங்களில் இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு எந்தவித நடவடிக்கையையும் பொலிஸார் எடுக்கவில்லை. இதேபோல் இந்தச் சம்பவத்தை பொறுத்துப் போக முடியாது. இது தொடர்பாக இன்னமும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்யவில்லை. இவ்வாறான பாரதூரமான செயலைச் செய்தவர்களை உடனடியாக சட்டத்தின் முன்னர் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும்.

அவ்வாறில்லாமல் பொலிஸார் இந்த நடவடிக்கையில் இழுபறி நிலை காட்டினால் அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு போராட்டத்தில் குதிக்க நேரிடும்.

சம்பவம் நடைபெற்ற இடம், நேரம், சிலரின் நடமாட்டம் என்பவற்றை அந்தப் பகுதி மக்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். இதனை வைத்து உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். வன்னிப் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை பொலிஸார் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதில் குறிப்பிடப்படும் சூத்திரதாரியை கைது செய்து தண்டனை வழங்கும் வரை இலங்கை ஆசிரியர் சங்கம் ஓயாது. -என்றுள்ளது. (ம-422)

## சொத்து விவரம் கையளிக்காத 32 கட்சிச் செயலாளர்களுக்கு அழைப்பு

கொழும்பு, மே 21

சொத்துக்கள் - வைப்புக்கள் சம்பந்தப்பட்ட விவரங்களை இது வரை முழுமையாகக் கையளிக்காது இருக்கும் 32 அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அழைப்பு விடுக்கவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக விளக்கம் அளிக்கும் வகையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பதிவு செய்யப்பட்டுள்ள 64 அரசியல் கட்சிகளில் இதுவரையில் 32 அரசியல் கட்சிகள் சம்பந்தப்படும் சொத்து வைப்பு விவரங்கள் மாத்திரமே முன் வைக்கப்பட்டுள்ளன.

மற்றும் 29 அரசியல் கட்சிகள் முழுமையாக இல்லாது பகுதி பகுதியாக சொத்துக்கள் -வைப்புக்களின் விவரங்களை சமர்ப்பித்துள்ளன.

மூன்று அரசியல் கட்சிகளிடமிருந்து சொத்துக்கள் - வைப்புக்கள் சம்பந்தப்பட்ட எந்தவொரு விவரங்களும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

இவற்றினிடையே குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு சொத்தொன்று இல்லை எனத் தெரிவித்துள்ள கட்சிகளும் கூட இருப்பதாகவும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ம-22)

# இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விவரம் வலயத்துக்கு அனுப்பப்படவில்லை

### உரிய சம்பளம் பெறமுடியாது ஆசிரியர்கள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், மே 21

இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களது சுயவிவரக் கோவைகள் ஒரு வருட காலமாகியும் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படாத காரணத்தால் சம்பள உயர்வுகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா வடக்கு வலய ஆசிரியர்கள் மாவட்ட இடமாற்றம் பெற்று ஒரு வருடகாலம் நிறைவடைந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த ஆசிரியர்களது சுய விவரக் கோவைகள் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஆசிரிய நிர்வாகம் தொடர்புடைய அதிகாரிகளுடன் கேட்ட போது;

திணைக்களத்தில் இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாததால் சுயவிவரக் கோவை அனுப்புவதற்கு வசதி இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

திணைக்களத்தின் இந்த அசமந்தப் போக்கால் பாதிப்படைந்துள்ள ஆசிரியர்கள் சம்பள உயர்வைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

எனினும் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களது சுயவிவரக்கோவைகள் அனுப்பி வைக்கப்பட்டு அவர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படுகிறது எனவும் கூறினர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ஒழிப்புப் போருக்கு இந்தியா கடும் எதிர்ப்பு

## ஜாதிக ஹெல உறுமயவின் உத்தேச பிரேரணை தொடர்பில் தீவிர கவனம்

கொழும்பு, மே 21

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் 1987 இல் கொண்டுவரப்பட்ட, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கும் நோக்கில் இலங்கை அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை தொடர்பில் டில்லி நிர்வாகம் தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

இந்தத் தகவலை உயர்மட்ட இராஜதந்திரி ஒருவர் நேற்றிரவு உதயனிடம் உறுதிப்படுத்தினார்.

இதன் ஓரங்கமாகவே கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தொலைபேசி மூலம் கலந்துரையாடியுள்ளார்.

அதேவேளை, இக்கலந்துரையாடலின்போது வடக்கில் விஸ்வரூபமடைந்துள்ள காணி பிரச்சினை சம்பந்தமாகவும் குர்ஷித் பீரிஸிடம் விளக்கம்கோரினார் என்று இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

அத்துடன், 13 இற்கு எதிராக இலங்கையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தியாவின் சார்பில் அவர் அதிருப்தியை இதன் போது வெளியிட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வைக் காண்பதற்குத் தயார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச சமூகத்திடமும் ஐ.நா. செயலாளர் நாயகத்திடமும் உறுதியளித்துள்ள நிலையில், மறுபுறத்தில் '13' ஐ ஒழிக்கும் வகையிலான நடவடிக்கைகள் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றன.

கடும்போக்குடைய அமைப்புகளினதும், கட்சிகளினதும் '13' இற்கு எதிரான போக்கானது இலங்கை அரசுக்கு சர்வதேச மட்டத்தில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என இராஜதந்திரியொருவர் சுட்டிக்காட்டினார்.

என்றுமில்லாதவாறு நாட்டில் தற்போது '13' இற்கு எதிரான போர் உச்சமடைந்துள்ளது.

குறிப்பாக அதனை அரசமைப்பிலிருந்து நீக்குவதற்கு வகை செய்யும் வகையில் நாடாளுமன்றில் பிரேரணையொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெலஉறுமய அறிவித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னரே இத்தகவலை அக்கட்சி வெளியிட்டிருந்தாலும், சமர்ப்பிக்கப்படும் திகதியை நேற்றுமுன்தினம் அதிரடியாக தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் ஜுன் மாத நாடாளுமன்ற அமர்வின் போது குறித்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என்றும், அதற்கு முன்னர் பிரேரணையின் நகல் ஆளும் , எதிரணி உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமிருப்பதால், எந்தவொரு பிரேரணையையும் இலகுவில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய சக்தி இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இந்தியாவின் அனுசரணையுடன் 13 ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டதால், அது குறித்து டில்லி தொடர்ந்தும் கவனம் செலுத்தும் என்றும், அரசின் பங்காளிக் கட்சிகளினதும், அரச சார்பு அமைப்புகளினதும் இவ்வாறான செயற்பாடுகளால் அரசுக்கு இனிவரும் காலப்பகுதி கடுமையாக அமையும் என்றும் அந்த இராஜதந்திரி குறிப்பிட்டார்.

## த.தே.ம.முன்னணியினரிடம் பயங்கரவாத பிரிவு விசாரணை

யாழ்ப்பாணம், மே 21

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எஸ்.கஜேந்திரன் உட்பட கட்சியின் உபதலைவர், வவுனியா மாவட்ட அமைப்பாளர் ஆகியோர் நேற்றுப் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைத்து காலை 8.50 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை விசாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டமை தொடர்பிலேயே தாம் விசாரிக்கப்பட்டதாக கட்சியின் இளைஞர் அணித் தலைவர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

(த-16)

## மக்களுக்கு உதவிப் பொருள்கள்

புதுக்குடியிருப்பு, மே 21

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான உணவல்லாத பொருள்கள் அடங்கிய பொதி இன்று செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயகத்தில் வழங்கப்படவுள்ளது.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் வழங்கப்படும் இந்தப் பொதி வள்ளிபுனம், ஆனந்தபுரம், உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆவணத்துடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் இதனை தவற விடுபவர்களுக்கு பிறிதொரு தினத்தில் வழங்கப்படமாட்டாது எனவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரதித் திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-400-110)

# வற்றாப்பளை அம்மனுக்கு விசாகப் பொங்கல்

யாழ்ப்பாணம், மே 21

பிரசித்தி பெற்ற வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வான தீர்த்தமெடுத்தல் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் வெகு சிறப்பாக நடைபெற்றது.



முதலில் பாக்குத் தண்டுதல் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து கள்ளப்பாடு கடற்கரையில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று புனித நீர் எடுத்து முள்ளியவளை காட்டா விநாயகர் கோயிலுக்கு நேற்று இரவு 10 மணியளவில் கொண்டு செல்லப்பட்டது. அங்கு விசேட வழிபாடுகளுடன் கடலில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட நீரில் விளக்கு ஏற்றப்பட்டது. அந்த விளக்கு விசாகப் பொங்கலான எதிர்வரும் திங்கட்கிழமை வரை தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும்.

காட்டா விநாயகர் கோயிலில் எதிர்வரும் திங்கட்கிழமை வரை விசேட பூசைகள் நடைபெறும் அதை அடுத்து வெள்ளிக்கிழமை மடை இடம்பெறும்.

திங்கள் அதிகாலை 3 மணிவரை காட்டா விநாயகர் ஆலயத்தில் கடல் நீரில் எரியும் அந்த விளக்கு, அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிலை அதிகாலை 5.30 மணியளவில் சென்றடையும்.

அன்றிரவு 12 மணிக்கு பொங்கல் ஆரம்பித்து அதிகாலை சுமார் 4 மணியிலிருந்து பூசைகள் இடம்பெறும் என்று கோயில் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

பிரசித்தி பெற்ற வற்றாப்பளை அம்மன் கோயிலுக்கு கடந்தமுறை போன்று இந்த முறையும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் திங்கட்கிழமை காலை தொடக்கம் நள்ளிரவு வரை பல பாகங்களிலிருந்தும் வருபவர்கள் நேர்த்திக்காக காவடி, தூக்குக் காவடி எடுத்து வழிபடுவர். (ஒ-4)


## மரண அறிவித்தல்

### கந்தப்பிள்ளை குகப்பிரசாதம்



முன்னாள் பிரதம இலிகிதர், மின்சார சபை, யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தபிள்ளை குகப்பிரசாதம் நேற்று (20.05.2013) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பிகை-முருகேசு தம்பதியரின் மருமகனும் இன்பவதியின் அன்புக் கணவரும் சரஸ்வதி, கௌரியாம்பாள், காலஞ்சென்ற கோகிலாம்பிகை, கிருஷ்ணவேணி, நல்லவரோதயன், வேலாயுதமூர்த்தி ஆகியோரின் சகோதரனும் புனிதவதி, தாரகேசன், ஜெயவதி, மகேசன், சபேசன் ஆகியோரின் மைத்துனரும் திவாகர் (பொறியியலாளர்), ஹர்சன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு தந்தையும் கீர்த்தனாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 21.05.2013 காலை 8 மணி தொடக்கம் ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை 23.05.2013 புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3A, 1/2, 42 Lane,
Colombo-06

(சி/15005) (23-16-14)

தகவல்: திவாகர் (மகன்)



## மரண அறிவித்தல்

திருமதி
### மணிமேகலை சிவானந்தராஜா

அவர்கள் நேற்று (20.05.2013) திங்கட்கிழமை அமரராகினார்.

அன்னார் Dr. சி.சிவானந்தராஜாவின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 0113158141,
0777046234

தகவல்: கணவர்.



## மரண அறிவித்தல்

### திரவியம் அருமைநாயகம் (ராசகுலம்)



கூளாவடி மேற்கு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இத்தாலி பலர்மோவை வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் அருமைநாயகம் கடந்த (14.05.2013) செவ்வாய்க்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரவியம் -பிறிசித்தம்மா (நேசம்மா) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஞானேந்திரம் மற்றும் - ஆன்றாயேஸ் தம்பதியரின் அன்பு மருமகனும் 'வாசுகியின் அன்புக் கணவரும் அனுசன், லக்சன், சோபியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆரோக்கியநாதன் (பெயின்ரர்), நவம், அற்புதம், வனஜா, றஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரேவதி, சாமினி, மயூரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.05.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் காக்கைதீவு அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை

(36732) (23-16-14)

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 காலபோகத்துக்கு விதை வெங்காயம்

## சேமிப்பதற்குப் புதிய திட்டம்



சிறுபோக வெங்காய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகளை போதனாசிரியர்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம், மே 21

யாழ்.மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு காலபோக வெங்காயப் பயிர்ச் செய்கைக்கு போதுமான வெங்காய விதைகளை சேமிக்க யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-


கடந்த வருடம் பருவம் தவறிப் பெய்த மழையால் வெங்காயப் பயிர்ச் செய்கை அழிவடைந்தமையால் இந்த வருடம் பெரும் எண்ணிக்கையான விவசாயிகள் வெங்காய உற்பத்திக்கு போதுமான வெங்காய குமிழ்கள் இல்லாத நிலையில் உள்ளனர். இருப்பில் இருந்த வெங்காயக் குமிழ்களைக் கொண்டு வெங்காய உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் அடுத்த சிறுபோக வெங்காயப் பயிர்ச் செய்கைக்கென விசேடமாக இந்தியாவில் இருந்து முதல் கட்டமாக வேதாள வெங்காய விதைகள் இறக்குமதி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 2014 ஆம் ஆண்டு விவசாயிகள் வெங்காய உற்பத்திக்கு போதுமான வெங்காய விதைகளை பெறுவதற்குச் சாதகமாகவே இந்த வெங்காய விதைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைவாக இந்த வருட சிறுபோக வெங்காய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்குதகுந்தஆலோசனைகளை போதனாசிரியர்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

2014 ஆம் ஆண்டு வெங்காய விதைகளுக்கு விவசாயிகள் அலைந்து திரியாத வகையில் வெங்காய விதைகளை சேமித்து இருப்பில் வைக்கக் கூடியதாகத்திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது எனவும் தெரிவித்தார். (ம-14)

## இ.போ.ச., தனியார் பஸ்களுக்கு கூட்டு நேர அட்டவணை



யாழ்ப்பாணம், மே 21

தூர இடங்களுக்கான சேவையில் ஈடுபடும் சொகுசு பஸ்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு இலங்கை போக்குவரத்துச் சபையுடன் இணைந்து தனியார் பஸ்களுக்கும் கூட்டு நேர அட்டவணையை வழங்க இலங்கை தனியார் போக்குவரத்துச் சங்கம் தீர்மானித்துள்ளது.

சொகுசு பஸ்களுக்கு இடையே அடிக்கடி முரண்பாடுகள் நிலவுவது தொடர்பாக தனியார் போக்குவரத்துச் சங்கத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்துச் சொகுசு பஸ் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலின்போது சொகுசு பஸ் உரிமையாளர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

தனியார் சொகுசு பஸ்களுடன் இலங்கை போக்குவரத்து சபை சொகுசு பஸ்கள் போட்டியான சேவையில் ஈடுபடுவதால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சேவை நேர அட்டவணையில் ஏற்படும் குழறுபடிகளாலேயே இந்தப் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனவே பயணிகள் பாதுகாப்பான, சீரான போக்குவரத்தை மேற்கொள்ள ஏதுவாக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் சங்கமும் இணைந்த கூட்டு நேர அட்டவணையை பயன்டுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-14)

## காரைநகரில் அஸ்வமேத மஹாயாகம்; நெடுந்தீவில் இருந்து குதிரைகள் வருகை

### நேற்றுக் காலை ஊர்வலம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 21

காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணிய ஆலயத்தின் அஸ்வமேத மஹாயாகத்தை முன்னிட்டு விசேடமாக இடம்பெற்றுவரும் குதிரை ஊர்வலத்துக்கென அவசரமாக நெடுந்தீவில் இருந்து ஏழு குதிரைகள் நேற்று முன்தினம் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டன. காரைநகரில் முதல் தடவையாக இடம்பெறும் அஸ்வமேத மஹா யாகத்தில் விசேடமாக தென்பகுதி மற்றும் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் குதிரைகளும் ஊர்வலத்தில் பங்கு கொள்ளவுள்ளன. ஆலயத்தின் 365 நாள் நித்திய உற்சவ பூர்த்தியும் அஸ்வமேத மஹா யாகமும் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும்

குதிரைகள் ஊர்வலம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆலயத்தில் இருந்து புறப்பட்டு சிட்டிவேரம் அம்மன் கோயிலைச் சென்றடைந்து இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சிட்டிவேரம் அம்மன் ஆலயத்தில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு ஆலயத்தை வந்தடையும். நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆலயத்தில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு காரைநகரை வலம் வரும்.

அஸ்வமேத மஹா யாகக் கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7.25 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறும். மறுநாள் முதலாம் திகதி சனிக்கிழமை இறுதிநாள் கிரியைகள், விசேட பூசைகள், சுவாமி வீதிவலம் இடம்பெறும். இறுதி நாளான சனிக்கிழமை ஆலய முன்றிலில் யாழ். நுண்கலைப்பீட மாணவர்கள் 108 பேர் கலந்து கொள்ளும் நாட்டிய நிகழ்வும், கலை நிகழ்வுகளும் நடைபெறும். (ஒ-14-7)

## தொலைத் தொடர்பக கண்ணாடி உடைப்பு

யாழ்ப்பாணம், மே 21

தனியார் தொலைத் தொடர்பகம் மீது இனந்தெரியாத நபர்கள்கல்லெறிந்து தொலைத் தொடர்பகத்தின் கண்ணாடிக் கதவை உடைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் கோயில் வீதியில் ஐ.சி.ஆர்.சி. சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் இரவு தொலைத்தொடர்பக உரிமையாளரும், பணியாளர்களும் கடமையில் இருந்த சமயம் கோயில் வீதியால் வந்த இனந் தெரியாத நபர்கள் இருட்டில் நின்றவாறு பெரிய கல்லொன்றினை கண்ணாடிக் கதவின் மீது வீசியெறிந்து விட்டு இருட்டில் தப்பிச் சென்று விட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். (ம-288)

## விடுதலைப்புலி பிரதிநிதி என்று தெரிவித்து கப்பம் பெற முயன்றவர் உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணம், மே 21

தான் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி என்று கூறி கப்பம் பெற முயன்றவருக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் மற்றொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முதலாவது சந்தேகநபருக்கு உதவி புரிந்தவரும் வசமாக மாட்டுப்பட்டு தடுப்புக் காவலில் உள்ளார்.

கோப்பாயைச் சேர்ந்த பிரதான சந்தேகநபர் சாவகச்சேரியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் 12 லட்சம் ரூபாவைக் கப்பமாகக் கோரியுள்ளார். முதற் கட்டமாக 8 லட்சம் ரூபா தர வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வர்த்தகர் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினார். குறித்த பணத்தைப் பரந்தனில் வைத்துத் தரும்படி கூறியதற்கிணங்க வர்த்தகர் பரந்தனுக்குச் சென்றார். இரகசிய பொலிஸாரும் அங்கு கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

கோப்பாயைச் சேர்ந்த பிரதான சந்தேகநபர் பரந்தனை அண்மித்த இடத்தில் பாதையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை மறித்து தான் பரந்தன் சந்தியில் ஒருவரிடம் சிறிய பொதி ஒன்று எடுக்க வேண்டும் என்றும் அதுவரை ஏற்றிச் சென்று இறக்கிவிடுமாறும் கோரியுள்ளார்.

இரக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் நபரும் அதற்கு ஒப்புக் கொண்டு ஏற்றிச் சென்றார். சம்பவ இடத்தில் இறங்கிய பிரதான சந்தேகநபர், பொதியை எடுத்து வருகிறேன். சற்று நில்லுங்கள் என்று கூறிவிட்டு பணத்தை வர்த்தகரிடம் இருந்து எடுத்துவரச் சென்று பணத்தைப் பெறும்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிள் நபரும் கைது செய்யப்பட்டார். கப்பம் பெற உதவிய [illegible] அவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 3 மாத தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.



இந்த நிலையிலேயே, மூன்றாவது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் வாகன சாரதியாகக் கடமையாற்றுகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர் முகமாலையைச் சேர்ந்தவர். இவரும் 3 மாத தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கோப்பாயைச் சேர்ந்த பிரதான சந்தேக நபரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற நபர் பரந்தனைச் சேர்ந்தவர் என்று அவரது மனைவி தெரிவித்தார்.

பரந்தனில் வர்த்தகரான அவர் நெடுநேரமாகியும் வீடு திரும்பாததனால் பல இடத்துக்கும் தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தியபோதும் கண்டறிய முடியவில்லை. பின்னரே அவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

சிறிது தூரம் ஏற்றிச் செல்லும்படி கேட்டதற்கிணங்கவே தனது கணவர் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று உதவி புரிந்தார். குறித்த நபர் யாரென்று தனது கணவருக்கோ, தமக்கோ தெரியாது. உதவி செய்ய சென்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுவிட்டார் என்று அவரது மனைவி கூறியுள்ளார்.

எனினும் விசாரணைக்காக 3 மாத தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதனால் விசாரணை முடிந்த பின்னரே மேலதிக நடவடிக்கை தொடர்பில் தெரிவிக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

## 7 லட்சத்து 21,000 பேர் வடமாகாணத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

யாழ்ப்பாணம், மே 21

வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு சுமார் 7 லட்சத்து 21 ஆயிரத்து 488 பேர்தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல் திணைக்கள நிர்வாக செயலகத்தின் பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முகமட் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டிற்கு ஏற்பவே இந்தத் தொகையினர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வடமாகாணத்துள் அடங்கும் யாழ்.மாவட்டத்தில் 4 லட்சத்து 26 ஆயிரத்து 703 பேரும், மன்னார் மாவட்டத்தில் 70 ஆயிரத்து 85 பேரும், வவுனியா மாவட்டத்தில் 96 ஆயிரத்து 707 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 59 ஆயிரத்து 409 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 68 ஆயிரத்து 584 பேரும் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளுக்கு எதிராக நடவடிக்கை தொடரும்

## நைஜீரிய இராணுவத் தளபதி தெரிவிப்பு

நைஜீரிய வடக்கிழக்கு பிராந்தியத்தில், பலமுடன் செயற்படும் போராளிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை தொடரும் என்று நைஜீரிய இராணுவத் தளபதி பிரிகேடியர் கிரிஸ் ஒழுக்கோ லேட் தெரிவித்தார்.

இராணுவம் தனது இலக்கை முற்றாக அடையும் வரையில், இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படமாட்டாது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்னர் தொடர்ச்சியான 24 மணி நேர ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு போகோ ஹறாம் இஸ்லாமிய போராளிகளின் முக்கிய தளங்களை குறிவைத்து தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இதுவரையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் 65 போராளிகளை தாம் கைது செய்யததுடன், 10 பேர் சுட்டுக் கொல்லப்ப்பட்டதாகவும் இராணுவ அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் இராணுவத்தின் இந்த தகவலை, சுதந்திரமாக உறுதிப்படுத்த முடியாமல் இருப்பதாக அங்கு நிலைகொண்டுள்ள வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வாரம் வடக்கு, கிழக்கு உட்பட பல பிராந்தி யங்களில் போகோ ஹறாம் இஸ்லாமிய போராளிகள் நடத்திய அதிரடி தாக்குதல் கள் காரணமாக இராணுவம் பெரும் இழப்புகளை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், தற்போது நைஜீரியப் படையினர் போர் விமானங்களையும், ஹெலிகளையும் சேவைக்கு அழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை போராளிகள் விமான எதிர்ப்பு பீரங்கியை உபயோகித்து ஒரு போர் விமானத்தை, சுட்டு வீழ்த்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரிய இராணுவம் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளால் சாதாரண மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என அமெரிக்கத் தூதரகச் செயலாளர் ஜோன் கெரி குறிப்பிட் டுள்ளார்.



“ தற்போது நைஜீரியப் படையினர் போர் விமானங்களையும், ஹெலிக ளையும் சேவைக்கு அழைத் துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே பொதுமக்க ளுக்கு பலவித பாதிப்புகள் ஏற்பட்டுள்ளமை தொடர்பாக பல தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (வ)

# வடகொரியாவை பேச்சுக்கு நிர்ப்பந்திக்க வேண்டும்

### பான் கீ-மூன் ரஷ்யாவிடம் வலியுறுத்து

மொஸ்கோ, மே.21

அணு ஆயுத குறைப்பு பேச்சுக்கு வட கொரியாவை ரஷ்யா நிர்ப்பந்திக்க வேண்டும் என்று ஐ.நா. சபை செயலாளர் பான் கி-மூன் வலியுறுத்தியுள்ளார்.



அவர் ரஷ்யாவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். அப்போது வட கொரியா சமீபத்தில் குறைந்த தூரம் சென்று தாக்கும் 3 ஏவுகணைகளை செலுத்தி பரிசோதனை செய்தது தொடர்பாக கூறுகையில், வடகொரியாவின் ஆத்திர மூட்டும் இந்தச் செயலைக் கண்டு நாம் மிகுந்த கவலை கொண்டுள்ளோம்.

இதைப்போன்ற செயல்களில் இருந்து வட கொரியா விலகிக்கொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

உலகின் சக்தி வாய்ந்த நாடுகளுடன் நடத்தி வந்த அணு ஆயுதக் குறைப்பு பேச்சில் இருந்து வடகொரியா விலகியே உள்ளது.

உலகின் சக்தி வாய்ந்த நாடு களுடன் நடத்தி வந்த அணு ஆயுதக் குறைப்பு பேச்சில் இருந்து வடகொரியா விலகியே உள்ளது.

இந்தப் பேச்சில் மீண்டும் ஈடுபடுமாறு ரஷ்யா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி வட கொரியாவை நிர்பந்திக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

பான் கி-மூன் இவ்வாறு கூறிய பின்னரும் வட கொரியா நேற்றுமுன்தினமும் ஓர் ஏவுகணைச் சோதனை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

# விலகமாட்டேன்

### சிரிய ஜனாதிபதி தெரிவிப்பு

டமாஸ்கஸ், மே.21

ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதற்கான எண்ணம் தமக்கு இல்லை என்று சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத் குறிப்பிட்டுள்ளார்.

ஆர்ஜன்டீனாவின் செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமது நாட்டுக்கு எதிராக மேற்கத்தேய நாடுகள் அழுத்தங்கள் கொடுத்துவந்தாலும் பதவி விலகுவதற்கான எண்ணம் தமக்குத் துளியேனும் இல்லையென அவர் தெரிவித்துள்ளார். கிளர்ச் சியாளர்க ளுடன் பேச்சு நடத்த தயார் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் சிரியா தொடர்பில் சமாதான மாநாடு நடத்துவதை வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளதாக பி.பி.சி. செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங் களுக்கு மேலாக பஷர் அல் அசாத் பதவி விலக வேண்டும் என



வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் அவரது இந்தச் செவ்வி இடம் பெற்றுள்ளது.

சிரியாவில் கடந்த இரண்டு வருட மோதலில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதோடு நான்கு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுள்ளது. இதேவேளை சிரிய அரசின் முக்கிய அரசியல்வாதியும் பிரதி வெளி விவகார அமைச்சருமான பைசல் மெக்டாட் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.(வ)



வத்திக்கான் நகரில் புனித பீற்றர்ஸ் சதுக்கத்தில் நடை பெற்ற நிகழ்வில் குழந்தைகளுக்கு ஆசி வழங்கிய பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ். (வ)

# ஒபாமா, ஹிலாரி இருவரையும் துப்பாக்கியால் சுட வேண்டும்

### வானொலி தொகுப்பாளரின் ஆக்ரோஷக் கருத்தால் சர்ச்சை

வொஷிங்டன், மே.21

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோரைக் கடுமையாக விமர்சித்த வானொலி நிகழ்ச்சி தொகுப்பாளர் கடும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

“ ஹிலாரியை கைது செய்து விசாரித்து துப்பாக்கியால் சுடவேண்டும்.



கடந்த ஆண்டு லிபியாவின் பென்காசியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஹிலாரி கிளிண்டனின் தவறான அணுகுமுறை தான் காரணம் என்று வானொலி நிகழ்ச்சி தொகுப்பாளர் பிட்டே சாண்டில்லி கடுமையாக அவரை விமர்சித்துள்ளார்.

அதில், ஹிலாரியை கைது செய்து விசாரித்து 'அந்த' இடத்தில் துப்பாக்கியால் சுட வேண்டும். அதுவும், என் கையால் நானே அந்தத் தண்டனையை தர வேண்டும். துப்பாக் கியால் சுட்டதும் ஹிலாரி உடனடியாக இறந்து விடக்கூடாது. வலியின் வேதனையை அவரது கண்களில் நான் பார்க்க வேண்டும்.

மரண வலியால் துடிக்கும் அவரது அருகில் சென்று உன்னால் கொல்லப்பட்ட எல்லா அமெரிக்கர்களின் சார்பாகவும், கடற்படை 'சீல்' வீரர்கள் மற்றும் குடும்பத்தினர் சார்பாகவும் உனக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்று நான் கூறவேண்டும்.

இதேபோன்ற தண்டனையை ஒபாமாவுக்கும் வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார். பிட்டே சாண்டில்லியின் இந்த கருத்து அமெரிக்க அரசியல்வாதிகள் [illegible] சர்ச்சையை ஏற் படுத்தியுள்ளது. (வ)

# நவாஸ் ஷெரீபின் கட்சிக்கு ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம்

லாகூர், மே.21

சுயேச்சை வெற்றியாளர்கள் 18 பேர் இணைந்ததன் மூலம் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் (என் ) கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர்வது உறுதியாகியுள்ளது.



இதன்மூலம் ஏனைய கட்சிகளின் ஆதரவின்றி பாகிஸ்தானில் ஆட்சி அமைப்பதற்கான சந்தர்ப்பம் நவாஸ் ஷெரீபின் கட்சிக்கு கிடைத்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி பெரும் அச்சுறுத்தல்களுக்கிடையே பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதில் நவாஸ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சி அமோக வெற்றி பெற்றது. வெற்றி பெற்றபோதும் ஆட்சி அமைக்கத் தேவையான [illegible] கட்சிக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே, அது ஏனைய கட்சிகளின் ஆதரவு வேண்டி நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. தற்போது சுயேச்சை வேட்பாளர்களாக வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சியில் இணைந்ததன் மூலம் நவாஸ் ஷெரிப்பின் கட்சிக்கு தனிப்பெரும்பான்மை கிடைத்துள்ளது. ஜூன் 2 ஆம் திகதி பதவி ஏற்பு விழா இடம்பெறும் என தகவல் துறைஅமைச்சர் ஆரிப் நஜாமி தெரிவித்தார். (வ)

## விண்ணுக்கு சென்ற எலி, பல்லிகள் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பின

மொஸ்கோ, மே.21

விண்ணுக்கு சென்ற எலிகள், பல்லிகள், நத்தை போன்றவை பாதுகாப்புடன் பூமிக்குத் திரும்பின.

செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழ்வதற்குரிய சூழல் உள்ளதா என்பது குறித்து பல்வேறு நாடுகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன.

செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்களைக் குடியேற்றும் நடவடிக்கையிலும் சில தனியார் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

இந்தநிலையில் செவ்வாய்க் கிரகத்தின் சூழல் உயிரினங்களுக்கு எந்தவகையில் உடலில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதைக் கண்டறிவதற்காக, ரஷ்ய விஞ்ஞானிகள் சுண்டெலி, நத்தை, பல்லி உள்ளிட்ட உயிரினங்களை 'பயோன்-எம் விண்கலம் மூலம், கடந்த மாதம் விண்வெளிக்கு அனுப்பியிருந்தனர். (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உறவு பாதிக்கும்

## எல்லையில் அமைதி குலைந்தால்

### சீனப் பிரதமரிடம் நேரடியாக மன்மோகன் எச்சரிக்கை

டில்லி, மே. 21
எல்லைப் பகுதியில் அமைதி குலைந்தால் இரு தரப்பு உறவும் பாதிக்கும் என சீன பிரதமர் லீ கெகியாங்கிடம் பிரதமர் மன்மோகன் சிங் எச்சரித்துள்ளார்.
சீனப் பிரதமராகப் பொறுப்பேற்ற பின், லீ கெகியாங் முதல் வெளிநாட்டுப் பயணமாக டில்லி வந்தடைந்தார். மூன்று நாள் பயணமாக வந்துள்ள அவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.
ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, ஜம்மு காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் கடந்த மாதம் சீன இராணுவம் இந்திய எல்லைக்குள் ஊடுருவியது குறித்த தனது கவலையை பிரதமர் தெரிவித்தார்.
சீனா திட்டமிட்டுள்ளபடி எல்லைப் பாதுகாப்பு ஒப் பந்தம் கொண்டு வருவது குறித்தும் இரு தலைவர் களும் ஆலோசனை நடத்தியதாகக் கூறப்படுகிறது.
இரு நாடுகளுக்கிடையே நல்லுறவு நீடிப்பதற்கு எல் லைப் பகுதியில் அமைதி நிலவ வேண்டியது மிகவும் அவசியம் என சீனப் பிரத மரிடம் மன்மோகன் சிங் வலியுறுத்தினார். எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் பதற்றம் நிலவினால், அமைதி குலைந்து இருதரப்பு உறவும் பாதிக்கப்படும் எனவும் கண்டிப்புடன் அவர் தெரிவித்தார். இரு நாடுகளுக் கிடையிலான வர்த்தக பற்றாக்குறை அதிகரித்து வருவது குறித்து சீனப் பிரதமரிடம் கவலை தெரி வித்த மன்மோகன் சிங், இதற்குத் தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.
பிரம்மபுத்ரா நதியின் குறுக்கே 3 தடுப்பணைகள் கட்ட சீனா திட்டமிட்டிருப்பது குறித்தும் தனது கவலையை தெரிவித்தார்.
இரு நாடுக ளுக்கிடையிலான தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்ப தற்கு நீர்வள ஆணையம் அமைக்க வேண்டும் அல் லது இரு நாடுகளும் பேச்சு நடத்த வேண்டும் என இந்தியா வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



இரு தலைவர்களின் சந்திப்பின் போது, இந்தியா சார்பில் மத்திய வெளியு றவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், வெளியுறவுத் துறைச் செயலாளர் ரஞ்சன் மத்தாய், இந்தியாவுக்கான சீனத் தூதர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் உடன் இருந்தனர். (வ)


# அணு நிலையம் பாதுகாப்பானது

### அணுசக்தி கழகம் மீண்டும் உறுதி

டில்லி, மே.21
கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பலஅடுக்கு தர பரிசோதனைகள் மேற் கொள்ளப் பட்டதாக, இந்திய அணு சக்திக் கழகம் தெரி வித்துள்ளது.
கூடங்குளம் அணு மின் நிலையம் அடுத்த மாதம் முதல் செயற்படத் தயாராகி வருகிறது. இந்தநிலையில் அணு மின்நிலையங்களுக்கு தரம் குறைவான உலோகத்தாலான உதிரிப் பாகங்களை கொள் முதல் செய்ததாக, ஜியோ, போடோயிஸ்க் நிறு வனத்தின் இயக்குனர் செர்கே சுடோ ரஷ்யாவில் கைது செய்யப்பட்டார்.
இதையடுத்து கூடங் குளம் அணுமின் நிலை யத்தில் அணு உலை உட்பட அனைத்து பாகங்களை சோதனை செய்யும் பணியில் இந்திய அணுசக்திக் கழகம் ஈடுபட்டது. இதற்கிடையே கூடங்குளம் அணு மின்நிலைய பாதுகாப்பு குறித்து நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விஞ் ஞானிகள் 60 பேர் கேள்வி எழுப்பினர்.
இது குறித்து தமிழக, கேரள முதல்வர்க ளிடமும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. (வ)

# கடலோர காவல் படையில் புதிய கப்பல் இன்று சேர்ப்பு

தூத்துக்குடி, மே.21
இந்திய கடலோரக் காவல் படையில் 28 ஆண்டுகள் சேவை புரிந்த 'வீரா' கப்பலுக்கு நேற்று பிரியா விடை கொடுக்கப்பட்டது.
இதற்கு பதிலாகப் புதிதாக 'வைபவ்' என்ற கப்பல் இன்று இணைக்கப்ப டுகிறது.


வீரா


வைபவ்

இந்திய கடலோர காவல் படைக்குச் சொந்தமான கப் பல் 'வீரா' கடந்த 30.6.1984 இல் கட்டப் பட்டது. கடலோரக் காவல் படையில் இணைக்கப் பட்டு கடந்த 3.5.1986 முதல் பணியாற்றி வருகிறது.
தொடர்ந்து 28 ஆண்டுகள் கடலோரக் காவல் படை யில் பணியாற்றியுள்ளது.
இந்த கப்பல் ஆயுள்கால மான 25 ஆண்டுகளை தாண்டியும் இயங்கி வருகிறது.
இந்த கப்பல் தூத்துக்குடி துறைமுகத்தின் 8 ஆவது தளத்தில் நிறுத்தப் பட்டுள் ளது. இதிலிருந்து பீரங்கிகள், துப்பாக்கிகள், தொலை தொடர்பு மற்றும் ரேடார், சோலார் உள் ளிட்ட கருவிகளை அகற்றிவிட்டு ஏலம் விடப்படுகிறது. இதற்கான கேள்வி கோரப்பட்டுள்ளது.
இதற்கு பதிலாக கட லோரக் காவல் படையில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள 'வைபவ்' என்ற புதிய போர்க்கப்பல் இணைக் கப்படுகிறது.
வீராவை விடவும் சற்றே பெரிய கப்பலான 'வைபவ்' கடந்த மார்ச் 31 ஆம் திகதியன்று கோவாவில் இந்திய கடலோ ரக் காவல் படையில் இணைக் கப்பட்டது. (வ)



சதீஷ்கார் மாநில முதலமைச்சர் ராமன்சிங் மாநில அளவில் 'விகாஷ் யாத்திரை' என்ற பெயரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். ராஜ்நந்த் கான் மாவட்டத்தில் அவரது யாத்திரையில், குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடியுடன் பங்குபற்றி, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்.

# இந்தியா - சீனா இடையே எல்லை வழி வர்த்தகம்

இந்தியா-சீனா நாடுக ளுக்கு இடையில் இந்த ஆண் டுக்கான எல்லை வழியி லான வர்த்தகம் இமய மலையில் அமைந்துள்ள லிபுலேக் கணவாய் வழியாக ஜூனில் ஆரம்பிக்கவுள்ளது.
இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப்புற வர்த்தகத்துக்கான ஏற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் உத்தரகண்ட் மாநிலத்தின் பிதோராகர் மாவட்ட ஆட்சியர் சி.எம்.எஸ்.பிஷ்ட் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
அதன்பின், பிஷ்ட் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
இந்தியா-சீனா இடையில் இந்த ஆண்டுக்கான எல்லை வழியிலான வர்த்தகம் இமய மலையில் அமைந்துள்ள லிபுலேக் கணவாய் வழியாக ஜூனில் ஆரம்பிக்கவுள்ளது. (வ)

# சீனப் பிரதமரின் இந்தியப் பயணம் திபெத் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம்

டில்லி, மே.21
சீனப் பிரதமர் லீ கெகி யாங்கின் இந்திய சுற்றுப் பயணத்தைக் கண்டித்து, டில்லியில் உள்ள சீன தூதரகத்துக்கு வெளியே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திபெத்தியர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
சீனப் பிரதமர் லீ கெகி யாங்கின் இந்திய சுற்றுப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இரு நாள்களுக்கு தொடர் போராட்டங்களை நடத்த இருப்பதாக திபெத் அமைப்புகள் அறிவித்துள்ளன.
இதையடுத்து டில்லியில் பொலிஸார் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர். லீ கெகி யாங் தங்கியுள்ள விடுதி, சீன தூதரகத்தில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
டில்லி மெட்ரோ ரயில் நிலையம் அருகே திபெத் தியர்கள் போராட்டம் நடத்த வாய்ப்பு உள்ளதால், நேற்று திங்கட் கிழமை காலை முதல் மாலை வரை மெட்ரோ ரயில் நிலையங்களும் மூடப்பட்டன. லீ கெகியாங், அவருடன் வந்துள்ள குழு வினரின் பயணத்திட்டங்களுக்குஏற்பபோக்குவரத்து மாற்றங்களும் செய்யப் பட்டுள்ளன.
திபெத்தை சீனா ஆக்கிரமித்து அடிமைப்படுத்தி வைத்திருப்பதாக குற்றம்சாட்டி அந்தநாட்டு மக்கள் பல ஆண்டுகளாக சுதந்திரம் வேண்டி போராடி வருகின்றனர். ஆனால் திபெத் தங்கள் நாட்டின் ஒரு பகுதி என்று சீனா திட்ட வட்டமாகக் கூறி வருகிறது.



சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, திபெத்தில் இளைஞர்கள் தீக்குளிப்பது போன்ற அசம்பாவிதங்களும் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. இந்தியாவிலும் இதுபோன்ற போராட்டம் நடைபெற்றுவிடக் கூடாது என்ற நோக்கில் பொலிஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர். (வ)

# மத்தியில் 4 ஆண்டுகள் நிறைவு

### கூட்டணி கட்சி தலைவர்களுக்கு விருந்தளிக்கிறார் சோனியா

டில்லி, மே.21
மன்மோகன்சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசு பதவி ஏற்று 4 ஆண்டுகள் வெற்றிகரமாக நிறைவடை வதைத் தொடர்ந்து நாளை புதன் கிழமை கூட்டணிக் கட்சி தலைவர்களுக்கு சோனியா காந்தி விருந்தளிக்கவுள்ளார்.
காங்கிரஸ் தலைமை யிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மத்தியில் 2 ஆவது முறையாக ஆட்சி பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவடைய உள்ளது.
நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலை யில், தனது 4 ஆண்டு கால ஆட்சியின் சாதனைகள் குறித்து இக்கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் உரையாற்ற உள்ளார்.



எனவே இந்த கூட்டம் தான் இரண்டாம் கட்ட ஐக்கிய முற்போக்கு கூட் டணி அரசின் இறுதி ஆண்டு சாதனை விளக்க பட்டியலாக அமையும்.
நாளை நடைபெறும் இந்த கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு விருந்து அளிக்கிறார்.
இரு முக்கிய கூட்டணிக் கட்சிகளான திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க. ஆகி யவை கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டதால், அந்தக் கட்சித் தலைவர்கள் இந்த விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்க மாட்டார்கள்.
மத்திய அமைச்சர்கள் இருவர் பதவி விலகல் பிரச் சினையில் சோனியாவுக்கும், பிரதமர் மன்மோகன்சிங் குக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக வெளியான தகவலை காங்கிரஸ் கட்சி மறுத்து வருகிறது.
இந்த விருந்து நிகழ்ச்சிக் கூட்டத்தில், பிரதமர் மன் மோகன் சிங்குக்கு தனது ஆதரவை உறுதிப்படுத்துவார் என்றும் கருதப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொல்பொருள் இடங்கள் குறித்து விசேட ஆய்வு

கொழும்பு,மே 21

தொல்பொருள் இடங்கள் குறித்து விசேட ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கணக்காய்வாளர் ஏச்.ஏ. எஸ்.சமரவீர தெரிவித்தார்.

அழிவடைந்துவரும் வரலாற்று சிறப்பு மிக்க பெறுமதி வாய்ந்த இடங்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

தொல்பொருள்கள் பாதுகாக்கப்படும்பட்சத்தில்சுற்றுலாத்துறை வளர்ச்சியடையும் என்று அவர் கூறினார். (ச)

# எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்க முயல்கிறது அரசு

## பெற்றோலியக் கூட்டுத்தாபன தேசிய சேவைச் சங்கம் கூறுகிறது

கொழும்பு,மே 21

பெற்றோலிய எரிபொருள் களின் விலையில் மேலுமொரு அதிகரிப்பை மேற்கொள்ள அரசு தயாராகி வருகிறது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தேசிய சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.


இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் செயலர் ஆனந்த பாலிக தெரிவித்ததாவது:-

சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை தற்காலிகமாக மூடிவிட்டு நாட்டின் ஒட்டுமொத்த தேவைக்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய எரிபொருள்களைகூடிய விலைக்கு நேரடியாக இறக்குமதி செய்ய நேர்ந்த சகல சந்தர்ப்பங்களிலும் அரசு இந்தவிதம் எரி பொருள்களின் விலைகளை அதிகரித்து வந்துள்ளது.

சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை தற்காலிகமாக மூடிய சந்தர்ப்பங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நாளொன்றுக்கு ஐந்து கோடி ரூபாவுக்கு மேற்பட்ட நட்டம் ஏற்படுகிறது.

சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்து இங்கு வைத்துச் சுத்திகரிப்பதால் எரிவாயுவையும் கூட தற்போது இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

அதனால் கூட்டுத்தாபனம் நட்டத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவித்து எரிபொருள்களின் விலையில் அதிகரிப்பை மேற்கொள்ள அரசு தயாராகி வருகிறது.



சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய எரிபொருள் வகைகளை நேரடியாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதால் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரிகள் பலருக்கு தரகுப் பணம் கிடைக்கிறது- என்றார். (ஞ)

# நாடாளுமன்றம் செல்வது போன்று 4 ஆம் மாடிக்கும் செல்லும் நிலை

## சாடுகிறார் அரியநேத்திரன் எம்.பி.



“ எப்போது தமிழ் மக்களுக்கு சுதந்திரமான அரசியல் தீர்வு விடுதலை கிடைக்கின்றதோ அது வரையும் எமது பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

மட்டக்களப்பு,மே 21

ஒரு மாதத்துக்கு இரண்டு தடவைகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்வது போன்று மாதத்துக்கு ஒரு தடவையாவது 4 ஆம் மாடிக்குச் செல்லவேண்டியுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து பிரார்த்தனை செய்யும் வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்லுவது போல அடிக்கடி 4 ஆம் மாடிக்கும் செல்கின்றனர்.

இதுவரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறிதரன், அரியநேத்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் உட்பட வேறு சிலரும் 4 ஆம் மாடிக்கு சென்றுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனை 4 ஆம் மாடிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நாங்கள்நாடாளுமன்றத்துக்குச் செல்வது போல 4 ஆம் மாடிக்கும் சென்று வருகின்றோம்.

எப்போது தமிழ் மக்களுக்கு சுதந்திரமான அரசியல் தீர்வு விடுதலை கிடைக்கின்றதோ அது வரையும் எமது பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

எத்தனை வருடங்கள் சென்றாலும் தமிழ் தேசிய விடுதலைக்கான பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுடப்பட்டார்கள். அவர்களின் இடத்துக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே நியமிக்கப்பட்டார்கள். அதற்காக தமிழ் தேசியத்தை அழித்து விடவில்லை.

இன்னுமொரு இனத்தை அழித்து விழா கொண்டாடுவதுவெற்றிவிழாவா? ஒரு நாட்டுக்கு எதிராக போர் செய்து அதில் வெற்றி பெற்று விழா கொண்டாடுவதுதான் வெற்றி விழாவாகும்.

அரசு வெற்றி விழா கொண்டாடுவதானது இன்னும் மக்கள் அடிமைகளாக இருப்பதையே காட்டுகின்றது.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த எமது உறவுகளுக்கு பிரார்த்தனை செய்யக் கூட முடியாத அடக்கு முறைக்குள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றார். (ச)



அக்கரைப்பற்று அஷ்ஷிராஜ் மகாவித்தியாலயத்தின் முன்னால் உள்ள வீதி பயணிகள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் சேதமாகியுள்ளதுடன், வெள்ளம் தேங்கி நிற்பதையும் காணலாம்.


## மரண அறிவித்தல்

### திருமதி சுயந்தி கணேசமூர்த்தி

(இலங்கை வங்கி, திருநெல்வேலி)



60, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுயந்தி கணேசமூர்த்தி கடந்த (17.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் இந்திராணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தணிகாசலம், கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கணேசமூர்த்தியின் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் தர்சனன் (கொமர்ஷல் வங்கி, சாவகச்சேரி), வைஷ்ணவி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை A/L) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரமோகன் (கனடா), சுமதி (கொழும்பு), வாசுகி(கனடா), குகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராதாகிஸ்ஷணமூர்த்தி (அதிபர், நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை), காலஞ்சென்ற முருகதாஷ் மற்றும் ஜலயா, செல்வநாயகம், விஜயந்தி, சிவமூர்த்தி (கனடா), குகமலர், சிவசோதி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2013) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.60, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்

தகவல்:
கணவர் - கணேசமூர்த்தி
(இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

(சி-9485)

## 45ஆம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பு

### அமரர் திருமதி சுப்பையா சிவபூஷணம் (புனிதம்)



பிறப்பு 25.12.1944

இறப்பு 08.04.2013

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (22.05.2013) புதன் கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும், மதியபோசன நிகழ்வி லும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் எமது அன்புத் தாயின் பெயரினால் அன்போடு அழைக்கின்றோம்.

தகவல்:
கணவர்- செ.சுப்பையா
பிள்ளைகள்-
சு.கனகசெந்தில்நாதன் (பிரான்ஸ்),
சு.கணேசராஜன் (ஆரணி வைத்தியசாலை, திருவையாறு, கிளிநெச்சி)
சு.கனகேஸ்வரி (நிலா- பிரான்ஸ்)
சு.குணசேகரம் (இளங்கோ புடைவையகம், பரந்தன்)
சு.உதயகுமார் (சாரதி, கரைச்சி பிரதேசசபை, கிளிநெச்சி)
சு.பிரபா (செல்வாநகர், கிளிநெச்சி)
சு.நகுலன் (உரிமையாளர், சிற்றி மெடிக்கல் சென்ரர், கிளிநொச்சி)

6ஆம் வாய்க்கால்,
ஆலடிச்சந்தி,
கிளிநெச்சி.

(35129)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### கணபதிப் பிள்ளை நடராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மலர்வு: 01.03.1922

உதிர்வு: 21.04.2013

வட்டுவத்தை அல்வாய் கிழக்கு அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் கணபதிப்பிள்ளை நடராசா அவர்கள் 21.04.2013 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரடியாகப் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், சகல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் நன்றி நவில்வதுடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.05.2013) செவ்வாய்க் கிழமை காலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து மதியம் 12 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுவத்தை,
அல்வாய் கிழக்கு, அல்வாய்

(சி-9489)

ரி.ஜெயக்குமார் [லண்டன்]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தர்கள் இளைப்பாற விசேட கொட்டகைகள்

யாழ்ப்பாணம்,மே 21
நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்ததிருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் வசதி கருதி ஆலயச் சுற்றாடலில் விசேட பந்தல்கள் அமைக்கப்படவுள்ளன.
நயினாதீவு இறங்குதுறைப் பகுதி மற்றும் அமுதசுரபி அன்னதான மண்டபம் போன்றவற்றை அண்மித்து இந்தக் கொட்டகைகள் அமைக்கப்படவுள்ளன.
யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் பக்தர்களின் வசதி கருதி நயினை இறங்குதுறையை அண்டிய பிரதேசத்தில் பெரிய அளவிலான இளைப்பாற்றுக் கொட்டகைகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அதனை விட ஆலய சுற்றாடல்களிலும் விசேடமாக அலங்காரப் பந்தல்கள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ம-17)



தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 3 பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டட வகுப்பறைத் தொகுதிகள் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின், வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் கூட்டாக கட்டடங்களை திறந்து வைத்தனர். ''சேவா லங்கா'' நிறுவனத்தினரால் நாவற்குழி மகா வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் ஆகியவற்றிலும் மாகாண பாடசாலைகள் அபிவிருத்தி செயற்திட்டத்தில் மட்டுவில் சந்திர புரஸ்கந்தவரோதய ம.வி யிலும் நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டடங்களே திறந்து வைக்கப்பட்டன. (ம-9)

## நயினாதீவு திருவிழா 9 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 21
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.



முதலாம் திருவிழா எதிர்வரும் ஜுன் மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 24 ஆம் திகதி திங்கட்கிழமை வரை திருவிழாக்கள் இடம்பெறும்.
இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் ஜுன் மாதம் 13 ஆம் திகதி முத்துச் சப்பரமும் எதிர்வரும் ஜுன் மாதம் 15 ஆம் திகதி கைலைக் காட்சியும் எதிர்வரும் ஜுன் மாதம் 17 ஆம் திகதி 108 சங்காபிஷேகமும் மறுநாள் பகல் சிவபூசைக் கைலைக் காட்சியும் இரவு திருமந்திரமும் இடம்பெறும்.
அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஜுன் மாதம் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-7)

# எழுதுமட்டுவாழில் அமைக்கப்பட்ட சந்தையை இயக்கக் கோரிக்கை

தென்மராட்சி,மே 21
தென்மராட்சி கிழக்கில் கடந்த வருடம் மீளக்குடியமர்ந்த மக்களின் நலன் கருதி எழுதுமட்டுவாழ் சந்தியில் 50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தை இயங்காமல் உள்ளது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.
எழுதுமட்டுவாழ் தெற்கு, முகமாலை வடக்கு, கிளாலி, கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் அந்தப் பிரிவுகளின் மக்கள் தமது உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்வதற்கு சேதமடைந்து காணப்பட்ட எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தையைப் புனரமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.
இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் நடவடிக்கையால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 50 லட்சம் ரூபா செலவில் நவீன முறையில் பொதுச் சந்தை அமைக்கப்பட்டது.
சந்தை சாவகச்சேரி பிரதேச சபையால் கேள்வி அறிவித்தல் மூலம் இவ்வருடம் குத்தகைக்கும் வழங்கப்பட்டது.
ஆனால் இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களால் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் சந்தையில் வியாபாரிகள் இல்லாததால் கொடிகாமம் சந்தைக்கு கொண்டு செல்லப்படுகிறது.
கிளாலிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் மட்டும் கடல் உணவுகள் விற்பனை செய்கிறார்.
எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தையில் வியாபாரம் செய்த சிலருடன் தொடர்பு கொண்டு கதைத்தபோது;
சந்தை வளாகம் துப்புரவு செய்யப்படுவதில்லை என்று தெரிவித்தனர்.
அத்துடன் மீளக்குடியமர்ந்த பகுதியில் உள்ள கடைகளில் மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படுவதாலும் கடலுணவுகள் மோட்டார் சைக்கிள்களில் ஊருக்குள் கொண்டு சென்று விற்கப்படுவதால் சந்தையில் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதில்லை எனவும் தெரிவித்தனர்.
சந்தையில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கடைகளில் மரக்கறி வகைகள் விற்பனை செய்வதையும் கடலுணவுகள் வாகனங்களில் ஊருக்குள் கொண்டு சென்று விற்பனை செய்வதும் உரிய அதிகாரிகளால் தடை செய்யப்பட்டால் சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில், எழுதுமட்டுவாழ் சந்தைகள் வழமை நிலைமைக்குத் திரும்பும் எனவும் தெரிவித்தனர். (ம-9)

## வாழ்வாதார மேம்பாட்டு உதவி



தென்மராட்சி, மே 21
இந்தியாவில் தங்கியிருந்து தென்மராட்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த நான்கு குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு உதவிப் பொருள்கள் வெள்ளியன்று கையளிக்கப்பட்டன.
பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு இலங்கையில் இயங்கும் ஓ.எவ்.எவ்.ஆர்.ஆர். நிறுவனத்தால் பிரதேச செயலகத்தில் வைத்து இந்தப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.
உழுந்து அரைக்கும் இயந்திரம், நீரிறைக்கும் இயந்திரம், தெளிகருவி, மீன்பிடி உபகரணங்கள் ஆகியவை இவ்வாறு வழங்கப்பட்டன.
தென்மராட்சி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் சூசைமுத்து அலெக்ஸாண்டர் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.ரகுநாதன், நிறுவன அதிகாரிகள் ஆகியோர் உதவிப் பொருள்களை பயனாளிகளிடம் கையளித்தனர். (ம-9)

## நீர்வேலி தெற்கு மயானத்துக்கு சடலங்களை கொண்டு செல்வதில் சிரமம்

யாழ்ப்பாணம், மே 21
நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்குச் சடலங்களைக் கொண்டு செல்வதில் மக்கள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.
பருத்தித்துறை வீதி அகலிக்கப்பட்டும் மற்றும் இந்த வீதியில் உள்ள வில்லுமதவடி புனரமைக்கப்பட்டதாலும் இந்த மதவடியூடாக மயானத்துக்குச் செல்லும் வீதி ஒடுங்கிக் காணப்படுகிறது.
இதன் காரணத்தால் மயானத்துக்குச் சடலங்களைக் கொண்டு செல்வதில் மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.
இந்த வில்லு மதவடியில் இருந்து நீண்ட தூரத்துக்கு மக்கள் சடலங்களை வாகனத்தில் இருந்து இறக்கி காவிக் கொண்டு செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**"வில்லு மதவடியில் இருந்து நீண்ட தூரத்துக்கு மக்கள் சடலங்களை வாகனத்தில் இருந்து இறக்கி காவிக் கொண்டு செல்கின்றனர்."**

இது தொடர்பில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப தலைவர் க.தர்மலிங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-
மயானத்துக்குச் செல்லும் ஒடுங்கிய வீதி மற்றும் வில்லு மதவடி போன்றவற்றை வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு புனரமைப்புக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார். (ம-17)



ஊர்காவற்றுறை பிரதேச மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் கடந்த வாரம் கைவல்லைப் பணிக் காட்சி நடத்தப்பட்டது. மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் தே.பெலிசியன், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் ஆகியோர் கண்காட்சியைப் பார்வையிடுகின்றனர். (ம-7)

## உ.கிழங்கு செய்கையாளர் சங்கங்களை பதிய நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 21
யாழ்.குடாநாட்டில் அண்மையில் அமைக்கப்பட்ட உருளைக் கிழங்கு செய்கையாளர் விற்பனை கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்வதற்கான ஆரம்பகட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் போன்ற பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த உருளைக் கிழங்கு விற்பனை கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டன.
இந்தச் சங்கங்களை மாவட்ட கூட்டுறவு திணைக்களத்தில் முறைப்படி பதிவு செய்து இயக்கி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
தற்போது இந்தச் சங்கங்கள் தமது நிர்வாக கூட்டங்களின் அறிக்கைகள் மற்றும் அதன் செயற்பாடுகள், யாப்பு விதிகள் போன்றவற்றை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மாணவனுக்குப் பரிசு

கொழும்பு,மே 21
அமெரிக்காவின்,அரிசோனாவில் நடைபெற்ற 2013 ஆம் ஆண்டுக்கான 'இன்டெல் சர்வதேச விஞ்ஞான மற்றும் பொறியியல் கண்காட்சியில்' மின்சார மற்றும் இயந்திர சாதன உற்பத்தியில் புதிய உற்பத்திக்கான பரிசை அநுராதபுரம் மிஹிந்தலை மகா வித்தியாலயத்தின் மாணவன் புபுது கபுகே சுவீகரித்துள்ளார். வயல் வரப்புகளை அமைப்பதற்கான இயந்திரத்தை தயாரித்தமைக்காகவே அவருக்கு இந்தப் பரிசு கிடைத்துள்ளது.
இந்த இயந்திரத்தை தயாரித்தமைக்காக அவருக்கு மூவாயிரம் அமெரிக்க டொலர் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.
இம்முறை நடைபெற்ற இன்டெல் சர்வதேச விஞ்ஞான மற்றும் பொறியியல் கண்காட்சியில் 60 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 600 பேர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வலுவூட்டல் பயிற்சிப் பட்டறை



யாழ்ப்பாணம், மே 21
கொழும்பு ஊனமுற்றோர் அமைப்பு மற்றும் கண்டிகப் இன்ரநஷனல் நிறுவனம் ஆகியுன இணைந்து நடத்திய மாற்றுவலுவுடையவர்களுக்கான வலுவூட்டல் பயிற்சிப் பட்டறை அண்மையில் கிளிநொச்சி சோலைவனம் விடுதியில் நடைபெற்றது.
மாற்றுவலுவுடையவர்களின் திறன்களை ஊக்குவிக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிப் பட்டறையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாற்றுவலுவுடையவர்கள் கலந்து பயன் பெற்றனர். அதன்போது பயிற்சிப்பட்டறையை நடத்திய பியந்தபீரிஸ், பிரிந்தாபரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு ஆலோசனைகளையும் வலுவூட்டல் வழிமுறைகளையும் எடுத்துக் கூறினர். தொடர்ச்சியாக 2 நாள்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையின் போது செயல்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (ந-14)

# கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு ஜூன் முதல் விசேட கொடுப்பனவு

## வடமாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 21
வடக்கு மாகாணத்தில் அதி கஷ்டப் பிரதேசம் மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு எதிர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி விசேட கொடுப்பனவு கள் வழங்கப்படவுள்ளதாக வட மாகாண கல்வி அமைச் சின் செயலாளர் சி.சத்திய சீலன் அறிவித்துள்ளார்.
வடமாகாணத்தில் 363 பாட சாலைகள் அதிகஷ்டப் பாட சாலைகளாகவும், 138 பாடசாலைகள் கஷ்டப் பாடசாலைகளாகவும் வலயக் கல்வித் திணைக்கள கட்டமைப்புக் குழு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்கள கட்டமைப்புக் குழுவினால் இனங்காணப்பட்டுள்ளன.
இதற்கு அமைவாக அதிகஷ் டப் பாடசாலையில் சேவையி லுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும், கஷ்டப் பிரதேச பாடசாலை சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட வுள்ளது.
யாழ்ப்பாணக் கல்வி வலயத் தில் 3 அதி கஷ்டப் பாடசாலை களும் 4 கஷ்டப் பாடசாலைக ளும் வலிகாமம் கல்வி வல யத்தில் 9 அதி கஷ்டப் பாட சாலை களும், 14 கஷ்டப் பாடசாலை களும் வடமராட்சி கல்வி வல யத்தில் 17 அதி கஷ்டப் பாட சாலைகளும், 5 கஷ்டப் பாடசாலைகளும், தென்மராட்சி கல்வி வலயத்தில் 3 அதி கஷ் டப் பாட சாலைகளும், 12 கஷ்டப் பாடசாலைகளும், தீவகக் கல்வி வலயத்தில் 23 அதிகஷ்டப் பாடசாலைகளும், 10 கஷ்டப் பாடசாலை களும், கிளிநொச்சி கல்வி வலயத்தில் 56 அதி கஷ்டப் பாடசாலை களும், 17 கஷ்டப் பாடசாலை களும், மன்னாரில் 22 அதி கஷ்டப் பாடசாலைகளும், 19 கஷ்டப் பாடசாலைகளும் மடுக் கல்வி வலயத்தில் 32 அதி கஷ்டப் பாடசாலை களும் 7 கஷ்டப் பாடசாலைகளும்,
வவுனியா வடக்கு கல்வி வல யத்தில் 66 அதிகஷ்டப் பாட சாலைகளும், 9 கஷ்டப் பாட சாலைகளும், வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 51 அதி கஷ்டப் பாடசாலைகளும், 17 கஷ்டப் பாடசாலைகளும் முல் லைத்தீவு கல்வி வலயத்தில் 30 அதிகஷ்டப் பாடசாலை களும் 16 கஷ்டப் பாடசாலை களும், துணுக்காய் கல்வி வலயத்தில் 46 அதிகஷ்டப் பாடசாலைகளும் 8 கஷ்டப் பாடசாலைகளும் இனங்காணப் பட்டுள் ளன. (த-5)

### கும்பாபிஷேகம்

வடமராட்சி, மே 21
அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த கும்பாபிஷேக தின 1008 சங்காபிஷேகமும் பாற்குடபவனியும் அன்னதானமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 6 மணிக்கு குமிழடி விநாயகர் ஆலயத்தில் இருந்து பெண்கள் பங்குபற்றும் பாற்குடபவனி ஆரம்பமாகி முத்துமாரி அம்மன் கோயிலைச் சென்றடையும்.
காலை 7 மணிக்கு அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் மகா சங்காபிஷேகம் நடைபெறும். (ந-8)

### வேளாங்கண்ணி திருவிழா

மிருசுவில் பழைய வாய்க்காலில் அமைந்துள்ள வேளாங்கண்ணி ஆலயத்திருவிழா நாளை மறுதினம் வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நற்கருணை விழாவும் 25 ஆம் திகதி சனிக் [illegible] திருவிழா [illegible] யும் இடம்பெறும்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்



தென்மராட்சி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல்பணிப்பாளர்
திருமதி இரஞ்சினி இரகுநாதன்
அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவை தரம் I இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு மனமுவந்து பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் பதவியுயர்வுகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
Best Wishes
சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்,
சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.
(C/9285)(6.11)

களஞ்சியம் (Store) வாடகைக்கு
யாழ்.நகர பகுதியில் மத்திய சந்தையை அண்டிய பிரதேசத்தில் 10,000 சதுர அடி விஸ்தீரணமுடைய, Container Lorry யிலிருந்து பொருள்கள் ஏற்றி இறக்கக்கூடிய, வாகன நிறுத்துமிட வசதியுடன் (Parking) களஞ்சியசாலை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 315 1654
(36608)(6.11)

21 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்,
மாணிக்கம் தங்கவடிவேல்
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் (RDA)
திதி: 21.05.2013
தோற்றம் 19.12.1942
மறைவு 11.06.1992
கல்வியிலே எமையுயர்த்தி காலமெல்லாம் நாம் களிப்போடுவாழ கனவுகள் பல கண்டீர்கள் அப்பா! இன்று நீங்கள் காற்றோடு காவியமாகி ஆண்டுகள் இருபத்தியொன்று ஆயினும் பாரினிலே உங்கள் புகழ் மாறாது.
தங்கத்தாமரை
அல்வாய்.
என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.
(35380)(45.6)

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06.04.1944
உதிர்வு 28.04.2007
அமரர் செல்லையா சின்னத்துரை
[கிளாக்கர்]
திதி: பூர்வபக்க ஏகாதசி
குடும்பத்தின் குல விளக்காய்
வாழ்ந்த எம் அப்பாவே
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்களைப் போல யாரும் இல்லையே
ஆறாண்டுகள் சென்றாலும் நீங்காது
உங்கள் நினைவுகள்...
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.
(36689)(6.11)

மாபெரும் தங்கநகை ஏலவிற்பனை
செலான் வங்கியின் ஒரு வருட, 6 மாத, 3 மாத கால அடிப்படையில் அடகு வைக்கப்பட்டு உரிய காலத்தில் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க நகைகள் யாவும் எதிர்வரும் 01.06.2013 சனிக்கிழமை காலை 9 மணி முதல் அடகு வைக்கப்பட்ட பின்வரும் கிளைகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.
(யாழ்ப்பாணம் - (சங்கானை, மானிப்பாய் உள்ளடங்கலாக) மற்றும் நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா)
SEYLAN BANK PLC
- வட பிராந்திய முகாமையாளர், செலான் வங்கி. (C/9471)(2.6)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்
அமரர் சோமு மகாதேவன்



தோற்றம் 25.08.1938
மறைவு 21.04.2013
கடந்த 21.04.2013 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சோமு மகாதேவன் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.
வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.05.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)
காளிகோயிலடி,
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.
குடும்பத்தினர்.
(36660)(45.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் குருநாகல் மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்களுக்குச் சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்தனர்.

## ஆறாவது தடவையாக நாளை சீனா செல்கிறார் மஹிந்த

**கிரகநிலை பாதகமாக இருப்பதால் மஹிந்த வெளிநாட்டில் தங்கியிருக்க திட்டமிடுகிறாராம்.**

கொழும்பு,மே 21
இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை புதன்கிழமை சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை சீனாவில் பயணம் மேற்கொள்ள இலங்கை ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.
எனினும் இதுதொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை.
இலங்கை ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னர், சீனாவுக்கு மேற்கொள்ளவிருக்கும் ஆறாவது பயணம் இதுவாகும்.
இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 10 ஆம்திகதி நான்கு நாள் பயணமாக உகண்டா சென்றிருந்தார். எனினும் கடந்த வெள்ளிக்கிழமை காலையே அவர் நாடு திரும்பியிருந்தார்.
இந்தநிலையில் அவர் மீண்டும் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதேவேளை கிரகநிலைகள் பாதகமாக இருப்பதால், சோதிடர்களின் அறிவுரைப்படி அவர், வெளிநாட்டில் தங்கியிருக்க திட்டமிட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. (ச)




## சந்தையில் தீர்ந்தன ஹலால் உணவுகள்

### முஸ்லிம்கள் திண்டாட்டம்




கொழும்பு,மே 21
ஹலால் உணவுகள் சந்தையில் தீர்ந்துள்ளதால் முஸ்லிம் பாவனையாளர்கள் கஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளனர். எது ஹலால் என்று அறிவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று முஸ்லிம் மக்கள் தெரிவித்தனர்.
பொருள்களுக்கு ஹலால் சான்றிதழ் பொறிக்கும் முறைக்கு பொது பல சேனாவின் தீவிர எதிர்ப்பை அடுத்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அந்த முறை நிறுத்தப்பட்டது.
எனினும் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட ஹலால் சான்றிதழ் பொருள்கள் விற்பனையில் இருந்தன.
தற்போது அவை விற்றுத் தீர்க்கப்பட்ட பின்னர் வர்த்தகநிலையங்களில் பொருள்களை கொள்வனவு செய்யும் முஸ்லிம் பாவனையாளர்கள் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.
அகில இலங்கை ஜம்மியதுல் உலமாமற்றும் முஸ்லிம் அமைச்சர்கள், முஸ்லிம் அமைப்புகள் இந்த விவகாரம் குறித்து மௌனமாக இருப்பது கவலையளிக்கிறது என்று முஸ்லிம்கள் கூறுகின்றனர்.
பால்மா வகைகள் உட்பட பல பொருள்களையும் வாங்குவது சிரமமாக உள்ளது. எதனை வாங்குவது? எதனை தவிர்ப்பது என்று தெரியவில்லை. எது ஹலால்- எது வாங்கக் கூடாது என உலமா சபை பகிரங்கப்படுத்த வேண்டும். அவற்றை பட்டியலிட்டு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ச-ரி)

# 10 ஆயிரம் வெற்றிடங்கள் தற்போது அரச சேவையில்

### உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,மே 21
அரச சேவையில் 10,098 பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.
அமைச்சின் தகவல்களுக்கு அமைய இலங்கை நிர்வாக சேவை 407,முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை 4224, கிராம சேவை உத்தியோகத்தர் சேவை 3800, பதிவாளர்நாயகம் அலுவலகம் 505, இலங்கை ரயில் தொழில்நுட்பசேவை 775, மொழி பெயர்ப்புச் சேவை 135, பொறியியல் சேவை 100 ஆகிய வெற்றிடங்கள் நிலவுகின்றன.
கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் அரச சேவைக்கு 10,735 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. அந்தக் காலப்பகுதிக்குள் அரசமுகாமைத்துவசேவைக்கு 8,764 பேரும், இலங்கை நிர்வாக சேவைக்கு 594 பேரும், அலுவலக உதவியாளர்கள் பதவிக்கு 934 பேரும் இணைத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## ஊழலுக்கு மஹிந்தவே பொறுப்பு

### ரவி கருணாநாயக்க எம்.பி தெரிவிப்பு

கொழும்பு,மே 21
நாட்டில் காணப்படும் ஊழலுக்கும், மோசடிகளுக்கும் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பொறுப்புக் கூற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
அமைச்சர்களும் ஜனாதிபதியுமே நாட்டில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாகக் கூறுகின்றனர். இந்த நிலையில் தாம் தப்பித்துக் கொள்வதற்காக மக்கள் மீது சுமைகளை சுமத்துவது முறையல்ல என்று அவர் குற்றம் சாட்டினார். மின், பொருள் விலையேற்றத்தின் பின்னணியில் அரசின் ஊழலும் களியாட்ட செலவுகளுமே உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-ரி)

## 'ஆயுள்வேத எக்ஸ்போ' கண்காட்சி ஜூலை 12, 13, 14 ஆம் திகதிகளில்

**ஆயுள்வேத மருத்துவ உலகின் மீதான கவனவீர்ப்பு, ஆயுள் வேத மருத்துவ விழிப்புணர்வு என்பவற்றை நோக்காக கொண்டே கண்காட்சி இடம்பெறவுள்ளது.**

அச்சுவேலி, மே 21
'ஆயுள்வேத எக்ஸ்போ 2013' கண்காட்சி மூன்று நாள்களுக்குப் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சுதேச வைத்திய அமைச்சும் தேசிய வணிகர் கழகமும் இணைந்து நடத்தும் கண்காட்சியில் கலந்துகொள்ள விரும்புவோரை தொடர்புகொள்ளுமாறு சுதேச வைத்திய அமைச்சு அறிவித்துள்ளது.
ஆயுள்வேத மருத்துவ உலகின் மீதான கவனவீர்ப்பு, ஆயுள்வேத மருத்துவ விழிப்புணர்வு, ஆயுள்வேத முதலீட்டை அதிகரித்தல், இயற்கை மருத்துவத்தை சர்வதேச ரீதியில் பிரபலப்படுத்தல், இயற்கையைப் பாதுகாத்து மூலிகை உலகைப் பேணல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 'ஆயுள்வேத எக்ஸ்போ 2013' கண்காட்சி எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம், 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
தேசிய வணிகர் கழகத்தின் அனுசரணையுடன் சுதேச வைத்தியத்துறை அமைச்சு கண்காட்சியை நடத்தவுள்ளது.
கண்காட்சியில் கலந்து கொள்ள விரும்பும் ஆயுள் வேத வித்தியாலயங்கள், நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், இயற்கை பொருள் உற்பத்தியாளர்கள், ஆயுள் வேத விற்பன்னர்கள், தொழில் வல்லுநர்கள், ஆய்வாளர்கள், ஆயுள்வேத அழகு சாதன உற்பத்தியாளர்கள், விற்பனையார்கள், மருத்துவ ஆய்வு தயாரிப்பாளர்கள், ஆயுள்வேத மருந்து உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், அக்குபஞ்சர் ஹோமியோபதி சித்த மருத்துவ வல்லுநர்கள் ஆகியோரை கண்காட்சியில் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ச-11)

## பொது பலசேனா அமைப்புக்கு எதிராக இதுவரை மாநாடு ஏன் நடத்தவில்லை?

### அ.இ.மு.காங்கிரஸிடம் கேட்கிறார் மஜீத்

கொழும்பு, மே 21
பொதுபலசேனாவின் இனவாதத்தை தூண்டும் உரைகளுக்கு விளக்கம் கொடுக்கும் வகையிலான மாநாடொன்றினை நடத்துவதற்கு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஏன் முன்வரவில்லை என்று முஸ்லிம் மக்கள் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் கேள்வி எழுப்பியுள்ளார்.
தாருல் குர்ஆனில் நடைபெற்ற ''ஹலால் எமது உரிமை'' என்ற தலைப்பிலான மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொது பல சேனா அமைப்பினர் என்பது நடிகர்கள். இதன் கதை, வசனம், இயக்கம் யார் என்பது பற்றி இந்த உலகுக்கு தெரியும். எனினும் அரசுக்கு முட்டுக் கொடுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கு அது புரியவில்லை.
அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் செயலர் பொது பல சேனாவை கண்டித்து அறிக்கை விடுகிறார். ஆனால் ஏன் தனது கட்சி சார்பாக மூன்று மொழியிலான ஊடக மாநாட்டைக்கூட்ட முடியவில்லை?
அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ளவர்கள். எனவே அவர்களால் இலகுவாக தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்களை அழைத்து பொது பல சேனாவினருக்கு பதிலளிக்கும் வசதிகள் உண்டு. ஆனால் இவர்கள் எதற்கு தயக்கம் காட்டுகிறார்கள்?
எனவே தமிழ் மொழி ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதை விட்டு மும்மொழி ஊடக மாநாட்டை கூட்டி பொது பல சேனாவினருக்கு பதில் கொடுக்க முயற்சியுங்கள். அவ்வாறான கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தால் நாமும் சமுகமளிப்போம்.- என்றார். (ச-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலுசந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி' முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

## என்னே ஒரு கடமையுணர்வு!

இரவைக் கிழித்துக் கொண்டு வந்த 'ஹைஏஸ்' வாகனம் திடுமுட்டாக சந்தியில் திரும்ப முற்படுகையில் நேர்ந்துவிடுகிறது அந்த விபரீதம். கணநேரம்தான். அதற்கிடையில் எதிரே வந்த பல்ஸர் வீதியில் அங்கப் பிரதட்சணம் செய்து கொண்டிருக்க அம்மா என்ற அலறலோடு வீதியில் வீழ்ந்தான் அதில் வந்த இளைஞன்.

நம்மவர்களுக்கு விடுப்புப் பார்ப்பதென்றால் கொள்ளைப் பிரியம். கண்முன்னே ஒரு விபத்து நடந்துவிட்டால் சும்மா இருப்பார்களா? நூறு பேர் வரையில் வீதியை முற்றுகையிட்டு விட்டார்கள்.

''பல்ஸர் காரனுக்கு வெறிபோல. அதுதான் இப்பிடி வந்து மோதியிருக்க வேணும்''

''உந்த ஹைஏஸ் காரரெல்லாம் கண்மண் தெரியாமல் ஓடுறாங்கள். இப்பிடி ஓடித்தான் மல்லாகத்திலையும் ஒரு குழந்தையை அடிச்சவங்கள். சந்தியில திரும்பேக்க பாத்து திரும்பத் தெரியாதோ''

''றோட்டில லைற் இருந்திருந்தால் இப்பிடி அடிபட்டிருக்கத் தேவையில்லை''

என்று ஆளாளுக்கு விபத்துக்கு ஒரு காரணத்தை தம்மைச் சுற்றியிருந்தவர்களிடம் அளக்கத் தொடங்கியிருந்தார்கள். எவரும் அடிபட்டு வீழ்ந்து கிடக்கும் இளைஞன் அருகே போனதாகவோ அவனுக்கு எழுந்திருக்க உதவி செய்ததாகவோ தெரியவில்லை. அடிபட்டுக் கிடக்கும் இளைஞனை ஒருசிலர் நீண்ட நேரத்துக்குப் பின்னர் தூக்கச் சென்றபோது,

''தம்பி! இப்ப உதவிக்குப் போனால் பிறகு பொலிஸ், கோர்ட், சாட்சி எண்டு இழுபட வேண்டியிருக்கும்'' என்று கும்பலில் நின்றவர்கள் அனாமதேயக் குரலில் வெருட்ட உதவிக்குப் போனவர்களும் பின்வாங்கினார்கள்.

''ஆராவது பொலிஸுக்குப் போன் பண்ணுங்கோ'' என்று ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டார்களே தவிர எவரும் பூனைக்கு மணிகட்டத் தயாராகவில்லை. தயக்கம் உடைந்து யாரோ ஒரு புண்ணியவான் பொலிஸுக்கு போன் போட்டார். பதில் சிங்களத்தில் வந்தது. நீண்ட நேர போராட்டத்தின் பின்னர் அரைகுறைத் தமிழில் ''நீங்க சொல்லுற இடத்துக்கு 5 நிமிஷத்தில வாறோம்'' என்று பொலிஸ் தரப்பு பதில் கிடைத்தது. ஆனால் அரை மணித்தியாலம் தாண்டியும் பொலிஸ் வந்த பாடாக இல்லை. பொறுமையிழந்து போன சிலர் பொலிஸ் நிலையத்துக்கு நேரே சென்று தகவல் சொல்ல புறப்பட்டனர். அப்படிச் சென்றவர்கள் அடுத்த சந்தியை தாண்டும்போது அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு வந்தவர்களை மறித்தனர் போக்குவரத்துப் பொலிஸார்.

''எங்க போறது?'' என்ற கேள்வியோடு மதுவின் நெடியும் வெளிவந்தது.

''சேர்! அடுத்த சந்தியில அக்சிடென்ட். பொலிஸுக்குப் போன் பண்ணி இன்னும் வரேல. அதுதான் நேரபோய் சொல்லுவம் எண்டு வெளிக்கிட்டம். நல்ல காலம் நீங்க இதிலேயே நிக்கிறீங்கள். வாங்கோ சேர்.'' என்று வந்தவர்கள் அழைத்தார்கள்.

ஆனால் கடமையிலிருந்து கணநேரமும் தவறாத அந்தப் பொலிஸ்காரர்கள் ''அதிருக்கட்டும். உங்கட்ட லைசன்ஸ், இன்சூரன்ஸ் இருக்கா?'' என்று கேட்கத் தொடங்கினர். வந்தவர்களில் ஒருவர் அவசரத்தில் ஹெல்மட் போட மறந்திருந்தார். அவரிடம் மறக்காமல் 'சப்போர்ட்' பெற்ற பின்னர் அவர்களையும் கூட்டிக்கொண்டு ஆறஅமர விபத்து இடத்துக்கு விரைந்தனர் அந்தப் பொலிஸ்காரர்கள்.

வாழ்க அவர்களின் கடமையுணர்ச்சி!

# வடமாகாண சபை தேர்தல் நடக்குமா, நடக்காதா?

## தர்ம சங்கடத்தில் ராஜபக்ஷ அரசு

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

வடக்கில் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக இன்னமும் செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால்அந்தத் தேர்தல் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி- அந்த மாதத்தின் முதல் சனிக்கிழமை நடத்தப்படும் என்று ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உயர் தலைவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான அதிகாரபூர்வ அறிவித்தல் இன்னமும் வெளியிடப்படவில்லை. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கூட இது பற்றிய சந்தேகங்கள் எழுந்துள்ளபோதிலும் அப்படியான அறிவித்தல் ஒன்றை அறிவிப்பதற்கான கால அவகாசம் இன்னும் இருக்கிறது.

இந்தத் தேர்தல் பற்றிய அறிவித்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிக்கையில், வடமாகாணத் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை ஜனாதிபதி வெளியிட வேண்டும். அதன் பின் அவர் எனக்கு தேர்தலை நடத்தும் படியாக அறிவுறுத்தல் ஒன்றை விடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். தேர்தலை நடத்துவதற்கு தமக்கு குறைந்தது ஒன்றரை மாத அவகாசமாவது தேவைப்படலாம் என்றார் ஆணையாளர். ஆனால் அவ்வாறான ஒரு வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு அவசியமில்லை என்று கருதும் அரச தரப்பு உயர் தலைவர்களும் இருக்கிறார்கள். முன்பு பிரதம நீதியரசராக இருந்தபோது சரத் என் சில்வா வழங்கியுள்ள ஒரு தீர்ப்பின் அடிப்படையில் அவர்கள் அவ்வாறு நினைக்கிறார்கள். அந்தத் தீர்ப்பானது இரண்டு தனித்தனி மாகாண சபைகள் , வடக்கு ஒன்று, கிழக்கு ஒன்று என இருப்பதை அங்கீகரித்திருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். 1987 ஆம் ஆண்டு இந்தியாவின் அனுசரணையுடன் கையெழுத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த இரு மாகாணங்களும் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன. வடக்கில் பெருவாரியாகவும், கிழக்கில் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பிரிவாகவும் விளங்குகின்ற தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கான முக்கிய அம்சமாக இந்த இணைப்பு கருதப்பட்டிருந்தது.

அரசின் வழித்தடம் சரியாக இருக்குமானால் வடக்கில் தேர்தலை நடத்துவதற்கான அறிவுறுத்தல் பிந்தினால் ஜூன் மத்தியிலாவது ஆணையாளருக்கு வந்து கிடைக்க வேண்டும். தேர்தலுக்கான ஆயத்தங்களை செய்வதற்காகும் இந்தக் கால அவகாசம். வடமாகாண சபைத் தேர்தலில் முக்கிய அங்கம் வகிக்கப் போகிறவர்களான தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பொறுத்த வரை அவர்களின் கருத்து வேறுவிதமாக இருக்கிறது.

தேர்தலை நடத்துவதற்கான முறையான அறிவித்தல் இன்னமும் விடுக்கப்படவில்லை. தேர்தல் எப்போது நடத்தப்படும் என்பது தமக்குத் தெரியாது என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார் என்று அந்தக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். ஜனாதிபதி அவ்வாறாக பகிரங்கமாக அறிவித்துள்ளார் என்று நினைவுறுத்தியபோது, அவர் அவ்வாறு 2010, 2011, 2012 ஆகிய ஆண்டுகளிலும் கூறியிருந்தார் என்று குறிப்பிட்ட சம்பந்தன், அது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் வரை , தேர்தலைப் பற்றித் தாம் எதுவும் கூற விரும்பவில்லை என்றார்.

சம்பந்தனின் இந்தக் கருத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக இருந்தது இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் கடந்த வாரம் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுடன் தொலைபேசியில் நடத்தியுள்ள உரையாடல். கடந்த மாதம் கொமன்வெல்த் அமைச்சர்கள் பணிக்குழுவில் இலங்கைக்குச் சார்பான ஒரு நிலைப்பாட்டை இந்தியா தனது ராஜதந்திரப் பணிகள் மூலம் ஏற்படுத்தியிருந்த நிலையில் அந்த நாடும் இலங்கை விடயத்தில் இப்பொழுது மாறான கருத்தை உருவாக்கிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்திய அமைச்சர் தமது உரையாடலின்போது வடமாகாணத் தேர்தல் தொடர்பாகவும் கருத்துப் பரிமாறியுள்ளார்.

### இந்திய அமைச்சரின் எச்சரிக்கை

இலங்கை அரசில் பங்கு வகிக்கும் சில தரப்புகள் வெளிப்படுத்தியுள்ள சில போக்குகள் குறித்து இந்திய அமைச்சர் இந்தியாவின் கடுமையான கவலைகளை வெளியிட்டுள்ளார். அவர் பிரஸ்தாபித்துள்ள இரண்டு விடயங்களில் ஒன்று வடமாகாண சபைத் தேர்தலை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் முயற்சி. இரண்டாவது அரசமைப்பு திருத்தம் 13 இல் தற்பொழுது உள்ளடக்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நிராகரிக்கும் முயற்சி. இந்த விடயங்களை வெளியிட்டுள்ள ராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அவ்வாறான செயற்பாட்டில் இறங்குவதானது அதற்கே ஆபத்தைத் தேடிக் கொள்வதாய் இருக்கும் என்று குர்ஷித் மிகக் கண்ணியமாகத் தெரிவித்திருப்பதாகக் கூறினார்கள். மேலும் கடுமையான செயற்பாட்டில் இறங்கும்படியான நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டு விடலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார் என்று தெரிகிறது. அதுமட்டுமல்ல சர்வதேச சமூகத்திலிருந்து இலங்கை தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொள்வதாக இருக்கும் என்றும் இந்திய அமைச்சர் எச்சரித்துள்ளார்.

வடமாகாணத் தேர்தல் செப்ரெம்பரில் நடத்தப்படும் என்றவகையில் இலங்கை அரசிடமிருந்து உறுதி மொழியைப் பெற்றுக்கொண்டுள்ள இந்தியா அவ்வாறு இலங்கை செயற்படுவதானது 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை இலங்கை அரசு அங்கீகரிப்பதாக இருக்கும் என்று இந்தியா கருதி வருகின்றது என்று தெரிவிக்கின்றன ராஜதந்திர வட்டாரங்கள் . எனவே அரசு ஒப்பந்தத்தின் அம்சங்களை செயற்படுத்துவதுடன் அதற்கு மேலும் போக வேண்டும் என்று அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்திய அமைச்சர் குர்ஷித், இலங்கை வெளியுறவு அமைச்சருடன் உரையாடல் நடத்தியதையடுத்து சில மணி நேரங்களில் அது பற்றிய விவரங்களை இந்திய அரசு பகிரங்கப்படுத்தியது. இலங்கை அரசின் சமீப கால நடவடிக்கைகளில் இந்தியா அதிருப்தியடைந்திருப்பதை இது காட்டுவதாக அமைந்துள்ளது.

இவ்வாறானதொரு நிலைமையானது இலங்கை- இந்திய உறவில் சந்தேகமின்றி ஒரு புதிய விரிசலை ஏற்படுத்துவதாயுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அத்துடன் இன்னொரு விடயத்தையும் அது தெளிவு படுத்துவதாகவுள்ளது. இந்திய அரசு இலங்கை அரசுடன் நடத்திய உரையாடல் விரைந்து பகிரங்கப்படுத்தியமையானது இந்தியாவின் நிலைப்பாடு இலங்கைக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது என்பதைப் புலப்படுத்துவதாகும். இந்த வகையில் அங்குள்ள ஊடகங்களுக்கு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது இந்தியா. ஆனால் அதற்கு நேர் மாறாக இலங்கை வெளிநாட்டு அமைச்சானது அப்படியான விவகாரங்கள் யாவற்றையும் வெளியிடாமல் விலக்கி வைத்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளது. அதன் மௌனம் சகிக்கமுடியாமல் இருக்கிறது. இரகசியங்கள் ஏராளமாக தொடர்கின்றன. இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் ராஜ தந்திரத்தின் காரணமாகத் தான் கொமன்வெல்த் உச்சி மாநாடு இலங்கையில் நடக்கவிருப்பதாக சில பத்திரிகைகள் தம்பட்டம் தட்டும் நிலையில் தான் இந்த பிந்திய நிலைமையும் தோன்றியுள்ளது.

அரசு தனது தற்போதைய திட்டங்களை முன்னெடுக்குமானால் அரசமைப்பு திருத்தமானது ஒரு சிக்கலான விடயமாக அமைந்துவிடும். இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகளின்படி செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தியாக வேண்டும். கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் போது இந்தியாவுக்கு அந்த வாக்குறுதி மீண்டும் ராஜதந்திர வழிமுறைகளில் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதே போல் கடந்த மார்ச்சில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜப்பானுக்கு போயிருந்த போதும் அதே வாக்குறுதியை அங்கு வழங்கினார் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எனவே சர்வதேச சமூகமானது இந்த வாக்குறுதிகள் கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாடு நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறுவதற்கு முன்பே செயல் உருப்பெற வேண்டும் என்று எதிர்பார்த்து நிற்பது ஆச்சரியமல்ல.

இவை இவ்வாறு இருக்க வேறு இரு முக்கிய நிகழ்ச்சிகளும் செப்ரெம்பரில் நடைபெறவிருக்கின்றன. ஒன்று கொமன்வெல்த் அமைச்சர்கள் பணிக்குழுவின் அடுத்த சந்திப்பு . மற்றது ஜெனிவாவில் மனித உரிமைச் சபையின் கூட்டம் நடைபெறவிருப்பது. அங்கு நிச்சயமாக இலங்கை விடயம் விவாதத்துக்கு வரும். வடமாகாண தேர்தல் இந்த இரண்டு மாநாடுகளிலும் கவனத்தை ஈர்க்கும் விவாதத்துக்குரிய விடயமாக இருக்கப் போகின்றது. அந்தச் சபையின் கூட்டம் நடைபெறும் போது மனித உரிமை சபையின் ஆணையாளர் இரண்டாவது அமெரிக்க தீர்மானத்தின் விடயங்கள் எவ்வாறு இலங்கையில் செயற்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து இடைக்கால அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்குள் 'தென்னாசியாவின் சிங்கப்பூர்' கனவு



போர்முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இரு முழு ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரமானது 8.0 மற்றும் 8.2 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த ஆண்டில் போர் நடைபெற்ற ஆண்டுகளை விட இலங்கையின் பொருளாதாரமானது 6.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர், இலங்கை, தென்னாசியாவின் வலுமிக்க பொருளாதார நாடாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதற்கு மாறாக இன்று இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. மே 2009 இல் இலங்கை இராணுவப் படையால் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட போது, 37 ஆண்டுகாலப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் துரித வளர்ச்சியடைவதுடன், 'தென்னாசியாவின் சிங்கப்பூர்' என்ற நிலைக்கு இலங்கையை இட்டுச் செல்வோம் என இலங்கை அரசு எதிர்வுகூறியிருந்தது.

''போரின் முடிவில் இலங்கை தனது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான சடுதியான வாய்ப்பைக் கொண்டிருந்தது. ஆனால் அந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள நாம் தவறிவிட்டோம். எமது நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் உலக முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் உருவாக்கப்படவில்லை'' என எதிர்க்கட்சி அரசியல்வாதியும் பொருளியலாளருமான ஹர்சா டீ சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசு பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் அரச தொழிற் திணைக்களங்களில் அதிகம் தங்கியிருப்பது மற்றும் 2011இல் சில தனியார் தொழில் நிறுவனங்கள் மீள்தேசியமயப்படுத்தலுக்கு உள்ளாகியமை போன்றவை இலங்கையில் அனைத்துலக முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை மேற்கொள்வதில் தயக்கம் காண்பிப்பதற்கான உடனடிக் காரணங்களாகும் என்பது அவரது கருத்து.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இரு முழு ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரம் 8.0 மற்றும் 8.2 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த ஆண்டில் போர் நடைபெற்ற ஆண்டுகளை விட இலங்கையின் பொருளாதாரம் 6.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 2013இல் இந்த வீதமானது 7 சதவீதமாக அதிகரிக்கும் என இலங்கை அரசு எதிர்வுகூறியுள்ள போதிலும், இது மிகைப்படுத்தப்பட்ட நம்பிக்கையாக உள்ளதாக அனைத்துலக நாணய நிதியம் தெரிவித்துள்ளது. போர் முடிவடைந்ததன் பின்னர் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கமானது குறைவடைந்த போது அனைத்துலக நாணய நிதியம் இலங்கைக்கு 2.6 பில்லியன் டொலர்களை வழங்கியிருந்தது. இலங்கை நிதி நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் எனவும் இதன் பணவீக்கம் அதிகரித்து வருவதாகவும் அனைத்துலக நாணய நிதியம் எச்சரித்திருந்தது.

புலிகளுடனான போர் வெற்றி கொள்ளப்பட்டு, மே 18, 2009 அன்று புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொலை செய்யப்பட்டதை இலங்கை அரசு கொண்டாடிய போது, நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாக அனைத்துலக நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கொசி மாத்தேய் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கையின் வருமானமானது, ஆசியாவில் மிகக் குறைந்த வருவாயைப் பெறும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக் காணப்படுவதாகவும், இதேபோன்று ஆசியாவின் பொது முதலீடுகள் மிகக் குறைவாக மேற்கொள்ளப்படும் நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாகவும் இதன் உள்நாட்டுக் கடனானது மொத்த தேசிய உற்பத்தியில் 80 சதவீதமாகக் காணப்படுவதாகவும் கொசி மாத்தேய் மேலும் சுட்டிக் காட்டியிருந்தார்.

நாட்டில் அதிக நட்டத்துடன் செயற்படும் மின்சார சபை போன்ற அரச திணைக்களங்கள் கொண்டுள்ள தனியுரிமையை நீக்கி அவற்றின் செயற்பாடுகளை மீளவும் சீர்ப்படுத்த வேண்டும் என மாத்தேய் அப்போது வலியுறுத்தியிருந்தார். மின்சார சபை 65 சதவீத வரியைப் பெற்றுக்கொள்கிறது. இதனை தொழிற்துறைச் சங்கங்கள் பரவலாக எதிர்த்து வருகின்றன.

பெரும்பாலான இலங்கையர்கள் இன்னமும் நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்தை அனுபவிக்கவில்லை என லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் Chatham House அமைப்பைச் சேர்ந்த சாரு லற்றாகொக் தெரிவித்துள்ளார்.

''பொருளாதார அபிவிருத்தியில் காண்பிக்கப்படும் பாரபட்சங்கள், நிலையாக காணப்படும் இராணுவச் செலவினங்கள் மற்றும் பொருள்களின் விலையில் ஏற்படும் திடீர் அதிகரிப்புக்கள் போன்றவற்றால் இலங்கையில்வாழும் சாதாரண மக்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடையவில்லை'' என சாரு லற்றாகொக் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட போர் மீறல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் சிறுபான்மைத் தமிழ் மக்களுடன் சுயாட்சி தொடர்பான தீர்வை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் அரசுமீது மேற்குலக நாடுகள் அழுத்தங்களை வழங்கிவருகின்றன.

இவ்வாறான விடயங்களில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் திருப்தியைக் கொடுக்காத நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் ஜீ.எஸ்.பி. (பிளஸ்) இலங்கைக்கு வழங்கியிருந்த வரிச்சலுகையை நீக்கிக் கொண்டது. இதனாலும் இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடியை எதிர்நோக்குகிறது.

2011இல் ஏற்றுமதி குறைவடைந்து இறக்குமதி அதிகரித்ததால் இதன் வர்த்தக மீதியானது 10 பில்லியன் டொலர்கள் பாதகமான மீதியைக் காட்டியது. இதனால் இலங்கையின் வர்த்தக சமநிலை தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. வர்த்தக சமநிலையில் ஏற்பட்ட குழப்பத்தால் இலங்கையின் நாணய மதிப்பீடு குறைந்ததுடன், முதலீட்டு விகிதம் அதிகரிப்பதற்கு காரணமாகியது.

மத்திய வங்கி முக்கிய கடனுதவி விகிதத்தை 50 புள்ளிகள் மூலம் குறைத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு புத்துணர்வு வழங்கவுள்ளதாக அண்மையில் அறிவித்திருந்தது.

போர் முடிவடைந்த பின்னர் இலங்கையில் சுற்றுலாத்துறை அதிகம் வளர்ச்சியடைந்துள்ளது. பல புதிய விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையானது தற்போது ஒரு மில்லியன் வரை அதிகரித்துள்ளதால் சுற்றுலாத்துறையை முன்னேற்றும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

''சுற்றுலாத்துறை என்பது ஒருநாட்டுக்கு மிக முக்கியமானதாகும். ஆனால் ஏனைய துறைகளுடன் ஒப்பிடும்போது இது மொத்தத் தேசிய உற்பத்தியில் மிகச் சிறியளவு தாக்கத்தையே ஏற்படுத்துகிறது. அதாவது நாட்டில் தற்போது உற்பத்தித்துறை மற்றும் விவசாயத் துறை ஆகியன நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியாது'' என கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் JB Securities மையத்தின் ஆய்வாளார் முற்றாசா ஜபெர்ஜீ சுட்டிக்காட்டியுள்ளார்.

பூகோள பொருளாதார சரிவும் இலங்கையின் பொருளாதாரத்தில் பாதிப்பைச் செலுத்தியுள்ளதாக சுயாதீன பொருளியலாளர் சானா அமரதுங்க தெரிவித்துள்ளார்.

''போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெருமளவான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இங்கு தனியார் முதலீடுகள் என்பது போதியளவில் மேற்கொள்ளப்படவில்லை. போரின் முடிவில் நாட்டின் பொருளாதாரம் 10 சதவீதத்தால் அதிகரிக்கும் என நம்பப்பட்டது. ஆனால் இது நடைமுறைச் சாத்தியமற்ற எதிர்பார்ப்பாக காணப்பட்டது. இந்த நிலை தற்போது மேலும் மோசமடைந்துள்ளது'' என அமரதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

*(நன்றி: புதினப்பலகை)*

# செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்த அடையாளம்


செவ்வாய் கிரகத்தை ஆராய அமெரிக்க நாசா நிறுவனம் மார்ஸ் ரோவர் கியூரியாசிட்டி என்ற விண்கலத்தை அனுப்பி ஆராய்ந்து வருகிறது. இந்த விண்கலமானது, முன்பு செவ்வாய் கிரகத்தில் உயிர்கள் வாழ்ந்ததற்கு அடையாளமாக நம்பப்படும் பெர்குளோரேட்ஸ் என்ற உப்புகள் படிமங்களை கண்டுபிடித்துள்ளது.

இந்த உப்பு கலந்த பாறைத் துகள்களை சூடுபடுத்தும் போது, இதிலிருந்து குளோரினேட்டட் ஹைட்ரோகார்பன்கள் வெளியேறுகிறது. அப்போது அதிக அளவிலான ஒக்சிஜனும் வெளியேறுவதை விஞ்ஞானிகள் பார்த்துள்ளனர்.

இந்த பெர்குளோரேட் உப்புகள் கண்டுபிடிப்பால், செவ்வாய் கிரகத்தில் முன்பு உயிரினங்களின் புழக்கங்கள் இருந்திருக்கக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். பூமியில் இருந்தவாறே செவ்வாயை சுற்றிப்பார்க்கலாம்

MSL எனப்படும் நாசாவின் செவ்வாய்க் கிரக விஞ்ஞான ஆய்வு கூடத்தின் ஒரு செயற்திட்டமாக செவ்வாய்க் கிரகத்தில் தற்போது தங்கி ஆராய்ச்சி செய்து வரும் ஒரு கார் வண்டியளவுடைய ரோபோட்டிக் விண் வண்டியாக கியூரியோசிட்டி விளங்குகின்றது. தற்போது செவ்வாயின் காலே எனப்படும் நிலப்பரப்பில் (Crater) ஆய்வு செய்து வரும் கியூரியோசிட்டி 2011 நவம்பரில் ஃபுளோரிடாவில் உள்ள கேப் கனவெரல் ஏவுதளத்தில் இருந்து செலுத்தப்பட்டது. 8 மாதங்கள் பயணம் செய்து 2012 ஆகஸ்ட் 6 ஆம் திகதி செவ்வாயின் காலே நிலப்பரப்பில் உள்ள எயோலிஸ் பாலுஸ் எனும் இடத்தில் கியூரியோசிட்டி தரையிறங்கியது. அன்றைய தினம் தொடக்கம் இன்று வரை பூமிக்குப் பல புகைப்படங்களையும் தகவல்களையும் அனுப்பி வருகின்றது. செவ்வாயின் காலநிலை மற்றும் புவியியல் குறித்து முக்கியமாகப் பரிசோதனை செய்து வரும் இந்த ரோபோ இன் முக்கிய இலக்குகளாக அதன் தரை மேற்பரப்பில் நுண்ணுயிர் வாழ்க்கை அல்லது தண்ணீர் இருப்பதற்கான தடயங்கள் உள்ளனவா என அறிவதாக விளங்குகின்றது.

இந்த நிலையில் கியூரியோசிட்டியில் பொருத்தப்பட்டுள்ள 4 பில்லியன் பிக்சல் (33 MP) வலுவுள்ள பனொராமா எனும் கமெராவினால் எடுக்கப் பட்ட நவீன புகைப்படங்களைத் தொகுத்து 360 டிகிரி இல் அதன் சுற்றுத் தோற்றத்தைப் பார்க்க முடியும் விதத்தில் நாசா விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். அதாவது இந்த புகைப்படத் தொகுப்பைப் பார்க்கும் போது செவ்வாய்க் கிரகத்துக்கு நேரில் போய் கியூரியோசிட்டியின் அருகே இருந்து பார்ப்பதைப் போன்ற உணர்வைத் தரும் என இவர்கள் கூறுகின்றனர்.



கியூரியோசிட்டியின் முன்னே பொருத்தப்பட்டுள்ள இரு கமெராக்கள் மூலம் பெறப்பட்ட 40% துல்லியமான படங்களைக் கொண்டு அன்ட்ரூ போட்ரோவ் எனும் புகைப்படவியலாளர் இந்த 360 டிகிரி சுற்றுத் தோற்ற புகைப்படத் தொகுதியை போட்டோ ஷொப்பில் உருவாக்கியுள்ளார். விண்வெளியில் கதிர் வீச்சு மற்றும் ஏனைய தடைகளைத் தாண்டி பல இலட்சம் கிலோ மீட்டர்கள் கடந்தே பூமிக்கு இந்தப் புகைப்படங்கள் கிடைக்கப் பெற்றுள்ள போதும் பூமியில் இருந்து அதி நவீன கமெரா ஒன்றினால் எடுத்த புகைப்படங்கள் போலவே ஒரு சிறுதும் வேறுபாடின்றி இவை தென்படுவது வியக்கத் தக்க ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை மிக்க மாபெரும் பூஜை

இந்தப் பூஜையைச் செய்பவன் அதிர்ஷ்டசாலி. மகா சாமர்த்தியசாலி. அதிபாக்கியசாலி. இந்திராதி தேவர்கள், இரவி, மதி ஆகியோர் வசிஷ்டர், வாமதேவர், அகத்தியர், சுகர், குபேரன் ஆகியோர் என்ன பூஜை செய்தார்களோ , என்ன மந்திரம் கூறினார்களோ? என்ன வழிபாடு நடத்தினார்களோ? அதைத்தான் இப்போது, என் தந்தை செய்ததை, என் தந்தை சொல்லிக் கொடுத்து, நான் செய்ததை உங்களுக்கு அன்போடு சொல்லு கின்றேன்.

முறையான வாழ்க்கை, ஒழுக்கமுள்ள வாழ்க்கை, சத்திய வாழ்க்கை, உண்மை பேசும் வாழ்க்கையாக உன் வாழ்வு அமையும்.

தெய்வ பக்தி அதிகம் உடையவர்களும் குரு பக்தி உள்ளவர்களும், குருவுக்கு அதிக சேவை செய்பவர்களும், குருவுக்குப் பிடித்ததை விட, பிடிக்காததைச் செய்யாமல் இருப்பவர்களும் இந்தப் பூஜையைச் செய்து பாருங்கள். அன்னை யோகமாயா உங்கள் அருகில் வந்து அமர்வதை உணர்வீர்கள்.

ஜாதி ஏது? மதம் ஏது? அன்னை யோக மாயாவுக்கு.

ஜாதி என்ன ஜாதி? அன்பு ஒன்றே நீதி.

ஜாதிக்கும், மதத்துக்கும் அவள் கட்டுப்பட்டவள் என்றால் நந்தனாருக்கு ஏது நல்ல கதி?

திருப்பாணாழ்வாருக்கு கிடைக்குமா இறைக்காட்சி? திருமங்கை மன்னன் செய்தி படித்திருக்கிறாயா?

வால்மீகி என்ன நல்ல குலத்தில் பிறந்தவரா? எத்தனை கொலைகள் செய்திருக்கிறார்? அவருக்குக் கிடைக்க வில்லையா மாபெரும் பாக்கியம்? ஏன் என்று எண்ணிப்பார்.

உணர்ந்தான்; தெளிந்தான்; கற்றான்; எழுதினான் அதுதான் இராமாயணம்.

இராமாவதாரத்தை விட வால்மீகி பெரியவர்.

உன் புத்திக்கு இது எட்டிவிட்டால், உன் செல் தட்டிவிடப் பட்டால். அங்கே பிழம்பாக, அருட் பேருருவாக வருபவள் அன்னை யோகமாயா. உன் கவலையை விடு! இந்தப் பிரம்மாஸ்திரத்தை எடு! இந்தப் புத்தகத்தைத் தொடு!

படி இந்தப் பாட்டை! செய் இந்த முறையை! ஏற்று விளக்கை! அம்பாளின் வலது கைப்பக்கம் நல்லெண்ணெய் விளக்கேற்று. இடது பக்கம் நெய் விளக்கேற்று.

நெய்விளக்கு ஐஸ்வர்யம் அளிக்கும்.

நல்லெண்ணெய் விளக்கு கடன் போகும், தொல்லை போகும், விரோதம் போகும், தீய குணமெல்லாம் போகும்.

வாசலில் மாவிலைத் தோரணம் கட்டு.

மாவிலை மகாலட்சுமி.

உன் பூஜைக்குஅன்னை வருவதற்குக் காத்திருக்கிறாள். அவள் வரும் போது, மாவிலைத் தோரணம் அவளைக் வரவேற்கட்டும்.

உன் பூஜை அறை, உன் உள் அறை இரண்டையும் பஞ்ச கவ்வியத்தால் மெழுகு. இந்தப் பஞ்ச கவ்வியம் என்பது தான் ஆசையைப் போக்கி, துராசையைப் போக்கி சத்தியத்தை உள்ளே அமர்த்துவது. அவள் சத்தியப் பிரதாயினி. வரத்தைத் தருகின்ற வரப்ரதாயினி.

உன் உள்ள அறைக்குள் அவளை வரவேற்கத் தயாராக இரு.

இரு கரம் நீட்டி, உன் உளம் குளிர, வாய் குளிர அவளை வரவேற்று, உன் இதய சிம்மாசனத்தில் அவளை அமரவை.

இதய சிம்மாசனத்தில் அமர்ந்த தேவியை ஸ்ரீ சக்கரமாகிய மகாமேருவில் அமர்த்து.

அம்மா! எனக்குள் நீ வந்துவிட்டாய்.

**''நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம் பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறுபெற்றேன் தாயே மலைமகளே செங் கண் திரு மால்திரு தங்கச் சியே**



வருந்தா வகை செய்து விட்டாய். இனி வருத்தப்படக் கூடிய வாழ்க்கை உனக்குக் கிடையாது. அவளை வரவேற்று, வரவேற்று அன்னையை உட்காரவை.

**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# போட்டிகளில் முதலிடம் பெறும் வேலணை ஐயனார் முன்பள்ளி




(கடந்தவாரத் தொடர்ச்சி.....)

**லக்ஸ்மன்**

பொதுப் பிரச்சினைகளைத் தீர்வு காண்பதில் பிரதேச சபையும் பிரதேச செயலகமும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கின்றன.

ஊருக்குள் பெரியளவில் மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலை இல்லை. அதனால் சனசமூக நிலையத்துக்கு அவ்வாறான ஒன்றில் கவனம் செலுத்த வேண்டிய அவசியமும் இல்லை எனக் கூறும் தலைவர் கமலதாஸ் கல்வி நிலையை மேம்படுத்த வேண்டும் என்பதற்கான முயற்சிகளிலேயே நாங்கள் கவனம் செலுத்துகிறோம் என்கிறார். வேலணையில் தனியார் கல்வி நிறுவனங்கள் மிகவும் குறைவு. பெருமளவு மாணவர்கள் உள்ளனர். அவர்களின் கல்வித் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்பதற்காக இலவச கல்வி உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

**கலை நிகழ்வுகளிலும் கணிசமான வளர்ச்சியை மாணவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக செயற்பாடுகள் உள்ளன. சிவராத்திரி விழா இடம்பெறுகின்றது. ஐயனார் முன்பள்ளி யுடன் இணைந்து பங்கேற்கும் கலைமகள் விழாவும் இடம்பெறுகின்றது.**

எமது பகுதியைச் சேர்ந்த வெளிநாடுகளில் வதியும் மக்களின் உதவியுடன் இந்த வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளோம். மாணவர்களுக்கு உதவக் கூடியதான நூல் நிலையத்தின் பொது நூலகம் சிறிது சேதமடைந்துள்ளது. அதனைத் திருத்தியமைத்து இப்போது கணிசமான நூல்களுடன் இயங்கி வருகின்றது. மேலதிகமான நல்ல நூல்களை எதிர்பார்ப்பதாகவும் வசதி படைத்தவர்கள் ஏதாவது சிறந்த நூல் ஒன்றை வழங்கவும் முன் வர வேண்டும்.

விளையாட்டுக்களைப் பொறுத்த வரை தீவுப்பகுதியில் ஒரு முன்னிலை வகிக்கும் சனசமூக நிலையம் இது. ஒவ்வொரு ஆண்டிலும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வீரர்களுக்கு சிறந்த பரிசில்களை வழங்குவதுடன் விளையாட்டுத்துறையில் வளர்ச்சியடையக்கூடியதான நடவடிக்கைகளும் எடுத்து வரப்படுகின்றன. விளையாட்டு மைதானம் உள்ளது. பிரதேச சபை கிரிக்கெட் போட்டிகளை நடத்தக்கூடியதாக அதற்கான உபகரணங்களை வழங்கி உதவியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மக்களிடையே போட்டிகளை நடத்தும் திறமையான பெறுபேறுகளைப் பெறவேண்டும். இந்த ஆண்டு தீவகப் பிரதேச செயலகப் போட்டிகளில் கலந்து கொண்டு அநேகமான போட்டிகளில் முதலிடத்தை எமது சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் தட்டிக் கொண்டது. கலை நிகழ்வுகளிலும் கணிசமான வளர்ச்சியை மாணவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக செயற்பாடுகள் உள்ளன. சிவராத்திரி விழா இடம்பெறுகின்றது. ஐயனார் முன்பள்ளியுடன் இணைந்து பங்கேற்கும் கலைமகள் விழாவும் இடம்பெறுகின்றது. முன்பள்ளியில் தற்போது முப்பது மாணவர்கள் உள்ளனர். அவர்களுக்கான சில உபகரணங்கள் வழங்குவதுடன் முன்பள்ளி ஆசிரியைக்கான அரசின் சம்பளத்துடன் மேலதிகமாக கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இதற்கு புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்தவர்களின் உதவி கிடைக்கிறது. நூலகத்தைப் பொறுத்த வரை அது விஸ்தரிக்கப்பட வேண்டியுள்ளதால் பொதுமக்களது உதவி தேவைப்படுகின்றது. மக்கள் தம் வசம் உள்ள சிறந்த நூல்களை வழங்கும் பட்சத்தில் அதனை மகிழ்வுடன் வரவேற் போம் என்கிறார்கள். ஆண்டு தோறும் கலைமகள் விழாவின் போது ஏடு தொடக்கப்படுகின்றது. நூலக வளர்ச்சிக்காகப் பிரதேச சபைத் தலைவரிடம் உதவிகள் கோரியுள்ளோம். அமைச்சருடாக அது குறித்து உதவ முன்வருவதாக சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். நூலகத்துக்கான தளபாட வசதிகளும் தேவை. பத்திரிகை நிறுவனங்கள் பத்திரிகைகளை இலவசமாக வழங்கி உதவுவதாகவும் கூறப்பட்டது.

எமது மாணவர்களின் கல்வியை உழைப்பாக்கி இந்தப் பிரதேசத்தின் எதிர்காலத்துக்கு ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஐயனார் சனசமூக நிலையம் செயற்படுவதே அதன் முதல் நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்குடியிருப்பு கைவேலியில் எரிபொருள் நிரப்பு நிலையம்

புதுக்குடியிருப்பு,மே 21
புதுக்குடியிருப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் புதிதாக அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் மக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள வாகன உரிமையாளர்களின் நலன்கருதி பல லட்சம் ரூபா செலவில் புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் கைவேலிப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது.
இது அமைக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த நிலையிலும் மக்களின் பயன்பாட்டுக்கெனத் திறக்கப்படாமல் காணப்பட்டது. இது தொடர்பாக பலரும் விசனம் வெளியிட்டிருந்தனர்.
இந்தச் சூழ்நிலையிலேயே இந்தப் புதிய எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கத் தலைவர் எஸ்.அன்னலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சீ.மோகன்ராஜ் எரிபொருள் நிலையத்தினைத் திறந்து வைத்தார்.
புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஐ.பிரதாபன், பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
இந்தப் புதிய எரிபொருள் நிலையம் திறந்து வைக்கப்பட்டமையை அடுத்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கி வந்த அசௌகரியங்கள் நீக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, மாஞ்சோலை, நாயாறு மற்றும் ஒட்டுசுட்டான் பகுதிகளிலும் புதிதாக அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.
(ம-400)

# புதுக்குடியிருப்பில் சந்தை அமைக்க காணி தெரிவதில் இழுபறி நிலை



புதுக்குடியிருப்பு,மே 21
புதுக்குடியிருப்பு சந்தை அமைப்பதற்கான காணி தெரிவதில் இழுபறி நிலை காணப்பட்டதை அடுத்து சந்தை அமைப்பதற்கு முன்வந்த நிறுவனம் பின்வாங்கி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
புதுக்குடியிருப்பு பகுதிக்கான பொதுச்சந்தை கடந்த கால போர் இடர்களால் முற்றாகச் சேதமடைந்த நிலையில் தற்போது தற்காலிகமாக கோம்பாவில் பகுதியில் இயங்கி வருகின்றது.
இந்தச் சூழ்நிலையில் புதுக்குடியிருப்புப் பகுதிக்கான நிரந்தர சந்தைக் கட்டடம் அமைப்பதற்கு யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் செயற்பாட்டு நிறுவனம் முன்வந்தது.
இதனை அடுத்து சந்தைக்கான பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதில் பல்வேறு தரப்புகளுக்கு மத்தியில் இழுபறிநிலை காணப்பட்டது. இதனால் அந்த நிறுவனம் அதிலிருந்து விலகிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த இழுபறிநிலை காரணமாகப் புதிய சந்தை அமைக்கப்படாத நிலையில் கோம்பாவிலில் தற்காலிகமாக இயங்கும் சந்தையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தமக்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என்பதைக் காரணம் காட்டி குத்தகைப் பணத்தை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேசசபைச் செயலாளர் எஸ்.மிதுலனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:
புதுக்குடியிருப்பு பகுதிக்கான பொதுச்சந்தை ஒன்றை அமைப்பதற்கான பொருத்தமான காணி ஒன்றைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டு வருகின்றோம். அநேகமாக அனைத்துப் பகுதி மக்களதும் நலன்கருதி புதுக்குடியிருப்பு மத்திய பகுதியில் அதற்கான காணியை இனங்காண்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றோம். சந்தைக்குரிய பொருத்தமான காணி கிடைக்கும் வரைக்கும் மந்துவில் பகுதியில் தற்காலிகமாக சந்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று கூறினார். (ம-400)

## அதிகூடிய நிலுவை கொண்ட குடிதண்ணீர் இணைப்புகள் துண்டிப்பு

மன்னார்,மே 21
மன்னார் மாவட்டத்தில் அறிவித்தல்களையும் மீறி அதிகூடிய நிலுவைத் தொகைகளைக் கொண்ட உள்ளக குடிதண்ணீர் இணைப்புக்கள் தற்போது துண்டிக்கப்பட்டு வருகின்றன என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மன்னார் மாவட்ட பொறியியலாளர் வி.உதயசீலன் தெரிவித்தார்.
இதற்கமைவாக அறிவித்தல்களையும் மீறி அதிகூடிய நிலுவைத் தொகைகளை செலுத்தாத 510 பாவனையாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களுடைய குடிதண்ணீர் இணைப்புகள் தற்போது துண்டிக்கப்பட்டு வருகின்றன.
5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் உள்ள நிலுவைத் தொகைகளை உடைய நீர் பாவனையாளர்களுடைய இணைப்புக்களே தற்போது துண்டிக்கப்பட்டு வருகின்றன.
துண்டிக்கப்படும் இணைப்புக்களை உடனடியாக மீளப்பெற விரும்பும் வாடிக்கையாளர்கள் நிலுவைத் தொகையை முழுமையாக செலுத்துவதோடு, மீள் இணைப்புக் கட்டணமாக இரண்டாயிரத்து இருநூற்று நாற்பது ரூபா செலுத்துவதன் மூலம் குடிதண்ணீர் இணைப்பை மீளப்பெற்றுக் கொள்ள முடியும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மன்னார் மாவட்ட பொறியியலாளர் வி.உதயசீலன் மேலும் தெரிவித்தார். (ம-12)

## இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வீடமைப்பாளருக்கு கிடைக்கவில்லை

### அரைகுறையில் பணிகள் கிடப்பில்

புதுக்குடியிருப்பு,மே 21
புதுக்குடியிருப்பு மேற்கு, மந்துவில், வேணாவில், தேவிபுரம், வள்ளிபுனம், ஆனந்தபுரம், கோம்பாவில், மல்லிகைத்தீவு போன்ற பகுதிகளில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு வீடமைப்புக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.
இதனால் கட்டுமானப் பணிகள் அரைகுறையில் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்று பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
முதற்கட்ட நிதியின் மூலம் வீடு கட்டுவதற்கான அத்திபாரம் இடும் வேலைகள் நிறைவடைந்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும், இரண்டாம் கட்டக் கொடுப்பனவாகிய 2 லட்சம் ரூபா வழங்கப்படவில்லை.
இதனால் தமது வீடுகளின் கட்டுமானப் பணிகள் அரைகுறையான நிலையில் நிறுத்தப்பட்டுள்ளதாக ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு, கோம்பாவில் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.
இந்தச் சூழ்நிலையில் குறிப்பிட்ட 6 மாத காலப்பகுதியில் வீடுகளை கட்டிமுடிக்க முடியாத நிலை ஏற்படும் எனவும், சம்பந்தப்பட்டவர்கள் இரண்டாம் கட்ட கொடுப்பனவுகளை விரைவாக வழங்குவதன் மூலம் ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
வன்னியில் இடம்பெற்ற போர் இடர்களின் போது புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் சுமார் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் முற்றாகவும், பகுதியாகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.
இவற்றை இந்திய அரசின் நிதிப்பங்களிப்புடன் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்திய வீட்டுத் திட்டத்தின் மூலம் அமைக்கும் இந்த வீடுகளை சுமார் 6 மாதங்களுக்குள் கட்டி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே வீட்டு உரிமையாளர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-410)

## புதிய பாலம் மக்கள் பாவனைக்கு

புதுக்குடியிருப்பு,மே 21
மன்னாகண்டல் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் (தாம்போதி) மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.
ஜப்பானின் நிதிப் பங்களிப்புடன் புலம்பெயர்ந்த சர்வதேச நிறுவனத்தால் (ஐ.ஓ.எம்) இந்தப் பாலம் அமைக்கப்பட்டது.
மன்னாகண்டல் கமக்கார அமைப்பின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பாலம் திறப்பு விழாவில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், புலம்பெயர் சர்வதேச நிறுவனத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் பற்றிக், வடமாகாண ஒருங்கிணைப்பாளர் க.வேதாபரணம் முல்லைத்தீவு நீர்ப்பாசனத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் மன்னாகண்டல் கிராம சேவையாளர் எஸ்.தயாசீலன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ம-400)

## தீர்மானித்த அளவை விட சட்டவிரோத நெற்செய்கை

### விவசாயிகள் மீது நடவடிக்கை



கிளிநொச்சி,மே 21
இரணைமடுக் குள நீர்ப் பயன்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற் செய்கையில் தீர்மானிக்கப்பட்ட அளவை விட சட்டவிரோதமாக மேலதிக செய்கை மேற்கொண்ட விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குள நீர் பயன்பாட்டின் கீழ் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையில் தீர்மானிக்கப்பட்ட அளவை விட மேலதிகமாக ஆயிரத்து இருநூறு ஏக்கருக்கும் மேற்பட்ட அளவு மேலதிக செய்கைகளாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதே வேளை, கழிவு நீரைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் செய்கை திட்டத்தின் கீழும் அதிகமான பகுதிகளில் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இவ்வாறான செய்கைக்கு எதிராகவும், இதனை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இந்த மாதம் ஆரம்பத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட அரச அதிபர், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், கமநல அபிவருத்தி உதவி ஆணையாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் உள்ளிட்டோர் தீர்மானங்களை நிறைவேற்றினர்.
கடந்த காலங்களில் குளத்தின் நீர்மட்டத்தை வைத்து தீர்மானிக்கப்பட்ட செய்கைகளை விட சட்ட விரோத செய்கைகள் இடம்பெற்றதால் உரிய முறையில் பயிர்ச் செய்கை மேற்கொண்ட விவசாயிகளும் பாதிக்கப்பட்டனர்.
இதனைக் கருத்தில் கொண்டே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டன.
தற்போது இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையை அளவீடு செய்து [illegible] செய்கைகளை [illegible] காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மருதநகர்ப் பகுதியில் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தயாரூபன், கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர், நீர்ப்பாசனப் பொறியியலாளர் விகிர்தன் உள்ளிட்ட அதிகாரிகள் இவற்றை அளவீடு செய்து அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
இவ்வாறு அளவீடு செய்யப்பட்டு அடையாளம் காணப்படும் மேலதிக செய்கைகளை மேற்கொண்ட விவசாயிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ-6)

# மரதன் ஓட்டப் போட்டி



சர்வதேச செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையினர் சங்கத்தின் கரைச்சிப் பிரிவின் அனுசரணையுடன் கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 6 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட மட்டத்திலான மரதன் ஓட்டப் போட்டியை நடத்தியுள்ளனர்.
இப்போட்டியானது ஆண்கள், பெண்கள் என இரு பிரிவுகளாக நடைபெற்றன. ஆண்களுக்கான போட்டிகள் ஆனையிறவில் இருந்தும் பெண்களுக்கான போட்டிகள் பரந்தன் சந்தியில் இருந்தும் ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை முன்றலில் நிறைவடைந்தன.
இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள் விவரம் வருமாறு.
**ஆண்கள் பிரிவு** - 1 ஆம் இடம்- ரீ.அன்ரனி டெல்மன், 2 ஆம் இடம்- வீ.அலக்சன், 3 ஆம் இடம்- ரீ.சசிகரன். **பெண்கள் பிரிவு**- 1 ஆம் இடம்- ரீ.டெனசிகா, 2 ஆம் இடம்- வீ.அலஸ்ரிகா, 3ஆம் இடம்-என்.மேனகா,
இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கும் சிறப்புப் பரிசில்களும் நிறைவு செய்தவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ந-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடங்களின் பின்னர் உறுகாமத்துக்கு மின்சாரம்

மட்டக்களப்பு,மே 21
மட்டக்களப்பு, உறுகாமம் கிராமத்துக்கான மின்விநியோகத் திட்டம் 30 வருடங்களின் பின்னர் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த மின் விநியோகத் திட்டம் ஒரு கோடி 40 லட்சம் ரூபா செலவில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ச)

# பொதுபல சேனாவின் உருவாக்கத்தால் முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைவு

## ஹிஸ்புல்லாஹ் கூறுகிறார்

காத்தான்குடி, மே 21
பொதுபலசேனா அமைப்பின் உருவாக்கத்தால் முஸ்லிம் தலைமைகள் ஒன்றுபட்டுள்ளன. அதனால் பொது பல சேனா அமைப்புக்கு முஸ்லிம்கள் நன்றி கூற வேண்டும்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

தற்கால அரசியல் சூழ்நிலை தொடர்பாக காத்தான்குடி மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பல்வேறு விமர்சனங்களுக்கும் சமூகங்களின் கேள்விகளுக்கும் மத்தியிலேயே நாம் பணியாற்றி வருகிறோம். எமக்குப் பதவிகள் பெரிதல்ல. முஸ் லிம் தலைமைகளை ஒன்றிணைத்த பொதுபலசேனா வினருக்கு நன்றி கூறுகின் றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுபலசேனா மதவாதத்தை தூண்டுவது மட்டுமன்றி தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே உறவு விரிசலை ஏற்படுத் துவது தெரிகிறது என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இது பௌத்த நாடு ... சர்வமத வழிபாடுகள் ... கூடாது என்று பொது பல சேனா அறிவித்திருப்பமை யானது நாட்டின் ஐக்கியத்துக்கு விடுக்கப்பட்ட சவால்.

இந்த அமைப்பு குறித்து சிறுபான்மை கட்சித் தலைவர்கள் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியபோது அந்த அமைப்பு வெகு விரைவில் கலைந்து விடும் என்றார். எனினும் அவர்கள் நாளுக்கு நாள் வளர்கின்றனர். இலங்கை பௌத்த நாடென ஏற்க முடியாதவர்களை நாட்டை விட்டு வெளியேறச் சொல்லும் அளவுக்கு அவர்கள் வந்துவிட்டனர். இந்த நாட்டில் ஜாதி, மதம் இல்லை என்ற ஜனாதிபதியின் கூற்று பொய்யாகிவிடும் போலுள்ளது - என்றார். (ச-ரி)

# நல்லிணக்கத்துக்கு அரசு ஒருபோதும் தயாரில்லை!

## பொது எதிரணி குமுறல்

முள்ளிவாய்க்காலில் மரணித்த தமது உறவுகளை நினைவு கூரும் உரிமையையும் வடக்கு மக்களிடமிருந்து 'பறித்தெடுத்துள்ள அரசு, சமாதானத்துக்கும் - நல்லிணக்கத்துக்கும் தாம் ஒருபோதும் தயாரில்லை என்பதை மீண்டும் எடுத்துக்காட்டியுள்ளது என்று பொது எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

தமது இறந்த உறவுகளை நினைவுகூரும் உரிமை வடக்கு மக்களுக்கு இருக்கின்றதென அரசின் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையிலும் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலும் நாட்டில் இருவேறு சட்டங்களை அரசு நடைமுறைப்படுத்துகின்றமையானது நாட்டை மேலும் சர்வதேச நெருக்கடிக்குள் சிக்கவைக்கும் நிலையையே ஏற்படுத்தும் என்றும் அவை அரசுக்கு எச்சரிக்கை விடுத்தன.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவை மேற்கண்டவாறு தெரிவித்தன.

இதன்போது ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்தவெற்றிவிழாவை அரசு பெருமெடுப்புடன் கொண்டாடியது. யுத்தத்தில் மரணித்த தமது உறவுகளை நினைத்து அஞ்சலி செலுத்தும் உரிமை வடக்கு மக்களுக்கு இருக்கின்றதென அரசின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் தெளிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கு மக்கள் தமது இறந்த உறவுகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தியதையும் அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. மன்னாரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் உள்ளிட்ட பலரை அரசு கைது செய்துள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனுக்கும், அமெரிக்காவுக்கும் வடக்குத் தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதாக அரசு உறுதியளித்துள்ளது. அதுமட்டுமல்லாது, இது விடயம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட அறிவிப்பும் விடுத்துள்ளார். இவ்வாறான நிலையில் நாட்டில் இரண்டு சட்டங்களை அரசு நடைமுறைப் படுத்துமாயின், சர்வதேச நெருக்கடிக்குள் நாட்டை மேலும் சிக்கவைக்கும் நிலையையே ஏற்படுத்தும் - என்றார்.

இதன்போது நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்த வெற்றியின் நான்காண்டு நிறைவை அரசு கொண்டாடியது. இனவாதத்தை ஊக்குவிக்கும் இந்த அரசுக்கு எவர் வீரர் என்பது தெரியவில்லை. யுத்தத்தில் இறந்த, உடல் அவயவங்களை இழந்த இராணுவத்தினர் குறித்து அரசு பேசவில்லை. மறுபக்கத்தில் யுத்தத்தில் இறந்த தமிழர்கள் பற்றியும் அது பேசவில்லை.

யுத்தத்தில் இறந்த தமது உறவுகளுக்கு வடக்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர். மனவேதனையுடன் அஞ்சலி செலுத்திய அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதனூடாக நல்லிணக்கம் என்பது பொய் என்பதை அரசு எடுத்துக்காட்டியுள்ளது. தமது இறந்த உறவுகளை நினைவுகூரும் உரிமை வடக்கு மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் தாம் ஒருபோதும் தயாரில்லை என அரசு இதனூடாக மறுபடியும் எடுத்துக்காட்டியுள்ளது - என்

# இந்திய வீட்டுத் திட்ட பணிகள் ஒத்திவைப்பு

மட்டக்களப்பு,மே 21
இந்திய வீட்டுதிட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில்; நடைபெறவிருந்த முதற்கட்ட வேலைகளுக்கான ஆரம்ப வைபவங்கள் பிற்போடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பிக்கப் படவிருந்த வைபவங்கள்நாளை புதன் கிழமை நடைபெறவுள் ளன. இந்த வீடமைப்பு திட்டத் துக்காக ஆரம்ப வைபவங் கள் பிற்போடப்பட்டுள்ளன என்று செங்கலடி பிரதேச செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்திய உதவி வீட்டுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத் தில் மட்டக்களப்பு மாவட்டத் தில் 2000 வீடுகளும், அம் பாறை மாவட்டத்தில் 1000 வீடுகளும், திருகோணமலை மாவட்டத்தில் 1000 வீடுகளும் என்ற எண்ணிக்கையில் மொத்தமாக 4000 வீடுகள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா



**மேடம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.



**இடபம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். இளைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.



**மிதுனம்:** மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். முன்கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும்.



**கடகம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச்செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரிவடையும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.



**சிங்கம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும்.



**கன்னி:** எதிர்காலம் பற்றிய பயமும், வீண் பதற்றமும் வந்து செல் லும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உதித்யோகத்தில் அதிகாரியிடம் விவாதத்தைத் தவிருங்கள்..

**நாளை**

*வைகாசி-08 புதன்கிழமை 22.05.2013*
*திதி: துவாதசி பி.ப. 04.16 வரை*
*நட்சத்திரம்: சித்திரை பி.இ. 01.21 வரை*
*சுபநேரம்: 04.22 - 05.52 வரை*
*இராகுகாலம்: 11.52 - 01.22 வரை*



**துலாம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உதிதியோகத்தில் பணிகளை விறைந்து முடிப்பீர்கள்.



**விருச்சிகம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**தனுசு:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். அரசுக் கரியங்களில்ம் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.



**மகரம்:** மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உறவினர்கள், நண்பர்களுடன் உரிமையுடன் பேசி பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.



**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.



**மீனம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 6 | 9 | 1 | | | 7 | |
| | | | | | | | 2 | 1 |
| | 3 | | | | 7 | 8 | 9 | 5 |
| 6 | | 9 | 2 | 3 | 8 | | 1 | |
| | | | | | | | | |
| | 7 | | 4 | 5 | 1 | 9 | | 6 |
| 9 | 6 | 3 | 1 | | | | 8 | |
| 5 | 4 | | | | | | | |
| | 8 | | | 7 | 6 | 3 | 4 | |

## நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 6 | 9 | 1 | 5 | 4 | 7 | 3 |
| 7 | 9 | 5 | 3 | 8 | 4 | 6 | 2 | 1 |
| 4 | 3 | 1 | 6 | 2 | 7 | 8 | 9 | 5 |
| 6 | 5 | 9 | 2 | 3 | 8 | 7 | 1 | 4 |
| 3 | 1 | 4 | 7 | 6 | 9 | 2 | 5 | 8 |
| 2 | 7 | 8 | 4 | 5 | 1 | 9 | 3 | 6 |
| 9 | 6 | 3 | 1 | 4 | 2 | 5 | 8 | 7 |
| 5 | 4 | 7 | 8 | 9 | 3 | 1 | 6 | 2 |
| 1 | 8 | 2 | 5 | 7 | 6 | 3 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொதுமக்களின் காணிகளில் அகழப்படும் சுண்ணக்கற்கள்

வலி. வடக்கு, மே 21
வலி வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் அதிகளவான சுண்ணக்கற்கள் எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி அகழப்பட்டு வருகின்றன.
அதனால் கடற்கரையோரங்களை அண்டிய பகுதிகள் பெரும் ஆபத்தை எதிர்நோக்குவதாக அந்தப்பகுதியில் வாழும் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின் றனர்.
நாளாந்தம் இங்குள்ள காணிகளில் இராட்சத இயந்திரங்களின் உதவியுடன் சுண்ணக்கற்கள் கிளறப்பட்டு உழவுயந்திரங்கள், லொறிகளில் கொண்டு செல்லப்படுகின்றன.
எனினும் பிரதேச சபையோ அன்றிப் பிரதேச செயலகமோ எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாது பார்த்துக்கொண்டு இருப்பதாகவும் பொதுமக்கள் மத்தியில் இருந்து விமர்சனங்களும் எழுந்துள்ளன.
ஏற்கனவே சுண்ணக்கற்கள் அகழ்வதற்கு யாருக்கும் அனுமதி வழங்கக் கூடாதென யாழ் மாவட்ட அதிபராக இருந்த எஸ்.கணேஸினால் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டு இருந்தமையும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.
யாழ் குடாநாட்டின் நீர்வளம் உவர் நீராகப் பாதிப்படையக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாக ஏற்கனவே நீர்ப்பரிசோதனையை மேற்கொண்ட அறிஞர்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ள போதிலும் அதனைக் கருத்தில் கொள்ளாது சுண்ணக்கற்கள் அகழ்ந்து எடுக்கப்படுவது பொது மக்களிடையே எதிர்காலத்தில் சுற்றுச் சூழல் மற்றும் குடிதண்ணீர் பற்றிய பயத்தை ஏற்படுத்தி வருகின்றன. (ந-86)



சுவாமி சின்மயானந்தரின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இல.9 செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரில் அமைந்துள்ள யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்ற வேளை.... (ஒ-14)

# காரைநகரில் அஸ்வமேத மஹாயாகம் நெடுந்தீவில் இருந்து குதிரைகள் வருகை

## நேற்று ஆரம்பமானது ஊர்வலம்

யாழ்ப்பாணம், மே 21
காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணிய ஆலயத்தின் அஸ்வமேத மஹா யாகத்தை முன்னிட்டு விசேடமாக நேற்று இடம்பெறவுள்ள குதிரை ஊர்வலத்துக்கென அவசரமாக நெடுந்தீவில் இருந்து ஏழு குதிரைகள் நேற்றுமுன்தினம் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டன.
காரைநகரில் முதல் தடவையாக இடம்பெறும் அஸ்வமேத மஹா யாகத்தில் விசேடமாக தென் பகுதி மற்றும் வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் குதிரைகளும் ஊர்வலத்தில் பங்கு கொள்ளவுள்ளன.
ஆலயத்தின் 365 நாள் நித்திய உற்சவ பூர்த்தியும் அஸ்வமேத மஹா யாகமும் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும்
குதிரைகள் ஊர்வலம் நேற்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆலயத்தில் இருந்து புறப் பட்டு சிட்டிவேரம் அம்மன் கோயிலைச் சென்றடைந்தது. இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சிட்டிவேரம் அம்மன் ஆலயத்தில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு ஆலயத்தை வந்தடையும். நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆலயத்தில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு காரைநகரை வலம் வரும் .
அஸ்வமேத மஹாயாகக்கிரியைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.25 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறும். மறுநாள் முதலாம் திகதி சனிக்கிழமை இறுதி நாள் கிரியைகள், விசேட பூசைகள், சுவாமி வீதிவலம் இடம்பெறும்.
இறுதி நாளான சனிக்கிழமை ஆலய முன்றிலில் யாழ். நுண்கலைப்பீட மாணவர்கள் 108 பேர் கொண்ட நாட்டிய நிகழ்வும், கலை நிகழ்வுகளும் நடைபெறும். (ஒ-14-7)

# இருநாள் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம் மே21
இலங்கை கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாணவர்களுக்கான உடற்திறமையை விருத்தி செய்வதற்கான உடற்பயிற்சி சம்பந்தமான இருநாள் வதிவிட பயிற்சி நெறி இன்றும் நாளையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும்.
வட மாகாண கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் வதிவிடப்பயிற்சி நெறியில் வட மாகாணத்துக்கு உட்பட்ட கல்வி வலயங்களில் இருந்து தலா இரண்டு ஆசிரியர்கள் வீதம் 68 பேருக்கும் ஆசிரிய ஆலோசகர்கள் 12பேருக்கும் மற்றும் கல்வி வலயங்களின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளாகளுக்கும் இந்த பயிற்சி வழங்கப் படவுள்ளது.
கொழும்பு கல்வி அமைச்சில் இருந்து வருகை தரவுள்ள வளவாளர்கள் இவர்களுக்கான இரண்டு நாள் வதிவிட பயிற்சி முகாமை நடத்தவுள்ளதாக வட மாகாண உடற்கல்வி பிரதிக்கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவித்துள்ளார். (ந-86)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்



யாழ்ப்பாணம், மே 21
வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன பயிலுநர்களின் ஆக்கக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் கொக்குவிலில் ஆடியபாதம் வீதியிலுள்ள அந்த நிறுவனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத்திறன் மேம்பாட்டுநிறுவனத்தின் போஷகருமான ஈ.சரவணபவனும் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராசா, அதிதிகளாக வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் நாகரஞ்சினி ஐங்கரன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.கனகசபாபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளையோர் சபையினர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.
நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா கூறியதாவது:-
வாழ்க்கைத் திறன் தொடர்பான விழாவில் பங்கேற்றமை மகிழ்ச்சி தருகின்றது. இதில் வாழ்க்கைத் திறன் மேம்பாட்டுக் கற்கை நெறி மாணவர்களின் உற்பத்திகளை பார்த்தேன். இவர்களுக்கு பயிற்சி அளித்த ஆசிரியர்களுக்கும் நிறுவனத்தினருக்கும் வாழ்த்துக்கள். தற்கால உலகில் சந்தைப்படுத்தல் வசதிகள் அதிகம்.
ஆடைகளின் அலங்காரம் செய்து ஏற்றுமதியில் ஈடுபடும் நாடுகள் ஏராளம். இவற்றில் பெண்களே முன்னணி வகிக்கின்றனர். அதேநேரம் ஆண்கள் சமையற் கலைகளில் ஈடுபடுவதும் அதிகரிக்கின்றது. பெண்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் குடும்பத்தில் செல்வத்தைப் பெருக்குவதற்கும் இந்த நிறுவனம் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.- என்றார்.
நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உரையாற்றுகையில்;
''இதுவரை 75 மாணவர்கள் இந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்றுள்ளனர். தொடர்ந்து தொழில் தேர்ச்சியுடன் கூடிய கணினி மற்றும் ஆங்கில பாடநெறி என்பன இங்கு நடைபெறுகின்றன. ஏற்கனவே கல்வி கற்ற மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் சான்றிதழ் இன்னும் பெறுமதியானது. சர்வதேச தரத்திலான சான்றிதழ் பெறுவதற்கு இது நல்ல சந்தர்ப்பம்'' - என்றார்.
இந்த நிகழ்வில் பயிற்சிநெறியை பூர்த்தி செய்த 4 ஆம் அணி மாணவர்களும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.
இங்கு பயிற்சி பெற்ற மாணவர்கள் ''எமக்கு இந்தப் பயிற்சி பெரும் நன்மைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. நமக்குத் தொழில் வாய்ப்பு இதன் மூலம் தான் கிடைத்தது.'' என்றனர்.
பயிற்சிகளை வழங்கிய ஆசிரியர் பாக்கியம் கூறும்போது, ''மாணவர்கள் ஆர்வமாக பயிற்சி பெற்றனர். இது அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கிடைத்த நல்ல சந்தர்ப்பம்'' என்றார். (ஓ-ஈ)

# சிரமதானப் பணியில் பொது அமைப்புக்கள்

## அச்சுவேலி வைத்தியசாலையில்

அச்சுவேலி, மே 21
அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் பொது அமைப்புக்கள் சிரமதானப் பணியை மேற்கொண்டு வைத்தியசாலையின் சுற்றுப்புறச் சூழலை துப்புரவு செய்து சீராக்கம் செய்து வருகின்றன. அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தும் வகையில் பொது அமைப்புக்கள் சனி, ஞாயிறு விடுமுறை நாள்களில் சிரமதானப் பணியை தாங்களாகவே முன்வந்து செய்து வருகின்றன.
சிரமதானப் பணியில் கடந்த சனிக்கிழமை அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டு வைத்தியசாலையின் வளவு மற்றும் பூந்தோட்டம் என்பனவற்றை துப்புரவாக்கி சீர் செய்தனர். இவர்களின் முன்னுதாரணமான செயற்பாட்டுக்கு வைத்தியசாலை ஊழியர்களும் நோயாளர் நலன்புரி சங்கமும் பாராட்டுத் தெரிவித்துள்ளன.
கடந்தஞாயிற்றுக்கிழமை நோயாளர் நலன்புரி சங்க நிர்வாகிகளும் வைத்தியசாலை ஊழியர்களும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். சிரமதானப் பணியில் ஈடுபட விரும்பும் பொது அமைப்புக்கள், நிறுவனங்கள், கடமை நேரத்தில் வைத்தியசாலை பொறுப்பதிகாரி மற்றும் வைத்தியசாலை மேற்பார்வையாளர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயலாளர் சு.மோகன்ராஜன் அறிவித்துள்ளார். (ந-11)



# சுய உதவிக்குழு நியமனம்

யாழ்ப்பாணம், மே 21
பிரதேச செயலகங்களுக்கு நேரடியாகச் சென்று மாற்று ஆற்றலுடையோர் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட சுய உதவிக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழுவின் தலைவராக வீ.குருபகராசா, உப தலைவராக ஏ.றங்கடம்ப நாதன், செயலாளராக நடராஜா விஜயலட்சுமி, உப செய லாளராக சி.அன்ரனிகுயின், பொருளாளராக மோ.நந்தகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இந்த சுயஉதவிக்குழு ஒத்துழைப்பு வழங்குமாறும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். (ந-14)

# வெசாக் தினத்துக்காக கடைகள் மூடப்படும்

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 25 ஆம் திகதி சனிக்கிழமையும் வர்த்தக நிலையங்கள் மூடப்படும். இந்த இரு தினங்களிலும் மதுபானக் கடைகள், சிறப்பு அங்காடிகளில் மதுபான விற்பனை நடைபெற மாட்டாது. இறைச்சி வெட்டும் நிலையங்கள், பந்தய நிலையங்கள், சூதாட்டக் கூடங்கள், இறைச்சிக் கடைகள் அனைத்தும் மூடப்படும். அதேநேரம் சிறப்பு அங்காடிகளில் இறைச்சி விற்பனையை நிறுத்துமாறும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார் என உதவி மாவட்டச் செயலர் எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் மின் நிலுவை செலுத்தாதோர் இணைப்பு 'கட்'

வவுனியா,மே 21
வவுனியா மாவட்டத்தில் மின்சார நிலுவைக் கட்டணத்தைச் செலுத்தாத ஆயிரத்து 500 பேரின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.
இரண்டு மாதத்துக்கு மேலாக மின்சாரக் கட்டணம் செலுத்தாது 500 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை நிலுவையாகக் கொண்டுள்ளவர்களின் மின் இணைப்புகளே தற்போது துண்டிக்கப்பட்டுள்ளன.
இரண்டு மாதங்களுக்கு மேலாக மின்சாரக் கட்டணம் செலுத்தாதவர்களுக்கு சிவப்புப் பட்டியல் அனுப்பப்பட்டதுடன், அது தொடர்பாக மின்சாரப் பாவனையாளர்களுக்கு ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னரே மின் துண்டிக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக கிளிநொச்சிப் பிராந்திய பிரதம மின் பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

> இரண்டு மாதத்துக்கு மேலாக மின்சாரக் கட்டணம் செலுத்தாது 500 ரூபாவை நிலுவை யாகக் கொண்டுள்ளவர்களின் மின் இணைப்பே 'கட்'.

கடந்த இரண்டு வாரங்களாக செட்டிக்குளம், மறவன்குளம், தரணிக்குளம் மற்றும் பூவரசங்குளம் போன்ற பகுதிகளிலேயே பெரும் எண்ணிக்கையானோரின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.
தொடர்ந்தும் இந்தத் துண்டிப்புப் பணிகள் இடம்பெறும். எனவே இதுவரை நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்கள் உடன் அவற்றைச் செலுத்தி ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் பிரதம மின் பொறியியலாளர் கேட்டுள்ளார். (ம-400)



கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனின் மணிவிழாவின்போது, கல்லூரியின் முகிழ்நிலை மாணவிகள் வரவேற்பு நடனத்தில் ஈடுபட்டு பார்வையாளர்களைக் கவர்ந்தனர். (ஒ-86)

**சீட்டிழுப்பு முடிவுகள்**

எமது அலுவலகத்தில் 24.04.2013 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற அதிஸ்டலாப சீட்டிழுப்பு விவரம்
முதலாம் பரிசு: 06709, 2 ஆம் பரிசு: 17680, 3 ஆம் பரிசு: 17873
ஆறுதல் பரிசுகள்: 14429, 14864, 07698, 01805, 14400, 11870, 18737, 03016, 13246, 09015
மேலும் 22.05.2013, 29.05.2013 ஆம் திகதிகளில் (புதன்கிழமை)பி.ப 1.00 மணிக்கு இந்த அதிஸ்டலாப சீட்டுகளுக்கான பரிசில்கள் வழங்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.
தலைவர், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் (C/9498) (6.11)

# வெறிச்சோடின இந்திய ஆன்மிகத் தலங்கள்

## இலங்கை சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததால்

சென்னை,மே 21
அரசியல் பிரச்சினைகள் மற்றும் தமிழகத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களால் தமிழகத்துக்குச் செல்லும் இலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதுடன் ஆன்மிகத் தலங்களும் வெறிச்சோடிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தஞ்சைப் பெருங்கோயில் திருச்சி மலைக்கோட்டை, ராமேஸ்வரம், மதுரை உட்பட தமிழகத்தில் உள்ள பல்வேறு ஆன்மிகத் தலங்களைப் பார்வையிட வருடந்தோறும் இலங்கையில் இருந்து பெருமளவு தமிழ், சிங்கள, முஸ்லிம் சுற்றுலாப் பயணிகள் வருவதுண்டு. இதனால் தமிழக அரசும் சுற்றுலாப் பயணிகள் மூலம் அதிகளவு வருமானம் பெறுவதுடன் தமிழக வியாபாரிகளும் கூடியளவு வருமானங்களைப் பெற்று வந்தனர்.
தமிழகத்தில் வைத்து பிக்குகள் தாக்கப்பட்டதை அடுத்து இலங்கையில் இருந்து சிங்கள சுற்றுலாப் பயணிகள் தாமும் தாக்கப்படலாம் என்ற அச்சத்தில் பயணத்தை தவிர்த்து வருகின்றனர்.
அதேசமயம் ஆன்மிகத் தலங்களில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றச் செல்லும் இலங்கைத் தமிழர்களும் அரசியல் பிரச்சினைகளால் இதனைத் தவிர்த்து வருகின்றனர்.
கடந்த வருடங்களில் சராசரியாக 2 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் இருந்து விமானங்கள் மூலம் தமிழகத்துக்கு வருகை தந்த அதேசமயம் இந்த வருடம் எதிர்பார்க்காத அளவு இந்த எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## விதை நெல் விநியோகம்

துணுக்காய் கமநலசேவை நிலையத்தினால் விவசாயிகளுக்கு விதைநெல் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த கால போகத்தில் வெள்ளம் காரணமாகப் பேரழிவுகளை எதிர்கொண்ட விவசாயிகள் சிறுபோக நெற் செய்கைக்குத் தேவையான விதை நெல்லைப் பெற்றுக் கொள்வதில் இடர்களை எதிர்கொண்டனர்.
இந்த நிலையில் விதை நெல்லை வழங்குவதில் கமநலசேவை நிலையம் ஈடுபட்டுள்ளது. (க-18)

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 22.11.1954
விண்ணகம் 18.05.1997



**செல்லத்துரை மனோரஞ்சன்**

திதி: பூர்வபக்க ஏகாதசி

கனவுகள் பலவோடு நாம் காத்திருந்த வேளையிலே
காலன் கணக்கை முடித்து பதினாறு ஆண்டுகள் ஆகியும்
ஆறாது ஆறாது அழுதாலும் தீராது உமது ஞாபகங்கள்
தேறாது தேறாது எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.
(36713)(6.11)

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## சேவைநலன் பாராட்டு -21.05.2013

**செல்வி துரைராசா இராகினி - SLTS -2-I**
**(அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)**



சரஸ்வதியின் நாயகியாம் ராகினி
நல்கிய சேவைதனை
நயக்கின்றோம்.
கணித பாடத்தினை சிறார்களுக்கு
துரிதமாக விளங்கவைத்து அவர்
எதிர்கால வாழ்வுக்கு உரமூட்டி
ஒழுக்கத்தோடு நற்பழக்கத்தையும்
புகட்டிய பணிதனை பாராட்டி
பல்லாண்டு நலமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் சேவை விவரம் :**
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி - 01.09.1992 - 21.06.2010
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை - 22.06.2010 - இன்றுவரை

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
(சி/9499)(5.6)

**வாடகைக்குண்டு**

சுன்னாகம் பஸ்நிலையத்துக்கு அருகில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும். (35715) (6)
தொ.பே: 021 224 0405, 077 853 5599

**வீடு வளவு விற்பனைக்கு**

தண்ணீர் தொட்டி வீதி, மூளாய் தெற்கு சுழிபுரத்தில் 14 ¼ பரப்பு வீடு வளவு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ளவும்:
T.P: 021 4912180 (சி/9497) (10,6)

## நான்காம் ஆண்டின் நினைவு நெருடல்கள்



**ஐ.யோகராணி**
பிறப்பு – 11.04.1974
இறப்பு –05.05.2009



**ஐ.செல்வராணி**
பிறப்பு – 19.05.1972
இறப்பு –05.05.2009



**ஐ.லோகராணி**
(இந்துக்குட்டி)
பிறப்பு – 29.08.1983
இறப்பு –05.05.2009

கொல்லாது கொல்லும் 2009.05.05 இன் கொடிய நிகழ்வுகளின் நினைவு இன்று
நீங்கள் நீண்ட தூரம் சென்று நெடு நாள்கள் ......ஆண்டுகள் நான்கு
எம்மால் இன்றுமே மறக்க முடியவில்லைஅன்று நடந்ததை.........நடந்தவற்றை
அன்று தவித்ததை விட அதிகம் தவிக்கின்றோம் இன்று...
உங்கள் அம்மாவோ ஊனின்றி, உறக்கமின்றி உடலிலே ஊறிய பலநோய்களுடன்
உம உருவப்படத்தை தொட்டு வணங்குகிறாள் துடைக்கின்றாள், துவண்டு அழுகின்றாள்
துடிக்கின்றாள் அரற்றுகின்றாள் ஆறுதல் கூற முடியவில்லை- எம்மால்
அறிமுகமற்றவர் பிடியில் உம் உடன் பிறந்தவன் என்றெண்ணி அனுதினமும் அழுகிறாள்.
ஆண்டவனின் அத்தனை வடிவங்களிடமும் அனுதினமும் கெஞ்சுகிறாள்..
அவனை மீட்டுத் தரும்படி ஆண்டவனின் விடைதான் என்னவோ...அறியமுடியவில்லை
மாறாத நினைவுகளை மனதில் சுமந்து மாண்டுபோன நான்காவது ஆண்டில்
மனம் கசிந்து நிற்கின்றோம் உமை நினைந்து.....

இல. 497/7, கல்மடுநகர், இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி **ஜெயமணி நடராஜா**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

அன்பால் அரவணைத்து அறிவால் வழிகாட்டி
உன் உள்ளத்து உறுதியால் எமை உலகத்தில்
உயர்த்திவைத்து காலம் எல்லாம் எமை
காத்திட்ட அன்னையே கணப்பொழுதில் எமைக்
கைவிட்டுச் சென்றாயே!

[illegible]சாபுர.
மொறட்டுவ. 011 263 2823

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் புதிய மின்சாரப் பட்டியல்

இன்றிலிருந்து புதிய மின்சாரப் பட்டியலில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களாவன:-

| நுகர்வோர் பிரிவும் மாதந்தோறும் நுகரும் மின். அளவும் | வலு அளவீடு | நிலையான கட்டணம் | எரிபொருள்நெகிழ்வு கட்டணம் (முழு வலுவுக்கான கட்டண விகிதம்) |
|---|---|---|---|
| வீட்டுப் பாவனை (D-1) | | | |
| 0-30 | 5.00 | 30 | 25 |
| 31-60 | 6.00 | 60 | 35 |
| 61-90 | 8.50 | 90 | 40 |
| 91-120 | 15.00 | 315 | 40 |
| 121-180 | 20.00 | 315 | 40 |
| 181-210 | 24.00 | 315 | 40 |
| 211 - 300 | 26.00 | 315 | 40 |
| 301- 900 | 32.00 | 315 | 40 |
| More Than 900 | 34.00 | 315 | 40 |
| சமயத் தலங்கள் (R-1) | | | |
| 0-30 | 1.90 | 30 | 0 |
| 31-90 | 2.50 | 60 | 0 |
| 91-120 | 3.50 | 180 | 0 |
| 121-180 | 5.00 | 180 | 0 |
| >180 | 7.00 | 240 | 0 |

## சங்கானை நித்தியானந்தக் குருக்கள் கொலை வழக்கு;

# முதலாவது சந்தேகநபருக்கு பிணை

யாழ்ப்பாணம்,மே 21
சங்கானையில் நித்தியானந்தக் குருக்களைச் சுட்டுக்கொலை செய்துவிட்டு நகைகளைக் கொள்ளையடித்தமை மற்றும் அளவெட்டியில் 5 பேருக்கு துப்பாக்கியைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்து நகைகளைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டுக்களில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முதலாவது சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்தேகநபர் தொடர்பான பிணை விண்ணப்பம் யாழ். மேல்நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

2010 டிசெம்பர் 12 ஆம் திகதி சங்கானையில் நித்தியானந்தக் குருக்களை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டதோடு அவரது மகனான சிவானந்த சர்மாவுக்கு சுட்டுக் காயம் விளைவித்து அவரிடமிருந்து 2 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இந்தக் குற்றச்சாட்டில் அளவெட்டியைச் சேர்ந்த காசிநாதன் முகுந்தன், பாலசுப்பிரமணியம் சிவரூபன் மற்றும் பேதுறுரனே புரகேவஹே குணசேன ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதற்கு முன்னர் 2010 டிசெம்பர் 3 ஆம் திகதி அளவெட்டி கணேசபுரம் பகுதியில் துப்பாக்கியைக் காட்டி துரை நடராசா மற்றும் 5 நபர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதோடு, அதே இடத்தைச் சேர்ந்த நாகராஜா ஜெயபாலசிங்கம் என்பவரின் வீட்டினுள் இரவு நேரம் அத்துமீறி நுழைந்து 3 பேரிடம் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன. கொள்ளையடிக்கப்பட்டவற்றுள் கைத்தொலைபேசி ஒன்றை ஏழாலையைச் சேர்ந்த இராமலிங்கம் ரதன் என்பவருக்கு விற்றதாகவும், கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை தன்வசம் வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

அந்தக் குற்றச்செயலுடன் காசிநாதன் முகுந்தனுக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றஞ்சாட்டில் இரண்டு வெவ்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

முதலாவது சந்தேகநபரான முகுந்தன் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதன்படி, இரண்டு வழக்குகளிலும் அவர் பிணையில் விடுவிக்க அனுமதிக்கப்பட்டது. அதன்படி 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், தலா 3 லட்சம் ரூபா பெறுமதியான 4 ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார். தவிர மாதாந்தம் முதலாம், 15 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை மற்றும் மானிப்பாய் பொலிஸ் நிலையங்களில் கையெழுத்திட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. (ஓ-4)

## பிழையான நேரத்தில் இலத்திரனியல் கடிகாரம்

யாழ்ப்பாணம், மே 21
யாழ். பஸ் நிலையப் பகுதியில் வர்த்தக விளம்பர அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இலத்திரனியல் மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகாரம் பிழையான நேரக் கணிப்புடன் இயங்கிக் கொண்டிருப்பதை காணமுடிகிறது.

இந்த நேரங்காட்டிக்கோபுரம் அமைக்கப்பட்டு சில வாரங்களிலேயே பல மணி நேரத்தை பிழை யாகக் காட்டி வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான பொதுப்பணிகள் விளம்பரத்தை மட்டும் இலக்காகக் கொள்ளாது மக்களுக்கு தொடர்ந்து பயனுள்ளதாக அமைய குறித்த விளம்பரதாரர்கள் அவதானிப் புக்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகுமென மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர். (ந-135)

## அரியாலையில் திருட்டு முயற்சி இளைஞரால் முறியடிப்பு

கொழும்புத்துறை, மே 21
அரியாலை கொட்டுக் கிணற்றடிப் பகுதியில் தனது குடியிருப்பு வாசலில் நின்று கொண்டிருந்த பெண்ணின் 5 பவுண் சங்கிலியைத் திருட மேற்கொண்ட முயற்சி அந்தப் பகுதி இளைஞர்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழிப்பறித் திருட்டு முயற்சி தொடர்பாக தெரிய வருவதாவது; சைக்கிளில் பாலைப் பழத்தை எடுத்துச் சென்று விற்பனை செய்வதில் ஈடுபட்டிருந்த ஒருவர் அந்த வீதியால் வந்து கொண்டிருந்த அ.தயானந்தினி என்பவரின் தங்கச் சங்கிலியை அறுத்துள்ளார்.

அந்தப் பெண் கூச்சலிட்ட போது கலைவாணி சனசமூக நிலைய இளைஞர்கள் உதவிக்கு ஓடி வரவே திருடன் சங்கிலியையும் சைக்கிளையும் போட்டு விட்டு ஓடி பற்றைக்குள் ஒளிந்து கொண்டான்.

இளைஞர்கள் சுற்றி வளைத்து திருடனைப் பிடித்து நையப்புடைத்து துரத்தி விட்டனர். இவ்வாறான சம்பவங்களால் ஆள் நடமாட்டம் குறைந்த அந்தப் பகுதியில் பெண்கள் தமது பயணங்களை மேற்கொள்வதில் அச்சநிலை தோன்றியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். (ந-135)

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம்

## புனரமைப்புப் பணிகள் ஆரம்பம் பழைய மாணவர் சங்கத்தால்

குருநகர், மே 21
யாழ். மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டு வருகிறது. இரண்டு பெக்கோவின் உதவியுடன் இந்த மைதானத்தின் மணல் கிண்டி எடுக்கப்படுகிறது.

மைதானத்தில் மழை காலங்களில் நீர் நிரம்பி வெள்ளமாக காணப்படுவதனால் விளையாட்டு நிகழ்வுகள் தடைப்பட்டு வந்தன. மைதானத்துக்கு மணல் நிரப்பி நீர்தேங்கி நிற்காமல் செய்வதுடன் இந்த மைதானம் புனரமைக்கப்பட்டு பவிலியன் கட்டப்படவேண்டும் என கொழும்பில் இயங்கும் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி இருந்தது. இதற்கமைய நிதி சேகரித்து வருவதாக இதன் செயலாளர் எம். மகேந்திரநாதன் தெரிவித்தார்.

இந்தப் புனரமைப்புக்கு சுமார் ரூபா 70 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் உள்ள யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் நலன் விரும்பிகளிடம் சுமார் ரூபா 20 லட்சம் திரட்டப்பட்டு இவ் வேலை நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-51)


## பணியாளர்கள் தேவை

1) பொது முகாமையாளர்
2) நிர்வாக அலுவலர்

கிளிநொச்சியில் சமூக நல நோக்குடன் இயங்கி வருகின்ற அரிசி மற்றும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற நிறுவனமொன்றுக்கு மேற்படி 2 பணிநிலைகளுக்குமான பொருத்தமான திறமை, அறிவு, அனுபவம் மற்றும் அர்ப்பணிப்பு மிக்க இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்களை 05.06.2013 இற்கு முன்பாக வேண்டி நிற்கின்றது. தகுதியுடைய பெண்கள் முன்னுரிமை பெறுவர்.

*விண்ணப்ப முகவரி:*
அருணன்,
6, ஸ்ரீகுணானந்த மாவத்தை,
தேக்கவத்தை, வவுனியா.

email:arunanecs@gmail.com
விவரங்களுக்கு:
0771435887
(36722) (10.6)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
08.07.1953

உதிர்வு
31.05.2012

அமரர் நடராசா வரதராசா

அன்பாலும் பண்பாலும் அனைவரையும்
அரவணைத்த எங்கள் அன்புத் தெய்வமே
என்றும் உங்கள் நினைவில் நிலைத்திருக்கும்
தெய்வமாய் நின்று எம்மை என்றும் வழி நடத்துவீர்

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள்.

வேம்படி,
காரைநகர்.
(36719) (6.11)


## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், மே 21
தொல்புரம் கொட்டியம்பதி ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கென நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை காலை 9 மணிக்கு இடம்பெறும். ஆலய தேர்த்திருப்பணிச் சபையின் தலைவர் சிவசம்பு முத்துராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஸ்தபதி துரைராசா வினோதரன் தலைமையிலான சிற்பக் கலைஞர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர். (ந-9)

## சங்காபிஷேகம்

வண்ணை வடமேற்கு பூரணாம்பா, புட்கலாம்பா சமேத அரிகரி புத்திர ஐயனார் ஆலயத்தில் இன்று காலை சங்காபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ந)


## தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் ஒன்றிற்கு கணக்காளர் (பெண்), உதவியாளர் (ஆண்) தேவை.
தொ.பே:077 806 6313, 077 614 2571
(36720)(6.11)



## விற்பனைப் பிரதிநிதி தேவை

உதிரிப்பாக விற்பனை நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலம், சிங்களம் ஓரளவு தெரிந்த விற்பனைப் பிரதிநிதி தேவை.
தொ.பே:077 162 8206,
077 304 7813
(36718)(6.11)



ircon இர்கொன் இன்டெர்நெஷனல் லிமிடெட்
(இந்திய அரசுக்குச் சொந்தமானது)
56ஏ, புகையிரத நிலைய வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா, தொலைபேசி இல: 024-2226784

அறிவித்தல் 01/2013

இலங்கையில் ரயில்பாதை நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வரும் இர்கொன் இன்டெர்நெஷனல் லிமிடெட்டுக்கு (இந்திய அரசுக்குச் சொந்தமானது), ஓமந்தை-பளை-காங்கேசன்துறை ரயில்பாதை நிர்மாணப் பணிகளில். குறிப்பிட்ட துறைகளில் அனுபவம் மிக்கவர்கள் தேவைப்படுகின்றனர். அவ்வாறானவர்களை விநியோகிக்க விருப்புக் கொண்ட மனிதவள முகவர் நிறுவனங்கள், கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு தங்களது மனித வளத்தை வழங்குவதற்கான விருப்பினை, 2013 மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் வெளிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

| இலக்கம் | பிரிவு | தேவைப்பாடு (இலக்கங்களில்) |
|---|---|---|
| 01 | தண்டவாளம் வளைப்போர் | 10 |
| 02 | தச்சன் | 10 |
| 03 | கொத்தனார் | 10 |
| 04 | நில அளவையாளர்(சிவில்) தானியங்கு மட்டம்/நிலப்பரப்பு ஆய்வு | 02 |
| 05 | திறமையான வேலையாட்கள் | 40 |

இர்கொன் இன்டெர்நெஷனல் லிமிடெட்டுக்காகவும்
அதன் சார்பாகவும்
மேலதிகப் பொது முகாமையாளர்/PH
(ப/8623)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பெயர்ச்சிப் பலன்கள்

■ [illegible] மீனம் எம்.பி.ராமன்



## மேடம்

### குரு மாறும் காலம்

*திருக்கணிதப்படி ஸ்ரீ விஜய ஆண்டு வைகாசி 13 ஆம் திகதி 27.5.2013 திங்கட்கிழமை [ முற்பகல் 11 மணி 50 நிமிடத் துக்கு ] குருபகவான் ரிஷப ராசி மிருக சீட நட்சத்திரம் 2 ஆம் பாதத்திலிருந்து மிதுன ராசிக்கு பிரவேசிக்கிறார்.*

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)

பொதுப் பலன்

குருபகவான் 27.5.2013 முதல் செவ்வாய் பகவானை அதிபதியாகக் கொண்ட உங்கள் மேஷ ராசியிலிருந்து மூன்றாம் இடமான மிதுன ராசியில் சஞ்சரிக்கிறார். பொதுவாகப் பார்க்கும் போது, எதிலும் நிதானமாக அடியெடுத்து வைத்துச் செயற்படும் நீங்கள் மேலும் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டி இருக்கும். தற்போது இருக்கும் நிலையை உயர்த்த அதிகப்படியான உழைப்பு தேவைப்படும். நினைத்தது எல்லாம் இதுவரை நடந்திருந்தாலும், இனி கால தாமதங்களும், நேர விரயங்களும் ஏற்படும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு மருத்துவச் செலவுகளுக்கு செலவு செய்ய வேண்டி வரலாம். வெளியூர் பயணம் செல்லும்போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. சில நேரங்களில் பயணம் தள்ளிப் போனாலும் அதைப்பற்றிக் கவலைப் பட வேண்டாம். அது உங்களின் நன்மைக்கே தள்ளிப்போகிறது என்று எடுத்துக் கொள்ளவும்.

பணம் கொடுக்கல் வாங்கலில் சீரான நிலையில் சில தடங்கல் ஏற்பட வாய்ப்புள்ளது. தெரிந்தவர் என்றாலும் முன் நின்று பணம் பெற்றுத் தருவதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தேவையில்லாமல் நீங்கள் சங்கடங்களுக்கு ஆளாக நேரிடும்.

தேவையற்ற வீண் விவாதங்களில் கலந்து கொள்ளாமல் சற்றுத் தள்ளி நிற்பது நல்லது. வலிய வரும் அரட்டைகள் மூலம் மனத் தாங்கல்கள் ஏற்படலாம். எனவே அதில் கலந்து கொள்ள வேண்டாம். வீட்டிலும் ஏட்டிக்குப் போட்டியாக விவாதம் செய்வதில் எந்த விதமான பயனும் இருக்கப் போவதில்லை.

தொழிலில் ஓரளவுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். இதுவரை நிலவிவந்த சீரான வேகம் மேலும் அதிகரித்து நல்ல நிலைக்கு வரும் வாய்ப்புள்ளது. உணவு, இரும்பு, கட்டுமானப் பொருள்கள் போன்ற தொழிலில் நல்ல பலன் கிடைக்கும். போட்ட முதல் இரட்டிப்பாகாவிட்டாலும் ஓரளவு நல்ல வருமானம் வந்து கொண்டே இருக்கும்.

குடும்பத்தில் அவ்வப்போது சின்னச் சின்ன பிரச்சினைகள் தலைதூக்க ஆரம்பிக்கும். அதைப் பெரிதுபடுத்தாமல் சாமர்த்தியமாகக் கையாளக் கற்றுக்கொள்ளுங்கள். வாய் வார்த்தை முற்றும் நிலையில் வீண் பிரச்சினைக்கு ஆளாக நேரிடும் என்பதை மனதில்வைத்துக்கொள்ளுங்கள். அவ்வப்போது ஏற்படும் பணப்பற்றாக்குறையை சீர் செய்வீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து பண உதவி கிடைக்க வாய்ப்புள்ளது. அதை ஆடம்பரமாக செலவு செய்வதை தவிர்த்து நாளைக்க வேண்டுமென சேர்ப்பது பயனளிக்கும்.ஏற்கனவே இருந்து வந்த கடன் தொல்லைகள் ஓரளவு குறையும்.

வீடு, நிலம் வாங்கும் யோகம் உள்ளது என்றாலும் ஒரு முறைக்கு இரு முறை சொத்தில் வில்லங்கம் உள்ளதா என்பதை ஆராய்ந்த பின்னரே வாங்க வேண்டும். அவசரப்பட்டு பின் அவதிப்பட வேண்டாம்.

குருபகவான் அருளைப் பெற வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து அவருக்குரிய காயத்ரி மந்திரத்தை உச்சரித்து பக்தியுடன் வணங்கி வர வேண்டும். முதலில் விநாயகப் பெருமானையும், பின் குருபகவானையும், பிறகு உங்கள் ராசிக்கு அதிபதியான செவ்வாய் பகவானையும் வணங்க வேண்டும்.

### பெண்களுக்கு

தன்னம்பிக்கை மிக்க உங்களுக்கு சற்று சோர்வு ஏற்படும் நேரம். கவலைப்படாமல் எதிர்கொள்ள உங்களைத் தயார்படுத்திக்கொள்ளுங்கள். குடும்பத்தில் ஏற்படும் பொருளாதார சிக்கல்களை ஓரளவு சமாளிப்பீர்கள். உடல் நிலையில் கவனம் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எதற்கும் தளர்ந்து விடாதீர்கள்.

### மாணவ மாணவிகளுக்கு

மிகவும் கவனமாக இருக்க வேண்டிய காலமிது. மேற்படிப்பு படிப்பதற்கான தேர்வில் முழு மூச்சாக ஈடுபடுங்கள். உங்களால் சாதிக்க முடியும் என்று நம்புங்கள். கெட்ட நண்பர்களின் சகவாசத்தை விட்டொழிப்பது நல்லது.

**27.5.2013 முதல் 9.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருக சீரிட நட்சத்திரம், மூன்றாம் பாதம் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் கால கட்டத்தில் பல்வேறு இன்னல்களுக்கு ஆளான நீங்கள் சுற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்ளலாம். வியாபாரத்தில் போதுமான வருமானம் வரும். நீண்ட காலமாய் கட்ட முடியாத கடன் தொகையை செலுத்துவீர்கள். பிள்ளைகளின் கல்வி நிலை திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் நிலவி வந்த அசாதாரண நிலை நீங்கும். பெற்றோர்களால் ஏற்படும் மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க முடியாது. மனைவியுடனான உறவு பலப்படும். மகிழ்ச்சி பெருகும்.

**10.6.2013 முதல் 24.6.2013**

இப்போது குருபகவான் மிருக சீரிட நட்சத்திரம் ''நான்காம் பாதம்'' செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் மேஷ ராசிக்கு அதிபதியான செவ்வாய் ஓரளவு நல்ல பயன்களையே வழங்கியுள்ளார். எதைப் பற்றியும் கவலைப்படாமல் தொடரும் உங்கள் முயற்சிக்கு விரைவில் வெற்றி வாய்ப்பு அமையும். அலுவலகத்தில் உங்கள் மேலதிகாரிகளிடம் சுமுகமான உறவு மூலம் சம்பள உயர்வு, பதவி உயர்வு பெறுவீர்கள். சக ஊழியர்களுடனான வீண் விவாதங்களில் கலந்து கொள்ளாமல் தவிர்ப்பது நல்லது.

**25.6.2013 முதல் 8.7.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம் 'முதல் பாதம்' ராகு சாரத்தில் சஞ்சரிப்பதால், முன்பு இருந்த கடன் தொல்லைகள் ஓரளவுக்கு குறைய வாய்ப்பிருக்கிறது. நீங்கள் கேட்ட இடத்தில் உடனே பணம் கிடைக்காவிட்டாலும் ஒன்றிரண்டு தடங்கலுக்குப் பின் வந்து சேரும். மனைவி வழி உறவின் மூலம் ஆதாயம் வந்து சேர வாய்ப்புள்ளது.

பிள்ளைகளின் கல்வி நிலை திருப்திகரமாக இருக்கும். கவலைப்பட வேண்டியதில்லை. இன்னும் படிப்பில் கவனம் செலுத்தச் சொல்வது நல்லது. நல்ல நண்பர்களின் நட்பின் மூலம் மகிழ்ச்சி ஏற்படும்.

தொழிலில் ஓரளவு சமநிலையில் வருமானம் வந்து கொண்டிருக்கும். புதிய தொழில் ஆரம்பிப்பதோ, அதிக முதலீடு செய்வதோ தற்போதைக்கு வேண்டாம்.

**9.7.2013 முதல் 23.7.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், இரண்டாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இதை வைத்துப் பார்க்கும்போது கடந்த காலத்தில் நிலவி வந்த துன்பம் முற்றிலும் குறைந்து காணப்படும். பொருளாதாரத்தில் ஓரளவுக்கு மன நிறைவு ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் நிலவிவந்த பகை விலகி, நட்புத் தொடரும்.

குடும்பத்தில் நிலவி வந்த சிறு சிறு மோதல்கள் விலகி மகிழ்ச்சி ஏற்படும். தாய், தந்தையின் ஆசைகளை ஓரளவேனும் நிறைவேற்றுவீர்கள். ஆடம்பரச் செலவுகளுக்கு இடம் கொடுக்காதீர்கள்.

**24.7.2013 முதல் 8.8.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், மூன்றாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கும் வேளையில் பார்க்கும் போது, குருபகவான் மிகுந்த அளவுக்கு கொட்டித் தருவான் என்று எதிர்பார்க்காவிட்டாலும், நல்ல பலன்களை அளிக்கவுள்ளார்.

தொழிலாளர்கள் தொழிற்சாலையில் நடக்கும் போராட்டங்களில் கலந்து கொள்ளாமல் தவிர்ப்பது நல்லது. அதே போல் தொழிற்சாலைகளில் வேலையின் போது சிறுசிறு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனத்துடன் இருக்கவும்.

**9.8.2013 முதல் 26.8.2013**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இதன் அடிப்படையில் பார்க்கும்போது, குருபகவான் பல நல்ல பலன்களையே வழங்கியுள்ளார். வீடு, நிலம், பொன்னாபரணம் வாங்கும் யோகம் ஏற்பட வாய்ப்புள்ளது. எதிர்பாராத இடத்திலிருந்து பண உதவி கிட்டும்.

பெற்றோர்களின் மருத்துவச் செலவு வந்தாலும், அதை சுலபமாக சமாளித்து விடுவீர்கள். எந்த காரியம் தொடங்கினாலும் பெற்றோர்களின் ஆலோசனையை கேட்க மறந்து விடாதீர்கள்.

**27.8.2013 முதல் 19.9.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம், தனது சொந்த சாரத்தில் சஞ்சரிப்பதால் தொழிலில் இதுவரை இருந்து வந்த மந்த நிலை அடியோடுவிலகி, சுமுக நிலை ஏற்படும். புதிய தொழில் நல்ல முறையில் கைகொடுக்கும். அதிக முதலீடுக்கு மிகுந்த ஆலோசனைக்குப் பின் தொடங்குவதே சிறந்ததாகும். வீட்டுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்கள் வாங்கிக் குவிப்பீர்கள். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்த இட மாற்றம் ஏற்படும்.

**17.9.2013 முதல் 18.10.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூசம் நட்சத்திரம், இரண்டாம்பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிப்பதால் அதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது கோபத்தைக் கொஞ்சம் கட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அவசப்பட்டு எந்தவிதமான முடிவுகளையும் எடுக்கக் கூடாது.

அக்கம் பக்கத்து வீட்டினரோடு இணக்கமான உறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வீண் விவாதங்கள், சண்டைசச்சரவுகளில் கலந்து கொள்ள வேண்டாம். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த லாபம் கிட்டும், கண், காது போன்றவற்றில் சிறு சிறு பாதிப்புகள் ஏற்பட்டு பின் விலகும். வெளியூர் பயணங்களின்போது கவனம் தேவை.

**19.10.2013 முதல் 13.11.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூசம் நட்சத்திரம், மூன்றாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இதன் அடிப்படையில் வைத்துப் பலன்களைப் பார்க்கும் போது, தொழில், வியாபாரம் சிறந்து விளங்கும். கூட்டு வியாபாரத்தில் வருமானம் பெருகும். கட்டுமானப் பொருள்கள், தானிய வகைகளில் அதிக லாபம் கிடைக்கும்.

சின்னச்சின்ன உடல் உபாதைகளுக்கு ஆளாக நேரிட்டு பின், சீராகும். பிள்ளைகளின் படிப்பு சிறந்து விளங்குவதன் மூலம் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகள் மூலம் வருமாணம், புகழ் இரண்டும் வந்தடையும். புதிய வாய்ப்புகளால் மகிழ்ச்சிக் கடலில் மிதப்பார்கள்.

**14.11.2013 முதல் 11.12.2013 வரை**

இப்போது குருபகவான் வக்கிர நிலையில் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில் சஞ்சரிப்தால் இந்த காலக்கட்டத்தில் எதை செய்வதாக இருந்தாலும், பேசுவதாக இருந்தாலும் மிகுந்த கவனமுடன் நடந்து கொள்ள வேண்டும். கொடுக்கல் வாங்கலில் அறிமுகமில்லாத நபர்களுக்கு முன் நின்று பிணைக் கையெடுத்திடுவது மிகுந்த சிரமத்துக்கு ஆளாக நேரிடும்.

குடும்பத்தில் சிறு சிறு பூசல்கள், மனஸ்தாபங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. தொழிலாளர்கள் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிட்டாமல் சிரமப்படுவீர்கள். தங்கள் மேலதிகாரிகளிடம் சமுகமான சூழ்நிலை ஏற்பட தற்போது வாய்ப்பில்லை. வெளியூர் பயணங்களில் வீண் அலைச்சலும் உடல் சோர்வும் ஏற்படும்.

**2.12.2013 முதல் 2.1.2014 வரை**

இப்போது குருபகவான் தொடர்ந்து வக்கிர நிலையிலேயே புனர்பூச நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் சஞ்சரிப்பதால் எண்ணிய காரியங்கள் தள்ளிப்போகும். சகோதரன், சகோதரி திருமணம் சற்றுத் தள்ளிப் போகலாம். விருந்தினர் வருகையால் ஏற்படும் செலவுகளுக்குச் சிரமப்பட்டு போவீர்கள்.

நண்பர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. வேண்டாத விவாதங்களில் கலந்து கொள்ளாமல் சற்று விலகியே நில்லுங்கள். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்பு ஆபத்தை ஏற்படுத்தும் பொறுமையாகப் பேசிப் புரிய வையுங்கள். தொழிலாளர்களுக்கு போதிய வருமானம் இருந்தாலும் அதை விட பல மடங்கு செலவு முன் நின்று பயமுறுத்தும். எதற்கும் மனைவியிடம் ஆலோசனை கேட்கத் தயங்காதீர்கள்.

**3.1.2014 முதல் 26.1.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதத்தில் தொடர்ந்து வக்கிர நிலையிலேயே சஞ்சரிப்பதினால் இந்தக் கால கட்டத்தில் 'பொறுத்தவர் பூமி ஆள்வார்' என்பதைப் போல் சற்றுப் பொறுமையாகத்தான் இருக்க வேண்டும். விவசாயத்தில் மந்தநிலையே தொடர்ந்து நீடிக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்காமல் வருந்துவீர்கள்.

பிள்ளைகளின் மேற்படிப்புக்கு செலவு செய்ய மிகவும் சிரமப்பட்டுப் போவீர்கள். பெற்றோர்களின் மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க இயலாது. எதிர்பார்த்த இடத்திலிருந்து கொடுத்த கடன் திரும்பப் பெற்றாலும் கூடவே அதற்கான செலவுகளும் ஓடிவந்து முன்னிற்கும். வாகனம், நிலம், பொன்னாபரணம் வாங்கும் திட்டம் சற்றுத் தள்ளிப்போகும்.

**27.1.2014 முதல் 11.3.2014 வரை**

இப்போது குருபகவான் வக்கிர நிவர்த்தி அடைந்த நிலையில் திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிப்பதால் ஓரளவுக்கு உங்களுக்கு நன்மைகளைச் செய்யப் போகிறார். வீட்டுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்கள் வாங்கிக் குவிப்பீர்கள். குடும்பத்துடன் கேளிக்கை நிகழ்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். மனைவியுடனான உறவு பலப்படும். சுற்றத்தார்கள் இணக்கமாகப் பழகுவார்கள். கிடைக்கவே கிடைக்காது என்று கொடுக்கப்பட்டிருந்த கடன் எதிர்பாராத சமயத்தில் வந்து சேரும். பொருளாதாரம் சீர்படும். தொழில், வியாபாரம் சிறந்து விளங்கும். பருத்தி, நெல் நல்ல இலாபம் கொண்டு வந்து சேர்க்கும்.

**12.3.2014 முதல் 6.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிப்பதை வைத்துப் பார்க்கும் போது உங்களை இந்த குரு மகிழ்ச்சியோடு வைத்துக் கொள்ளப் போகிறார். நினைத்திருந்த இடமாற்றம் வந்து சேரும். மனைவி அல்லது பெற்றோர் வகையிலான சொத்து வர வாய்ப்புள்ளது.

பிள்ளைகளின் கல்வித்தரம் மேம்படும் மேற்படிப்புக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பீர்கள். பொருளாதாரம் எதிர்பார்த்த அளவு உயரும். பொன்னாபரணம், ஆடை, அணிமணிகள் வாங்கிப் போடுவீர்கள். நிலம் மற்றும் வீடு மீது செய்யப்படும் முதலீடு இரட்டிப்புப் பயனைக் கொடுக்கும்.

**7.5.2014 முதல் 25.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிப்பதால் தொட்ட காரியம் அனைத்தும் நல்லதாகவே நிறைவேறும். தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு, தொழிலாளர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். போராட்டம், பேரணிகளை தவிர்த்த விட்டு முதலாளியிடமான உறவை மேம்படுத்த முயலுங்கள்.

விவசாயத்துக்கு தேவையான உபகரணப் பொருள்களை வாங்குவீர்கள். கடன் தொல்லை ஓரளவுக்கு நீங்கும். புதியதாக எதைத் தொடங்கினாலும் பெற்றோர்களின் ஆலோசனையைப் பெறத் தயங்காதீர்கள்.

**26.5.2014 முதல் 11.6.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்ச்திரம், மூன்றாம் பாதத்தில் சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். அதன் அடிப்படையில் பார்க்கும் போது கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் மூலம் நல்ல வருமாணம் பெருகும். அதை ஆடம்பரமாக செலவு செய்யாமல் சேமிப்பது நல்லது. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முதலாளிகளின் கருணையால் சம்பள உயர்வு பதவி உயர்வு ஏற்பட வாய்ப்புள்ளது.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6ஆம் மாத நினைவஞ்சலி

**21.05.2013**

அமரர் **சுப்பிரமணியம் நவரத்தினம்**



அன்பின் திருவுருவாய்
ஆற்றலின்
பிறப்பிடமாய்
இன்னும்
இயங்குகின்றாய்
ஈட்டி அறங்காத்த நீ
உற்சாகம்
உள்ளவர்களாய்
ஊட்டி வளர்த்தாய் நீ
எப்படி மறப்போம் நாம்
ஏன்? உற்றார்,
உறவினர்,
நண்பர்களும் தான்
ஐயம் இன்றி
ஆறுமாதங்கள்
கழிந்ததே
எப்போ நாம் ஆறுதல்
அடைவோம்

தோற்றம் 07.02.1945 — மறைவு 21.12.2012

பந்தமேனி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(சி/15007)

## Excavator (பெக்கோ) வாடகைக்கு வழங்கல்

பனை வடலிகளை மீள்நடுகை செய்தல் மற்றும் இதர விவசாயம் தொடர்பான வேலைகளை நிறைவேற்றுவதற்கு, மணித்தியால அடிப்படையில் மேற்படி இயந்திரம் வாடகைக்கு விடப்படும்.

பசுபதி சீவரத்தினம்,
பனை அபிவிருத்திச் சபை, (பனை் ஆராய்ச்சி நிறுவனம்)
கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:- 021 2057065, 021 2057067

(சி/15003)(23-16-6)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை கனிஸ்ர யூடித் இன்
அன்புத் தந்தை

**சுவக்கீன்பிள்ளை பேசுதாசன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரிய வட்டம். (36724) (6.11)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHI2A புறொயிலர் குஞ்சுகள் 23.05.2013 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**றாஜீவ்**

நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொடர்பு:- 0776090926
கதிர்வேளான் கிளிநொச்சி.
தொடர்பு: 021 2280007 (36739) (23-16)

## பெண் எழுதுநர் தேவை

யாழ். நகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு பெண் எழுதுநர் தேவை. யாழ். நகருக்கு அண்மையில் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0773364055
(06.30.pm தொடக்கம் 09.30pm இற்கு இடையில் தொடர்புகொள்ளவும்) (36731)

## தவறிவிட்டது

கல்வியங்காடு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருடைய தங்கச் சங்கிலி நல்லூர் ஆலயத்திற்கும் மாவட்ட அலுவலகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு:- 0776213678, 0774569692

## மரண அறிவித்தல்

### இளையவி குட்டி



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி குட்டி 19.05.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவி- சின்னி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையவியின் அன்பு மனைவியும், கிருஷ்ண பிள்ளை (வவுனியா), மணியம் (வவுனியா), பூபாலசிங்கம் (டோகா), குணம், கனகமணி, ராணி, காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, ராசு, தேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2013) செவ்வாய்க்கிழமை ஸ்ரீமுருகன் பாடசாலைக்கு அருகில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன்மார்
இ.கிருஷ்ணபிள்ளை,
இ.மணியம்,
இ.பூபாலசிங்கம்,

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 5671111, 021 5676666

Workroom Based Practical ...........
**IELTS 7.0** Guaranteed
Reading- Writing -Listening -Speaking
Video & Audio தொழிநுட்ப முறை
1st class free
**Special Class can be arranged for Doctors, Engineers, Managers, Accountant, Etc.**
- பிரபல்யமான கொழும்பு (British Council Special) ஆசிரியர் குழாமின் வழிகாட்டல்.
- விசேட தனிப்பட்ட கவனம்.
- Past Paper, Model Paper & Mock Exam

விரும்பிய நேரம்
CALL 0777 444 225
**IiSEEES NALLUR CAMPUS**
762, Point Pedro Road, Nallur.0212224728.

## மரண அறிவித்தல்

### தம்பையா கந்தையா (கார் கந்தையா)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கந்தையா நேற்று (20.05.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- தையல்முத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா- மாரிமுத்து தம்பதியரின் மருமகனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், விமலநாதன், றங்கநாதன், (ஜேர்மனி), விஜியநாதன், செந்தில்நாதன் (லண்டன்), நாகரஞ்சினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரேமலதா, விஜயசரோயா, சம்ஷாட் (லண்டன்), ஜெகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெசீபன், அஸ்வினி, சாய்ராம், சங்கவி, அபிநந்தன், சயான் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பரமேஸ்வரி, ஆறுமுகம் மற்றும் சண்முகலிங்கம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் கோபாலபிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(21.05.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

34/5, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு.
021 321 4421


தகவல்:
குடும்பத்தினர்.

(36728)(5.6)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 29.03.1975 — மறைவு 21.05.2012

அமரர் **நவரத்தினம் சிறீஸ்குமார்**



கடமை கடந்த
கருணைக் கடலே
நம்மூர் கற்பக தருவே
காலன் உங்களைக்
காவு கொண்டதால்
இடிவிழும் போதெல்லாம்
கருகி போகின்றோம்
இடிதாங்கியாய் நீங்கள்
அருகில் இல்லாததால் ஐயா
இதயம் துடிக்க மறந்தாலும்

கண் இமைக்க மறந்தாலும்
ஆண்டு ஒன்று ஆனாலும்
எங்கள் மனதில் உங்கள்
நினைவுகள் என்றும்
நரைக்காதையா
என்றும் உங்கள்
நினைவுகளுடன்

ம.தேவராசா குடும்பம்,
கிராம அலுவலகம்,
நெல்லியடி கிழக்கு.

(சி/15001)

எம் அன்புத் தெய்வத்தின் ஈராண்டு நினைவின் நிழல்

## பார்வதிப்பிள்ளை திருநாவுக்கரசு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 12 |
| 07 | 06 |
| 1938 | 2011 |

திதி: ஏகாதசி 21.05.2013

ஈராண்டு போனதம்மா சொர்க்கத்தில்
உம் நிழல் சேர்ந்து
ஆனாலும் எம் நினைவின் நிழலாய்
என்றும் நீ வாழ்கின்றாய்
இன்பத்தை தந்து எமை வளர்த்த
எம் தெய்வமே - இன்று
துன்பத்தை கொடுத்து இறைவனடி சேர்ந்தாயே
எமதுயிர் போகும்வரை இத்துயரம் மாறாது
உன் நினைவின் நிழலும் எமைவிட்டுப் போகாது
என்றும் உன் ஆத்ம சாந்திக்காக
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீரங்கம்,
374, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 01.03.1922 — உதிர்வு 21.04.2013

### கணபதிப்பிள்ளை நடராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



வட்டுவத்தை, அல்வாய் கிழக்கு, அல்வாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் கணபதிப்பிள்ளை நடராசா அவர்கள் 21.04.2013 சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் நேரடியாகப் பங்காற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி செய்த அனைவருக்கும் நன்றி நவில்வதுடன், அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.05.2013) செவ்வாய்க்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து ந.ப.12 மணியளவில் இடம்பெறும்சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுவத்தை,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(சி/9500) (23-16-6)

T.ஜெயக்குமார் குடும்பம்.
(லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு விழாவுக்கு விண்ணப்பிக்கலாம்



மாங்குளம், மே 21
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களை ஒன்றிணைத்து விளையாட்டு விழா ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
வவுனியா, புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள விளையாட்டு விழா, புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.
எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள விளையாட்டு விழாவில், போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பிரிவு பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-421)

## கயிறிழுத்தலில் சரஸ்வதி முதலிடம்

கைதடி,மே 21
கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட கயிறிழுத்தல் போட்டியில், கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழக 'பி' அணி சம்பியனானது.
இறுதிப்போட்டியில் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழக 'பி' அணியும் கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் பலப்பரீட்சையில் இறங்கின. ஆக்ரோசமாக இடம்பெற்ற போட்டியில் கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை நீண்ட பலப்பரீட்சையின் பின்னர் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழக 'பி' அணி வீழ்த்தி சம்பியனாகத் தெரிவாகியது.
தொடரின் இரண்டாம் இடத்தை கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக்கழகமும், மூன்றாம் இடத்தை கைதடி நவசக்தி விளையாட்டுக்கழக அணியும் பெற்றுக்கொண்டன. (ற-288)

### தேசிய மட்ட உதைபந்து

## நீர்கொழும்பு சென்.மேரிஸ் சம்பியன்

இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சங்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் நீர்கொழும்பு சென்.மேரிஸ் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனானது.
நேற்று திங்கட்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கோட்டை சேவவிதண கல்லூரி அணியை எதிர்த்து நீர்கொழும்பு சென். மேரிஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டன. ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோலினை பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
ஆட்டம் வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் நீர்கொழும்பு சென். மேரிஸ் கல்லூரி அணி 3.2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.
இறுதியாட்டத்தில் சிறந்த வீரராக நீர் கொழும்பு சென். மேரிஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த கே. டி.சுமேதபெர்ணன்டோ தெரிவானார்.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கிண்ணிய மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கண்டி சிறி சுமங்கல வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களை பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன .
இதில் கிண்ணிய மத்திய மகா வித்தியாலயம் 4.2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.
(23)



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனாகத் தெரிவாகியது. (ற-86)

### மன்னார் பிறீமியர் லீக்

## யங்ஸ்ராரை வீழ்த்தியது விக்ரறிஸ்



யாழ்ப்பாணம், மே 21
மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக் கழகம் நடந்தும் '20/20' மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில்கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் சென். விக்ரறிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் விக்ரறிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 18.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றது. அதில் பிரதீப் 20 ஓட்டங்களையும், பிரதீபன், சுயன் ஆகியோர் முறையே 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.
பந்துவீச்சில் விக்ரறிஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் தீலிபன் 3 இலக்குகளையும், செவ்வராஜா 2 இலக்குகளையும், மிரிலின், ஆனந், விவேக், அஜித் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
92 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.விக்ரறிஸ் விளையாட்டுக் கழக அணி 14.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றிபெற்றது.
அதில் விவேக் 32 ஓட்டங்களையும், யோஜிசண் 24 ஓட்டங்களையும், அஜித் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் மயூரன் 3 இலக்குகளையும், விஜயன், வேங்கை, குமார் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
(ற-23)

### கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள்

## பதக்கம் வென்றார் வவுனியா வீராங்கனை



யாழ்ப்பாணம், மே 21
இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில், நேற்றுமுன்தினம் இடம் பெற்ற 23 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா சைவ பிரகாச மகளிர் கல்லூரி மாணவி கே.லேகாசினி 1.002 நேர பெறுதியில் ஓடி முடித்து இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். (ற-23)

### நக்கீரன் உதைபந்தாட்டத் தொடர்

## இறுதியாட்டத்தில் பொமர்ஸ்



யாழ்ப்பாணம், மே 21
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நக்கீரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.
நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பொமர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழகம் மோதியது.
விறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 4:0 என்ற கோல் கணக்கில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது பொமர்ஸ் விளையாட்டுக் கழகம்.
முன்னதாக இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-23)

## வவுனியா வீரர்கள் வூசோவில் பதக்கம்



யாழ்ப்பாணம், மே 21
இலங்கை வூசோ சங்கம் நடத்திய கனிஷ்ட பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான வூசோ போட்டியில் வவுனியா மாவட்ட வீரர்கள் மூவர் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.
இதில் ஆண்களுக்கான 56 கிலோ பிரிவுப் போட்டியில், வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் சசிதரன் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.
52 கிலோ பிரிவுப் போட்டியில் வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் றொக்சன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.
75 கிலோ பிரிவு போட்டியில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாண்வன் சதுசன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.
(ற-23-400)



கலாநிதி விளையாட்டுக் கழகம்



தோப்புக்காடு விளையாட்டுக் கழகம்

காரைநகர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்ய[illegible] தைபந்தாட்டத் தொடரில் கலாநிதி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூர் வெளியே சன்றைசர்ஸ் உள்ளே



கொல்கத்தாவை 5 இலக்குகளால் வீழ்த்தி, பெங்களூரை பின்தள்ளி அடுத்த சுற்றுக்கு முதல்முறையாக முன்னேறியது ஹைதராபாத் சன்றைசர்ஸ் அணி. ஐ.பி.எல்.தொடரின் 72ஆவது போட்டி நேற்றுமுன்தினம் ஹைதராபாத் ராஜீவ் காந்தி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பின் விளிம்பில் நின்ற சன்றைசர்ஸ் அணியும், கொல்கத்தா நைட் றைடர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அணிசார்பில் பிஸ்லாவும், கம்பீரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். ஆரம்பத்தில் சற்று நிதானமாக ஆடியது இந்த இணை. எனினும் 5ஆவது பந்துப்பரிமாற்றத்தில் பிஸ்லா (15), பெரேராவின் பந்தில் வைற்றிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க தொடர்ந்து கம்பீர் (10) ஓட்டங்களுடன் 'ரன்அவுட்' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். கலிஸ் (24), மோர்கன் (9), பாட்டியா (1), மனோஜ் (1), டேக்ஷா (5), நரேன் (1) சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். யூசுப்பதான் மாத்திரம் தனித்து நின்று போராடினார். இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து கொல்கத்தா அணி 130 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. யூசுப்பதான் (49) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருந்தார். பந்துவீச்சில் சன்றைசர்ஸ் அணி சார்பில் ஸ்டெய்ன் 2 இலக்குகளையும், ராஜன், பெரேரா, மிஸ்ரா, சர்மா தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

131 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கியது சன்றைசர்ஸ் அணி. அணிசார்பில் பார்த்திப் படேலும், டுவானும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இருவரும் சிறந்த இணைப்பாட்டத்தை அணிக்கு பெற்றுக்கொடுக்க 12 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 89 ஓட்டங்களை எட்டியது சன்றைசர்ஸ் அணி. 89 ஓட்டங்களைப் பெற்ற போது டுவான் (42) அப்துல்லாவின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து பார்த்திப் படேலும் 47 ஓட்டங்களுடன் அரைச் சதத்தை தவறவிட்டு ஆட்டமிழந்தார். எனினும் அணியின் வெற்றிவாய்ப்பை இந்த இணையின் ஆரம்ப இணைப்பாட்டமே உறுதி செய்தது. தொடர்ந்து வந்த விஹாரி (6), வைற் (2), பெரேரா (4) சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். எனினும் 18.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சன்றைசர்ஸ் அணி 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. கொல்கத்தா அணி சார்பில் இக்பால் அப்துல்லா 3 இலக்குகளையும், சமி ஒரு இலக்கையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக சன்றைசர்ஸ் அணியின் பார்த்திப்படேல் தெரிவானார். புள்ளி அடிப்படையில் 5ஆவது இடத்தில் இருந்த சன்றைசர்ஸ் அணி இந்த வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை பின்தள்ளி 4ஆவது இடத்துக்கு முன்னேறியது. இதன்மூலம் அடுத்த சுற்றான பிளேஓவ் சுற்றுக்கு தகுதிபெற்றது. ஐ.பி.எல்.தொடரின் முதன்முதலாக இந்த வருடம் அறிமுகமான ஹைதராபாத் சன்றைசர்ஸ் அணி தனது முதலாவது தொடரிலேயே பிளேஓவ் சுற்றுக்குத் முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(16)

# வீரர்களின் சூதாட்டம் மன உளைச்சலைத் தருகிறது

### ராஜஸ்தான் அணித்தலைவர் ட்ராவிட்



சென்னை, மே 21

ஸ்பொட் பிக்ஸிங் சூதாட்டத் தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தனது அணி வீரர்கள் மூவர் கைதாகியுள்ளமை தொடர்பில் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணித் தலைவர் ராகுல் ட்ராவிட் தெரிவித்துள்ளார்.

ஶ்ரீசாந், அன்கீத் சவான் மற்றும் அஜீத் சந்திலா ஆகிய மூவரும் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தனக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதாகவும் ராகுல் ட்ராவிட் கூறினார்.

நீதிமன்ற உத்தரவின் பேரில், கிரிக்கெட் வீரர்கள் மூவரும் 5 நாட்களுக்கு பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர்.

ஶ்ரீசாந் மீதான குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என்று அவரது வழக்குரைஞர்கள் கூறுகின்றனர்.

மற்ற வீரர்களும் அப்பாவிகள் என்று அவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர்.

வேகப்பந்து வீச்சாளர் ஶ்ரீசாந்த் பல சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார். 27 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 53 ஒருநாள் போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார்.

போட்டிகளின் கட்டங்களை முன்கூட்டியே தீர்மானிக்கும் பந்தய சூதாட்ட குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளான வீரர்களை இந்திய கிரிக்கெட் சபை போட்டிகளிலிருந்து இடைநிறுத்தி வைத்துள்ளது.

பந்தய சூதாட்டக்காரர்கள் 11 பேரும் காவல்துறையால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை இரவும் மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையிலேயே அணித்தலைவர் ட்ராவிட் தனது வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

ஐ.பீ.எல். தொடரில் ராஜஸ்தான் அணி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(16)

# பிளேஓவ் சுற்றுக்கு முன்னேறியமை மிகவும் அற்புதமானதே!

### சன்றைசர்ஸ் அணிவீரர் தவான் கூறுகிறார்



சென்னை, மே 21

ஐ.பி.எல். தொடரில் முதல் நான்கு அணிகளுள் ஒன்றாக இடம்பிடித்து, அடுத்த சுற்றுப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றமை மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக சன்றைசர்ஸ் ஹைதராபாத் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷீகர் தவான் தெரிவித்துள்ளார்.

முதல் 4 அணிகளுள் ஒன்றாக இடம்பிடிக்க, கொல்கத்தா நைட் றைடர்ஸ் அணிக்கெதிரான இறுதிப் போட்டியை வெற்றிகொண்டேயாக வேண்டும் என்ற நிலையில் கலந்து கொண்ட சன்றைசர்ஸ் ஹைதராபாத் அணி, இறுதி நேரத்தில் தடுமாறிய போதிலும் வெற்றி பெற்றுக் கொண்டது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த ஷீகர் தவான், சன்றைசர்ஸ் ஹைதராபாத் அணி இறுதிக்கட்டப் போட்டிகளுக்குத் தகுதிபெறும் என யாருமே தங்கள் அணிக்கான வாய்ப்புக்களை வழங்கியிருக்காத நிலையில், முதல் 4 அணிகளுள் ஒன்றாக இடம்பெற்றமை அற்புதமானது எனத் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டியில் சன்றைசர்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான பார்த்திவ் பட்டேல், ஷீகர் தவான் இருவரும் முதலாவது இலக்குக்காக அதிரடியாக ஆடி 89 ஓட்டங்களைப் பகிர்ந்தமை அவ்வணியின் வெற்றிக்கு முக்கியமான காரணமாக அமைந்தது- என்றார்.

(16)



# வோர்ணர் மீது விசாரணை

ஆஸ்திரேலியா, மே 21

ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் டேவிட் வோணர் மீதான ஒழுக்கவியல் விசாரணைகள் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது 'டுவிட்டர்' கருத்துக்கள் தொடர்பாகவே இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

ஐ.பி.எல் போட்டிகளுக்காக இந்தியாவில் தங்கியிருந்த டேவிட் வோணர், டுவிட்டரில் ஊடகவியலாளர்கள் மீது மோசமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டிருந்தார். சில ஆஸ்திரேலிய ஊடகவியலாளர்களின் கருத்துக்களுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்த அவர், அதன் பின்னர் மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை தனது கவனத்தைச் செலுத்தியிருந்ததோடு, தற்போது டேவிட் வோணர் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பியுள்ள நிலையில், அவர் மீது விசாரணைகளை நடத்த எதிர்பார்த்துள்ளது. எதிர்வரும் புதன்கிழமை அவர் மீதான விசாரணை இடம்பெறும் என அறிவித்துள்ள ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை, டேவிட் வோணரின் கருத்துக்கள் ஏற்கப்பட முடியாதனவாகக் காணப்பட்டன எனத் தெரிவித்துள்ளன. டேவிட் வோணர் பங்குபற்றிய டெல்லி டெயாடெவில்ஸ் அணி, 16 போட்டிகளில், 3 போட்டிகளில் மாத்திரம் வெற்றிகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியை துஷ்பிரயோகம்செய்ய முயன்ற இராணுவ சிப்பாய் மக்களால் நையப்புடைப்பு

## உடையார்கட்டில் நேற்று காலை சம்பவம்

புதுக்குடியிருப்பு, மே 21
பாடசாலை மாணவி ஒருவரைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற இராணுவச் சிப்பாயைப் பொதுமக்கள் ஒன்றுகூடி நையப்புடைத்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை உடையார்கட்டு பகுதியில் இடம்பெற்றது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது; நேற்றுக் காலை மாணவி ஒருவர் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த போது அவ்வீதி வழியாக சிவில் உடையில் வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மாணவியை கையில் பிடித்து இழுத்துக் கொண்டு ஆளரவமற்ற சிறு பற்றைக்குள் சென்றுள்ளார்.
இதனால் அச்சமடைந்த மாணவி அபாயக் குரல் எழுப்பவே அவ்விடத்தில் ஒன்று திரண்ட பொதுமக்கள் மாணவியை மீட்டதுடன் சம்பந்தப்பட்ட சிப்பாயை நையப்புடைத்தனர்.
பின்னர் அருகிலுள்ள தேராவில் இராணுவ முகாமுக்கு தகவல் வழங்கப்பட்டது. அவ்விடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் சம்பவத்துடன் தொடர்புடையவர் இராணுவச் சிப்பாய் என்று உறுதிப்படுத்தியதுடன் அவருக்கு எதிராக தாம் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி தம்முடன் அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (400-6)

# செட்டிகுளம் வயல் வெளிகளை உரிமை கோரும் இராணுவம்

## விவசாயிகள் கடும் விசனம்

மன்னார்,மே 21
வவுனியா செட்டிகுளம் அருவித் தோட்டம் வயல் வெளிகளை படையினர் உரிமை கோரியுள்ளமை விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் செயல் எனச் செட்டிகுளம் கமநல கேந்திர நிலையத்தின் தலைவர் முஹமட் அப்துல் கரிம் கபீஸ் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-
வவுனியாவில் செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அருவித் தோட்டம் என்ற கிராமத்தில் இப் பிரதேச விவசாயிகளின் சுமார் 400 ஏக்கர் வயல் நிலங்கள் தற்போது இராணுவத்தினரால் உரிமை கோரப்பட்டுள்ளன.
இந்த வயல் பிரதேசம் செட்டிகுளத்தைச் சேர்ந்தவர்களின் பரம்பரைக் காணிகளாகும். இந்தக் காணிகளில் இராணுவத்தினர் 'உள் நுழைய வேண்டாம்' எனவும், இராணுவ காணி எனவும் எழுதி காட்சிப்படுத்தியுள்ளதுடன் இக்காணிகளுக்கு உரிமை கோரியும் வருகின்றனர்.
எனினும் இந்தக் காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை விவசாயிகள் வைத்துள்ளனர்.
இந்த நிலையில் திடீரென எவ்வித முன் அறிவிப்பும் இன்றி இராணுவத்தினரால் இவ்வாறான காணி சுவீகரிக்கப்பட்டு இடம்பெற்றுள்ளமை விவசாயிகளினால் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது என்றார் அவர். (த-12)

# இந்திய மீனவர் 26 பேரும் விடுதலை

யாழ்ப்பாணம்,மே 21
அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்த போது நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 26 பேரும் நேற்று திங்கள் கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.
சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய ஊர்காவற்றுறை நீதிமன்றினால் 26 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.
இவர்கள் கடந்த மாதம் 6 ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக 26 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களது றோலர் படகுகளும் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.
இந்த நிலையில் ஊர்காவற்றுறை பதில் நீதிவான் இ.சபேசன் 26 பேரையும் விடுவித்து 'றோலர்'களையும் ஒப்படைக்க உத்தரவிட்டார். அவர்கள் இலங்கைக் கடற்படையினரூடாக இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (த-4)

# வன்புணர்வுக் குற்றவாளிகள் கைதாகும் வரை போராட்டம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படவில்லை.
இதனைக் கண்டித்து நெடுங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை பொதுமக்களால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
நூற்றுக்கணக்கான பொதுமக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இந்தக் கவனவீர்ப்பை முன்னெடுத்தனர்.
போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கான மனு, நெடுங்கேணி பிரதேச செயலர் பரந்தாமனிடம் கையளிக்கப்பட்டது.
இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவிக்கையில்,
இந்தக் கொடூர செயலுக்கு நீதி வேண்டிப் பாடசாலைகளில் ஒரு மணி நேரம் பிரார்த்தனை மேற்கொள்ளவும். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் இராணுவத்தையும் இராணுவத்தினர் பொலிஸாரையும் குற்றம் சாட்டுகின்றனர். இங்கு சிவில் நிர்வாகம் நடப்பதாக சொல்லப்படுவதால் பொலிஸாரே எமக்குப் பதிலளிக்க வேண்டும்.
ஆண் துணையில்லாதவர்களின் விவரங்களை இராணுவத்தினர் திரட்டி வருகின்றனர். இதனால் தான் இராணுவம் இங்கிருந்து வெளியேற வேண்டும் என்கிறோம்.
இன்றைய போராட்டத்தில் தொழிற்சங்கங்கள் பங்கெடுக்காமை பெரும் பின்னடைவே அவர்கள் இவ்வாறான போராட்டங்களில் பங்கெடுக்க வேண்டும் – என்றார்.
நேற்றைய இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், விநோநோதராதலிங்கம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் தலைவர் தேவகிருஷ்ணன், வவுனியா மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் பொறுப்பாளர்கள் பரமேஸ்வரன், தயாளன், வவுனியா மாவட்ட புளொட் அமைப்பாளர் பவான் நெடுங்கேணி பிரதேச சபைத் தலைவர் பாலசுப்பிரமணியம், வவுனியா நகர சபைத் தலைவர் லிங்கநாதன் மற்றும் சமயத் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.
(த-5-422-435)


கண்ணீர் அஞ்சலி



கந்தப்பிள்ளை குகப்பிரசாதம்
(ஓய்வுபெற்ற மனிதவள உதவி அலுவலர், இலங்கை மின்சார சபை)
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
இலங்கை மின்சாரசபை (வடமாகாணம்).
(36727) (6.11)


# மனுக்கள் ஒத்திவைப்பு

கொழும்பு, மே 21
வலி.வடக்கு மற்றும் வலி. கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் காணி சுவீகரிப்புக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
அதே வேளை காணாமற்போனோர் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையும் நேற்று ஒத்திவைக்கப்பட்டது.
வலி.வடக்கு காணி சுவீகரிப்புத் தொடர்பில் மனுதாரர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் திருத்தம் மேற்கொள்ள விடுத்த கோரிக்கைக்கு அமைவாக திருத்தங்களுடன் அதனை 27 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் கடந்த 16 ஆம் திகதி ஆயிரத்து 474 பேர் சார்பில் 'ரிட்' மனு தாக்கல் செய்யப்பட்டது.
இந்த மனு மீதான விசாரணை நேற்று, நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதன் போது மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், மனுத் தாக்கலின் பின்னர் மிகவும் அத்தியாவசிய தேவைக்காக எனத் தெரிவித்து காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் காணிகளைத் துரிதமாக சுவீகரிக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுவருகின்றது. மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட நிலைமை என்பதால் மேற்குறித்த விடயத்தை மனுவில் உள்ளடக்க முடியவில்லை.
எனவே இதனை உள்ளடக்கி மனுவில் திருத்தம் மேற்கொள்ளவும், ஒத்திவைத்த நீதிவான் அன்றையதினம் திருத்தங்களுடன் அதனை சமர்ப்பிக்குமாறு பணித்தார்.
இதேவேளை படையினரிடம் சரணடைந்த பின் காணாமற்போனவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆள் கொணர்வு மனு மீதான வழக்கில் பிரதி வாதிகளான படையினர் பதிலளிப்பதற்கு கால அவகாசம் கோரியுள்ளதால் குறித்த வழக்கும் எதிர் வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
போரின் இறுதிக் கட்டத்தில் அரச படையினரின் அறிவித்தலுக்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான முன்னாள் போராளிகள் 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தனர்.
இதன் பின்னர் சரணடைந்தவர்கள் அவர்களின் உறவினர்களின் கண்ணெதிரே படையினரால் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.
இவ்வாறு சரணடைந்து காணாமல் போனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளவர்களில் ஐந்து பேர் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் ஆட் கொணர்வு மனுக்களைக் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.
வழக்கின் பிரதிவாதிகளான முல்லைத்தீவில் உள்ள 58 ஆம் படைப்பிரிவின் தலைமை அதிகாரியும் இராணுவத் தளபதியும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது பிரதிவாதிகள் சார்பில் அரசு சட்டத்தரணி நிசாந்தன் முன்னிலையானார்.
பிரதிவாதிகள் தமது வாதங்களை முன்வைப்பதற்கு கால அவகாசம் தேவை என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.
மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி வினோதனின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி கோ. ரட்ணவேல் முன்னிலையானார். (த-5)

# நடுங்குகிறது அரசு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டாம் என எனது திணைக்கள ஊழியர்களுக்கு நான் கூறவில்லை. இன்று பணிக்கு சமுகமளிக்காதவர்களின் விவரங்களையே கோரியுள்ளேன் என்றார்.
ஆயினும் இன்று எவரும் விடுமுறையில் நிற்கக்கூடாது என்றும், விடுமுறைக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை நிராகரிக்குமாறும் கூறப்பட்டுள்ளதாக சுகாதாரப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-4-86)

# புதிய மின் பட்டியல் இன்று கிடைக்கும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி
நாள்களை உள்ளடக்கும் வகையில் இந்த மின்சாரக் கட்டணப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்று மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.
அனைத்து கட்டணப் பட்டியல்களையும் அதிகரிக்கப்பட்ட கட்டணத்துக்கு அமைவாகத் தயாரிக்குமாறு மின்மானி வாசிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.
மின்சார சபையின் 43 வருட வரலாற்றில் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட 23 ஆவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.
*(மின் பட்டியல் 19 ஆம் பக்கத்தில்)* (ச-ரி)

# வடக்கில் பெரும் படைக் குறைப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கில் நாம் படையினரை நிலை நிறுத்தி வைத்திருப்பது தொடர்பில், சர்வதேச சமூகம் தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்கின்றது.
போர் முடிந்த பின்னர் எங்கள் படையினரை எங்கு வைத்திருப்பதென்பதை தீர்மானிப்பதற்குச் சர்வதேச சமூகத்துக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும் அவர் கூறினார்.
இறுதிக்கட்டப் போரில் பொதுமக்கள் நெருக்கமாக இருந்த பகுதிகளிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டனர். அவர்களே பொதுமக்களின் இழப்புக்கு காரணமாயினர்.
போரின் பின்னர் படையினர் வட பகுதியில் மக்களுக்குப் பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (த-5)

# முல்லைத்தீவில் வாக்காளர் பட்டியலை கோரும் இராணுவ புலனாய்வாளர்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இவ்வாறு பெறப்படும் வாக்காளர் பட்டியலைக் கொண்டு செல்லும் புலனாய்வாளர்கள் அவற்றைப் போட்டோ பிரதி செய்துவிட்டு மீண்டும் கிராம சேவையாளர்களிடம் ஒப்படைக்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது.
அத்துடன் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் உள்ளவர்களில் வெளிநாடு சென்றவர்கள் வேறு மாவட்டங்களுக்குச் சென்றவர்கள், இறந்தவர்கள் ஆகியோரின் விவரங்களையும் கிராம சேவையாளர்களிடமிருந்து புலனாய்வாளர்கள் பெறுவதாக கூறப்படுகிறது.
வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவப் புலனாய்வாளர்களின் இந்த நடவடிக்கை பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது.
இந்த விடயம் தொடர்பில் அறிய இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரியவுடன் தொடர்பு கொண்டபோது அரை மணி நேரத்தின் பின்னர் தொடர்பு கொள்ளுமாறு கூறினார், அரைமணிநேரத்தின் பின்னர் தொடர்பு கொண்ட போது அவர் பதிலளிக்கவில்லை. (த-5)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org